
பக்கங்கள்: 12

Registered as a Newspaper

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்

நீயூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா
4-00

PUMP
with
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

மலை: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஹு ஆடி மீ 07 உ சனிக்கிழமை ஜுல்ஹ 1409 ஷவ்வால் பிறை 18 (22-07-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 63

இணக்கம் என்றாலும் மோதல் என்றாலும் — சிறப்புச் செய்தி

# இலங்கையின் எந்த நடவடிக்கையையும் எதிர்கொள்ள இந்தியா தயார்!

## புதுடில்லியின் பிந்திய நிலைப்பாடு குறித்து பரபரப்பான தகவல்

புதுடில்லி, ஜூலை 22

அமைதிப்படையை வெளியேற்றுவதற்கு இலங்கை ஜனாதிபதி விதித்த காலக்கெடு முடிவடைய இன்னும் ஒரு வாரமே எஞ்சியிருக்கும் நிலையில் —

இது தொடர்பாக இலங்கையின் எந்த நடவடிக்கையையும் எதிர்கொள்ள இந்தியா தயாராக இருப்பதாக புதுடில்லியில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

''மோதல் என்றாலும் சரி, இணக்கம் என்றாலும் சரி எந்த முடிவுக்கும் இந்தியா தயாராகவே இருக்கிறது. எந்த வழியை நாடுவது என்பதை இலங்கை ஜனாதிபதிதான் முடிவு செய்ய வேண்டும்'' இப்படி புதுடில்லியில் வெளியுறவுத் துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்த அதிகாரி மேலும் தகவல் தெரிவிக்கையில் —

'பந்து' ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் இருக்கிறது: அவர் நெருக்கடியை விரிவுபடுத்த விரும்புகிறாரா? அல்லது நெருக்கடியின் விளிம்பில் இருந்து தப்பிச் செல்லுவதை தெரிவு செய்வாரா? — இந்த நிலையில்தான் நெருக்கடியான அடுத்த வாரம் பிறக்கின்றது.

எல்லா நடவடிக்கைகளுக்கும் தனது கதவுகளை புதுடில்லி திறந்தே வைத்துள்ளது.

ஆனால் தன்னிச்சையான — ஒருதலைப்பட்சமான — எந்த முடிவுக்கும் அல்லது பயமுறுத்தலுக்கும் பணிய புதுடில்லி தயாராக இல்லை.

அமைதிப்படை விலகல் குறித்து பேச்சுக்கள் நடத்த இந்தியா தயாராக உள்ளது. ஆனால் ஜனாதிபதி பிரேமதாஸாவின் காலக்கெடு (ஜூலை 29) வை ஏற்றுக்கொள்ள புதுடில்லி தயாராக இல்லை.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைப் பாதுகாப்புப்படையினர் பாசறைக்குள் முடக்கப்பட்டுள்ளனர்.

எக்காரணங் கொண்டும் ஜூலை 29க்குப் பின்னர் அவர்கள் வடக்கு — கிழக்கு பாதுகாப்புப் பொறுப்பை ஏற்க அமைதிப்படை அனுமதிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இன்று சஞ்சீவி!

திடீரென மின்வெட்டு காரணமாக கடந்த வாரம் சஞ்சீவியும் அதன் இணைப்பான சஞ்சிகையும் வெளிவரவில்லை: கடந்த வார பிரசுரத்திற்கு எனத் தயாரான சஞ்சிகை இன்று சஞ்சீவியுடன் வெளிவருகின்றது. ஆகையினால் திகதி மாற்றத்தை வாசகர்கள் கவனிப்பார்களாக!

— ஆசிரியர்

### இளைஞர் காயம்

நெல்லியடிப் பகுதியில் நேற்று நண்பகல் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் கொழும்புத்துறையைச் சேர்ந்த ஜோர்ஜ் அஞ்சலோ (வயது 26] என்பவராவார். (உ-9)

### இளைஞர் சடலம் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 22

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இளைஞர் ஒருவரது சடலம் யாழ்-ஆஸ்பத்திரியில் படையினரால் நேற்று ஒப்படைக்கப்பட்டது

உயிரிழந்தவர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் எனத்தெரிவிக்கப்பட்டது: (உ-9-10)

### கலரி மூடப்பட்டது

கொழும்பு ஜூலை 22

பாதுகாப்பு காரணங்களுக்காக நாடாளுமன்றத்தில் உள்ளபொதுமக்கள்கலரிமூடப்பட்டு விட்டது:

இதனை சபாநாயகர் அல்ஹாஜ் எம்.எச்.முஹம்மத் நேற்று முன்தினம் நாடாளுமன்றம் கூடிய போது அறிவித்தார்' (ஒ-எ)

### தற்பாதுகாப்பு ஆயுதங்கள் வழங்குவதில் பாரபட்சமா?

#### சபையில் சாம் தம்பிமுத்து கேள்வி

கொழும்பு, ஜூலை 22

தற்பாதுகாப்புக்கு ஆயுதம் வழங்கப்படுவதில் எதிர்க்கட்சிகளிடையே பாரபட்சம் காட்டப்பட்டிருப்பதாகக் கூறி ஈ. பி. ஆர். எல். எப்பைச் சேர்ந்த எம். பி. திரு: சாம் தம்பிமுத்து நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தார்.

அவர் அப்போது சென்னதாவது;

நாடாளுமன்றத்தில் நீண்டகால உறுப்பினர்களாக இருந்த திரு. அமிர்தலிங்கமும், திரு. யோகேஸ்வரனும் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து புளொட்டின் தலைவர் திரு. உமா மகேஸ்வரன் கொழும்பில் கொலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் தமிழ் மக்களினால் நாடாளுமன்றத்திற்குத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா பகுதியில் அமைதிப்படை முகாம் மீது விமான தாக்குதல் முஸ்தீபு?

சென்னை, ஜூலை 22

இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சு விமானம் ஒன்று இந்திய அமைதிப்படையின் வவுனியா தலைமையகப் பகுதிகளுக்கு மேலாக தாக்குதல் முஸ்தீபு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக சென்னையில் இந்திய அமைதிப்படை வட்டாரங்கள் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்த.

இது இந்தியப் படையை சீண்டும் ஒரு நடவடிக்கை என்றும் அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது (உ)

### இந்தியத் தூதர் திரும்பினார்

கொழும்பு, ஜூலை 22

இந்தியத் தூதர் எல். எல். மெஹ்ரோத்திரா கொழும்பு திரும்பிவிட்டார்:

### சுபநேரம்

22—07—1989

ஆடி 07— சனிக்கிழமை நக்ஷத்திரம்: சதயம் சுபநேரம்:

03.01 முதல் 04.31 வரை

ராகுகாலம்:

09.01 முதல் 10.31 வரை

---

### தேடுதல்

வல்வெட்டித்துறை, ஜூலை 22

வல்வெட்டித்துறை நெற்கொழு என்னும் பகுதி நேற்று வெள்ளிக்கிழமை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது. (உ-160)

தூதரகத்தில் பணிபுரியும்

### அதிகாரிகள் குடும்பங்களை இந்தியா திரும்ப யோசனை

கொழும்பு, ஜூலை 22

கொழும்பு இந்தியத் தூதரகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் தங்கள் குடும்பங்களை இந்தியாவுக்கு அனுப்பி விடும்படி இந்தியத்தூதரகம் ஆலோசனை கூறியுள்ளது.

கொழும்பில் உருவாகிவரும் பதற்ற நிலைமை கருதி முன் எச்சரிக்கை நடவடிக்கையாக இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

### தினசரி ஒரு மணித்தியாலம் பாடசாலை நேரம் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 22

இழந்துபோன பாடசாலை நாட்களை ஈடுசெய்யும் வகையில் பாடசாலை நேரங்களை ஒரு மணித்தியாலத்தால் நீடிப்பது என்று கல்வி அமைச்சு தீர்மானித்து உள்ளது.

நேற்று கொழும்பில் நடந்த கல்விப் பணிப்பாளர்கள் மாநாட்டில் கல்வித்துணை அமைச்சரின் செயலாளர் கேர்னல் குடலிகம இதனை வெளியிட்டார்.

மதிய போசனத்துக்காக விடப்படும் 15 நிமிடநேர இடைவேளையை 30 நிமிடங்களாக நீடிப்பது என்றும்,

பாடசாலை வேலை நேரத்தை பிற்பகல் 2-30 மணிக்கு மூடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

### திருமலை கோட்டைக்குள் ஜவான் வெட்டிக்கொலை!

#### மற்றொரு ஜவான் படுகாயம்

திருகோணமலை, ஜூலை 22

இந்திய அமைதிப்படை ஜவான் ஒருவர் திருகோணமலை பிரட்ரிக் கோட்டைக்குள் வைத்து பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்; மற்றொரு வீரர் படுகாயமடைந்தார். இருவரின் ஆயுதங்களும் அபகரித்துச் செல்லப்பட்டன,

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிறு நண்பகல் வேளையில் இடம் பெற்றுள்ளது.

ஓம்பிரகாஷ் என்னும் ஜவானே வெட்டிக் கொலை செய்யப்பட்டவராவர்.

இவரும், மற்றொரு ஜவானும் ஆயுதங்களுடன் கோட்டையிலுள்ள கோணேசர் ஆலயத்திற்குச் சென்றதாகவும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பள்ளிக்குடியிருப்பில் ஷெல் தாக்கு! 10 பேர் பலி!!

#### 20 பேர் திருமலை ஆஸ்பத்திரியில்

திருகோணமலை, ஜூலை 22

கடந்த ஞாயிற்றுக்கிழமை மூதூர் பள்ளிக்குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர். 20 பேர் படுகாயமடைந்து திருகோணமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்:

காயமடைந்தவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் ஆஸ்பத்திரியில் மரணமானார்:

காயம் அடைந்தவர்களில் அனேகமானோர் சிறுவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-150)

### இன்று ஹர்த்தாலுக்கு 'புளொட்' அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

தமது அமைப்பின் தலைவர் திரு. உமாமகேஸ்வரனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இன்று அரச தனியார் பொது ஸ்தாபனங்களை மூடி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படியும், இன்றிலிருந்து எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை வரை துக்கம் அனுஷ்டிக்குமாறும் அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கும் 'புளொட்' அமைப்பு கோரிக்கை விடுத்திருக்கிறது:

தமிழ்ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் யாழ். மாவட்டக் கிளையினால் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே இக் கோரிக்கை பற்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'எமது விடுதலை ஸ்தாபனம் இனத்துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு, விடுதலைப் போராட்டம் மழுங்கடிக்கப்பட்ட போதிலும் —

மக்களின் விடுதலைக்காக எமது போராட்டத்தினை

(4 ஆம் பக்கம் பார்க்க)

---

### 12 எம்.பி.க்கள் சத்தியப் பிரமாணம்

ஈழவர் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த 12 உறுப்பினர்கள் நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

### இலங்கை நிலைமை பற்றி டில்லியில் தினமும் ஆராய்வு

புதுடில்லி, ஜூலை 22

இலங்கை நிலைமை பற்றி புதுடில்லியில் சிரேஷ்ட அதிகாரிகள் கொண்ட முக்கிய குழு ஒன்று தினமும் ஆராய்ந்து வருகிறது.

இலங்கை அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கக் கூடும் என்றும் புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் ஊகம் தெரிவிக்கப்படுகிறது;

★ அமைதிப்படை விலக வேண்டும் என்று நாடாளுமன்றத்தை கொண்டு தீர்மா

(4ஆம் பக்கம் பார்க்க)

### அரசு-ஜே.வி.பி உடன்பாடு?

புதுடில்லி, ஜூலை 22

இலங்கை அரசு ஜே.வி.பியுடன் ஓர் உடன்பாடு கண்டுவிட்டதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் நேற்று செய்தி அடிபட்டது.

ஆனால் அதனை கொழும்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்யவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ரத்துச் செய்வது ஐக்கிய தேசியக் கட்சியில் தீவிரவாத அமைப்புக்கு எதிரானவர்கள் என்று கருதப்படும் மிதவாதிகளை வெளியேற்றுவது - ஆகியவையின் அடிப்படையில் இந்த உடன்பாடு காணப்பட்டிருக்கலாம் என்று புதுடில்லியில் கூறப்பட்டது. (உ-எ)

### யாழ்ப்பாணம் வந்த ரயிலின் எஞ்சின் டிரைவருக்கு சூடு!

#### பரந்தனில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகள் ரயிலின் உதவி எஞ்சின் டிரைவர் பரந்தனில் இடம் பெற்ற அசம்பாவிதத்தின் போது சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்,

நீண்டநாட்களின் பின்னர் பயணிகள் ரயில் நேற்று யாழ்ப்பாணம் நோக்கி வந்தபோது இந்த அசம்பாவிதம் இடம் பெற்றது.

பரந்தன் ரயில் நிலையத்தில் இடம்பெற்ற சச்சரவு ஒன்றில் இரத்தினபாலா பார்த்தி (வயது 29) என்ற சிங்கள இளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### விமானத்தில் இடமில்லை! அமைச்சர் லலித் திரும்பினார்!

கொழும்பு. ஜூலை 22

அமைச்சர் அத்துலத்முதலி அம்பாறையில் நடந்த நடமாடும் ஜனாதிபதி செயலகத் திறப்புவிழாவில் கலந்து கொள்ளவில்லை.

அதற்கான காரணத்தை அமைச்சரே கொழும்புச் செய்தியாளரிடம் சொன்னார்.

அத்துலத்முதலி சொன்னதாவது:-

அம்பாறை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள நானும் அழைக்கப்பட்டிருந்தேன்: இன்று காலை 6-54 மணிக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

உ
ஓம் சக்தி
சாவகச்சேரி
அருள்மிகு ஸ்ரீ துர்க்கையம்பாள் தேவஸ்தானம்
மஹோற்சவ விழா அழைப்பிதழ்!
அன்புடையீர்!
(23 - 7 - 89) ஞாயிறு காலை 8 00 மணிக்கு
புதிய கொடித்தம்பம் கொடியேற்றம்
(31 - 7 - 89) திங்கள் காலை 9 மணிக்கு
புதிய சித்திரத்தேர்த் திருவிழா
(1 - 8 - 89) செவ்வாய் காலை 9 மணிக்கு
தீர்த்தத் திருவிழா
(2 - 8 - 89) புதன் பிற்பகல் 3-30 மணிக்கு
பூங்காவனம்
அம்பிகை அடியார்களே! இப் பத்துத் தினங்களும் அடியார்கள் வந்து அம்பாளைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெறவும்.
அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!
வணக்கம்.
இப்படிக்கு
ப. மகாகணபதிசர்மா,
ஆதீன. தர்மகர்த்தா
(11570)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

T. V. Colour Deep Freezer மற்றும் மின்சார உபகரணங்கள் பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத்தளபாடங்களும் Type-writer Singer மெஷின் Bicycle குத்துவிளக்கு மற்றும் பல விற்பனைக்குண்டு. அத்தோடு நியாயமான விலையில் உங்கள் வீட்டுப் பொருட்களை வாங்குபவர்கள் Supeka 343 பருத்தித்துறை ரோட், நல்லூர். (11589)

புதிய மொடல் இரண்டு சக்கர உழவு இயந்திரம், பெட்டி, கலப்பைகளுடன் விற்பனைக்குண்டு. மாஸ்ரர் ஸ்ரோர்ஸ் இராசவீதி, இருபாலை. (11583)

நல்ல நிலையில் உள்ள Ford Prefect உடன் விற்பனைக்கு உண்டு. (M-100E) தொடர்பு: சுந்தரராஜன் 69, அம்மன் வீதி, கந்தர்மடம். (1308)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(DEKALB) பிறவுண் பேடு சேவல் (COBB) புரொயிலர் குஞ்சுகள் (26 – 7 – 89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3/50) உடன் பதியவும். இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) குறிப்பு:- இரவில் குஞ்சுகளுக்கு லைட் அவசியமில்லை. (1309)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புரொயிலர் இறைச்சிக் கோழி, பேட்டுக்கோழி, சேவல், விருத்துக் குஞ்சு, சூப் குஞ்சு சுத்தம் செய்து கொடுக்கப்படும். வான்கோழி, வான்கோழி முட்டை, பெண்டம் கோழி முட்டை, நல்ல இன பேண்டல் புறா, அவுல், சொக்கப்பியன் ஆகியன விற்பனைக்கு உண்டு. V.K.S: பாம், No. 12, கனகசபை ஒழுங்கை, சிவலிங்கப்புளியடி. (11591)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக்கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என் பன குறைந்த விலையில் எப்பொழும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/3007)

### கோழிக் குஞ்சு விநியோகம்

Hlsex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hyline வெள்ளை கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து, ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1052)

### தேவை

நல்ல நிலையிலுள்ள வீணை தேவை. விலையுடன் முழு விபரங்களையும் எழுதவும். தொடர்பு: விளம்பர இல: 79 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (11582)

### மணமகன் தேவை

இந்து வேளாள I.C.M.A. பட்டதாரி தனியார் கம்பனியில் வேலை பார்க்கும் 38 வயது மணமகளுக்கு வெளிநாடு செல்லவிரும்பும் மணமகன் தேவை. யாழ்ப்பாணத்தில் வீடு உட்பட சீதனம் வழங்கப்படும். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். No: 77 C/o உதயன். (11549)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் பலவித உத்தியோகங்களிலும் வெளிநாட்டிலும் – உள்நாட்டிலும் இருக்கிறார்கள். Mangala Agency Koiyathoddam, Jaffna, Sri Lanka. (11576)

### ஆசிரியர் தேவை

க. பொ. த சாதாரண தரப் பரீட்சைக்கு ஒரு மாணவனைத் தயார் செய்வதற்கு ஆசிரியர் தேவை. க. பொ. த. உயர்தரம் சித்தியடைந்தவர்கள் அல்லது ஓய்வு பெற்று மாநகரசபை எல்லைக்குள் உள்ளவர்கள் 24 ஆம் திகதி திங்கள் காலை நேரில் வரவும். 48/9 முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (11586)

### தவறிவிட்டது

சிலுவைராஜா சதாசகாய நாயகி ஆகிய நான் எனது 705071128V இலக்கமுடைய அடையாள அட்டையை கேரதீவு பஸ்ஸில் தவறவிட்டு விட்டேன். எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். (1307)

### கல்வி

Personal Classes S. K ஜீவமோகனின் (O/L) கணித வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 10 00 மணிக்கு நடைபெறுகின்றன. தொடர்பு: I. E. T. 11 B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். விவேகானந்தா அச்சகத்துக்கு எதிர்மாடி). (11423)

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் இரண்டு, நான்கு, ஆறுமாததனிப்பட்டவர்களுக்கான சிறு குழுக்களுக்கான விசேஷ ஆங்கல, சிங்கள பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்புகொள்ளவும். I.E.T கல்விநிலையம் 11.B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர்மேல்மாடி) [1029]

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் இரண்டு, நான்கு ஆறுமாத தனிப்பட்டவர்களுக்கான சிறு குழுக்களுக்கான விசேஷ ஆங்கில, சிங்கள பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும் நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: கல்யாணி ஆங்கிலக் கல்வி நிலையம், 164, ஸ்ரேசன் ரோட், சுன்னாகம். (றெயில்வே கடவைக்கு அண்மித்ததாக) . (1030)

### விற்பனைக்கு

மானிப்பாய் பிரதான வீதியிலிருந்து (இணுவில் வீதியில்) 5 ஆவது காணி (3 பரப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி வி. கனகசபை இணுவில் வீதி, மானிப்பாய். (1592)

# இருபத்தைந்து நாட்களில் 60 அரசியல் கொலைகள்

## சபையில் அமைச்சர் தகவல்

25 நாட்களில் அதாவது ஜூன் 21ஆம் திகதிக்கு முதல் இம் மாதம் 15 ஆம் திகதிவரை 60 அரசியல் கொலைகள் இடம் பெற்றன.

அமைச்சர் வின்சன்ட் பெரேரா நேற்று நாடாளுமன்றத்தில் முன் கண்ட தகவலை வெளியிட்டார்.

அவசரகால நீடிப்புப் பிரேரணையை அமைச்சர், பிரதமர் சார்பில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசினார்.

அவர் சொன்னதாவது:-

ஜூன் 21க்கும் ஜூலை 15க்கும் இடைப்பட்ட காலத்தில் அரசியல் ரீதியல்லாத 412 கொலைகள் இடம்பெற்றன.

பாதுகாப்புப் படையினர் மற்றும் பொதுமக்களிடம் இருந்து 275 துப்பாக்கிகள் அபகரிக்கப்பட்டன.

வடக்கு- மக்குப் பகுதிகளில் 69 கொலைகள் இடம் பெற்றன.

அவசரகாலச் சட்டத்தை நீக்கக் கூடிய விதமான சூழ்நிலை நாட்டில் தென்படவில்லை —இப்படி அமைச்சர் சொன்னார். (ஒ எ)

# மாவின்விலை 16 வருடங்களில் 12மடங்காக அதிகரித்துள்ளது

கொழும்பு, ஜூலை 22 இலங்கையில் கோதுமை மாவின் விலை 16 வருடங்களில் 12 மடங்காக அதிகரித்துள்ளது.

1970 73 ஜனவரிவரை ஒரு இருத்தல் மாவின்விலை 33 சதமாக இருந்தது.

1973 ஜனவரியின் பின்னர் ஒருஇருத்தல் மாவின்விலை 38 சதமாக உயர்ந்தது.

அதேஆண்டு ஜூன் மாதத்தில் 48 சதமானது. மீண்டும் அதேஆண்டு அக்டோபரில் 70 சதமாக உயர்ந்தது.

1974 ஆகஸ்டில் ஒரு இருத்தல் 1ரூபா பத்துச்சதமாகஅதிகரிக்கப்பட்டது

1977 ஜூலையில் திடீரென 86 சதமாகக் குறைக்கப்பட்டது: அதேஆண்டு ஆகஸ்டில் மீண்டும் 60 சதத்திற்குக் குறைக்கப்பட்டது

1978 மேமாதத்தில் 72 சதமாக உயர்த்தப்பட்டது. அதே ஆண்டு ஜூனில் 85 சதமாக உயர்ந்தது: ஆகஸ்டில் மீண்டும் ஒரு ரூபா 12 சதமாக உயர்ந்தது.

1979 ஜூலையில் ஒருரூபா 30 சதமாகவும் அக்டோபரில் 1 ரூபா 36 சதமாகவும் உயர்த்தப்பட்டது.

1980 ஜனவரியில் 1 ரூபா 50 சதமானது. பெப்ரவரியில் 2ரூபா 37 சதமானது. நவம்பரில் இருந்து ஒரு கிலோவின் விலை 4ரூபா 40 சதமானது.

1981 மார்ச்சில் ஒரு கிலோ 5ரூபா 50 சதமானது: செப்டம்பரில் 6 ரூபா 65 சதமானது.

1982 அக்டோபரில் 5 ரூபா 95 சதமாகவும். 1983 பெப்ரவரியில் 6ரூபா 82 சதமாகவும்-

1984 ஜனவரியில் 7ரூபா 75 சதமாகவும், அதே ஆண்டு இறுதியில் 7 ரூபா 90 சதமாகவும் உயர்ந்தது. தற்போது ஒருகிலோ மாவின் சில்லறை விலை 8 ரூபா 50 சதமாகும்.

## கடலில் விழுந்தவர் காப்பாற்றப்பட்டார்

அனலைதீவு, ஜூலை 22 படகில் சென்றுகொண்டிருந்த சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் கடலில் தவறிவிழுந்து பின்னர் காப்பாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

குமுதினி படகில் நெடுந்தீவுக்கு பயணம் செய்து கொண்டிருந்த சுகாதாரப் பரிசோதகரான திரு. எம். கணேசன் மலையடி வாரக் கடற்பகுதியில் தவறிவிழுந்தார்.

பலத்த அலைகளினூடாக அவர் அடித்துச் செல்லப்பட்டபோது படகுச் சிப்பந்திகளினால் அவர் காப்பாற்றப்பட்டார். (த-18)

### கிரிக்கெட்

# லங்கா சிமெந்து அணி மீண்டும் வென்றது

தெல்லிப்பளை இளைஞர் தெரிவுக் குழுவுக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட் அணி வெற்றியீட்டியது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய லங்கா சிமெந்து அணி 40 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ். நரேந்திரன் 44, என். சந்திரன் 41. எஸ். தர்மராஜா 33, வி. பவசிங் 33 ஓட்டங்களைப் பெற்றனர்.

ரி.பி பத்மநாதன் 3. எஸ். சிவராசா 2, பி. கிருபாகரன் 1, எஸ். நாகராஜா 1, ஆர். ரோகான் ராஜாசிங்கம் 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய இளைஞர் தெரிவுக்குழு 8 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

எஸ். நாகராஜா 72, எஸ். அருள்நேசன் 27, ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆர். ஸ்ரீதரன் 3, என். சந்திரன் 3, எஸ் தர்மராசா 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதற்கு முன்னர் நடைபெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயா விளையாட்டுக்கழக அணிக்கெதிரான போட்டியிலும் லங்கா சிமெந்து அணி விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-2)

# குடாநாட்டில் கண்நோய் வேகமாகப் பரவுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 22 யாழ் குடாநாட்டில் கண் நோய் வெகு வேகமாகப் பரவி வருகிறது.

கண்நோய் ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டதும் உடனடியாக அருகே உள்ள வைத்தியசாலைக்குச்சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார வட்டாரங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்த நோயால் பீடிக்கப்பட்டவர்கள் ஏனையோருக்கும் நோய் பரவாது கவனமாக நடந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-10)

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில்:
23 · 05 · 1924

ஆண்டவன் அடியில்:
24 · 04 · 1989

### திருமதி தாமோதரம்பிள்ளை கனகம்மா
(குளத்தடி மாமி)

குடும்பத்தின் குலவிளக்காய்
குங்குமத்தின் உறைவிடமாய்
உம் குலமக்களைக் காத்து நின்றாய்!
சிறுபொழுதில் காலனும் – உம்
சிற்றுயிரைப் பறித்தானே!
ஓய்ந்ததுவே வைகைநதி!
சாய்ந்ததுவே பெருவிருட்சம்!
வைகைதான் ஓய்ந்தாலும்
வானகமே அழிந்தாலும்
நீங்காது உம் நினைவு!
தூங்காது எம் இதயம்!

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி அகால மரணமடைந்த திருமதி தாமோதரம்பிள்ளை கனகம்மா (குளத்தடி மாமி) அவர்களின் ஈமக்கிரியையில் நேரில் வந்து கண்ணீர் மல்கக் கலந்து கொண்டவர்கள் அனுதாபச் செய்தி அனுப்பியவர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, 22- 07- 1989 இன்று சனிக்கிழமை நடைபெற இருக்கும் ஆத்ம சாந்திக் கிரியையிலும் பங்கு பற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

22- 07- 89இல் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், சகோதர சகோதரிகள்.
உற்றார், உறவினர்கள்.

162ஆம் கட்டை,
கண்டி வீதி,
பரந்தன். (1233)

## மூன்றாம் வருட நினைவுதினம்



திருமதி
தையல்நாயகி
நடராஜா

அவனியில்:
1932. 07. 21
அவனடியில்:
1986. 07. 25
திதி 1989. 07. 23

அன்பினில் நாம் வரைந்த
ஓவியமே அம்மாவே!
மூன்றாண்டு
மறைந்ததுவோ
முழு நிலவு
மறைந்ததுவோ
மனமுருகி நிற்கின்றோம்
வேறுதுணை யாரெமக்கு?

கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளை.

வி. நடராஜா.
''தாய் அகம்''
ஆனைக்கோட்டை.

## ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

### மொறிஷியஸ்

### 1989 டிசம்பர் 04-08ஆம் நாட்கள்

மேற்குறித்த மாநாட்டிற் பேராளராகவோ பார்வையாளராகவோ பங்குபற்ற இருப்பவர்கள் 1989 ஜூலை 31ஆம் நாளுக்கு முன் இந்து சமய, கலாசார, தமிழ், விவகார இராஜாங்க அமைச்சுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

இவ்வாறு தொடர்பு கொள்ளுதல் எம் நாட்டு அறிஞர்கள் கலைஞர்கள் ஆகியோர் இம்மாநாட்டிற் பங்குபற்றுதலை ஒன்றிணைத்து ஒழுங்கமைக்கத் துணை புரியும்.

எஸ். சி. மாணிக்கவாசகர்
செயலாளர்
இந்துசமய, கலாசார, தமிழ் விவகார
இராஜாங்க அமைச்சு.

244, காலி வீதி,
த. பெ. இல: 1700,
கொழும்பு - 04.
27-06-1989.

## ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
04- 01- 1945

மறைவு:
22- 07- 1984

### திருமதி இ. பராசத்தி (தேவி)

அன்பின் திரு உருவாய் அறிவின் சுடர் ஒளியாய்
பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் மூத்தவளாய்
மகிழ்வோடு வாழ்ந்து ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி
விட்டு அகன்ற தேவியே?
தாங்காது உங்கள் பிரிவு ஆண்டுகள் பல
சென்றாலும்- அம்மா

மகள்– லாவண்யா
தாய், தந்தை, சகோதரர்கள்.

கருமாரி மோட்டோர்ஸ்
தென்மயிலை,
தெல்லிப்பளை. (1228)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்



### திரு. முருகேசு வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

தாயின் மடியில்: 24 06. 1909
இறைவன் அடியில்: 22. 06. 1989

வந்த பணி முடிந்ததென்று வானுலகம் மீண்டீரோ!
இப்படியும் ஓர் நொடியில் எம்மையெல்லாம் விட்டுவிட்டு
அப்படியே போவீரென்று ஆர் அப்பா எண்ணி நின்றோம்!
கலங்கரையாய் எமையெல்லாம் கரைசேர்த்த ஐயாவே!
கலங்குகின்றோம் துயரத்தால் கண்ணீரைக்
கொட்டுகின்றோம்!

கடந்த 23-06 1989 இல் நடைபெற்ற அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு குடும்பத்தினருக்கு ஆறுதல் வழங்கி உதவிகள் புரிந்த அனைத்த அன்பு மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 22 07.89 இன்று சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

குறிப்பு: இன்றைய தினம் அன்னாரின் பெயரால் கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் அன்னதானம் நடைபெறும்.

மணியர்பதி லேன்,
கொக்குவில்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்:
(1247)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையின்றி பட்டமளிப்பு:

# உபவேந்தர்களின் கருத்தை ஆணைக்குழு கோருகிறது

கொழும்பு, ஜுலை 22

இறுதியாண்டு பல்கலைக்கழக மாணவருக்கு இறுதிப் பரீட்சை வைக்காமலேயே தற்காலிகமாக பட்டங்களை வழங்குவது குறித்து உபவேந்தர்களின் அபிப்பிராயத்தைக் கோருவது என்று பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு முடிவு செய்து உள்ளது.

மீண்டும் பல்கலைக் கழகங்களைத் திறப்பதற்கு முன்னர் இறுதியாண்டுப் பரீட்சையை நடத்துவது குறித்து உபவேந்தர்கள் சம்மதித்து இருப்பதாகத் தெரியவருகிறது.

இறுதியாண்டுப் பரீட்சை இல்லாமல் பட்டம் வழங்கும் திட்டம் குறித்து சாதகமான பதிலை உபவேந்தர்கள் தெரிவிக்கமாட்டார்கள் எனத் தெரியவருகிறது.

இறுதியாண்டுப் பரீட்சைக்கு படிக்கவேண்டும் என்ற அக்கறையை மாணவர் மத்தியில் இது ஏற்படுத்தத் தவறிவிடும் என்று சில உபவேந்தர்கள் கருதுகின்றனர். (உ-எ)


## சொற்சிலம்பம் இல. 103

பரிசு பெற்றவர்கள் விபரம்:

முதலாவது பரிசு:
திரு. வி. செல்வநாயகம்
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

இரண்டாவது பரிசு:
திரு. இ. எறிக்யோசேப்
புனித மாட்டினுர் குருமடம்,
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றுவது பரிசு:
செல்வி ம. அசல்யா
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.



வெளிவந்து விட்டது!

## "புது - அறிவொளி"

உயர்தர கலை / வர்த்தக மாணவர்களுக்கான
விஞவிடை வெளியீடு
விலை ரூபா: 25/-, வெளியீடு இல. I
யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்

**EAGLE BATTERY CHARGING CENTRE**
Siththankerny.
(புத்தகசாலைகளுக்கு தகுந்த சழிவு வழங்கப்படும்)
[C/3073]



## குழாய்க் கிணறுகள்
TUBE WELLS

பாரிய நவீன இயந்திரங்களின் மூலம் குழாய்க் கிணறுகள், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

விவசாயிகள், குடிநீர் தேவையானவர்கள் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ரியூப் வெல் என்ஜினியேர்ஸ்,
648½, ஆஸ்பத்திரிவீதி.
யாழ்ப்பாணம்.

ரியூப் வெல் என்ஜினியேர்ஸ்,
208. ஸ்ரேசன் வீதி,
வவுனியா.
(1217)



## SITUATION VACANT

Lady Housekeeper and Companion. English educated, Young, fair, honest, healthy person, Spinster with good eyesight from Vellala family. Knowledge of English Typing, Accounts, Sewing with ability to handle TV, Radio, Fridge and Electrical & Gas Cookers preferred. Apply in own handwriting, with photo, stating age, religion, family connections free from encumbrances. Attractive terms. Interview by appointment to selected applicants.

Advertiser,
No: 567,
C/O UTHAYAN,
Jaffna.
[1231]


# யாழ். பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கல்வித்துறை

## நூலகர் கருத்தரங்கில் உபவேந்தர் உரை

யாழ்ப்பாணம், ஜுலை 22

'யாழ். பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கல்வித்துறை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதன் மூலம் பொதுமக்கள் பகுதி நேரம் கற்க வாய்ப்புக்கிடைக்கும்.'

இப்படிக் கூறினுர் யாழ். பல்கலைக்கழக உப-வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற நூலகர்களுக்கான கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

யாழ் பல்கலைக்கழக நூலகர் திரு. சி. முருகவேள் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது-

பல்கலைக்கழகம் மாணவர்களுக்கு கல்வி போதிப்பது மட்டும்போதாது சமுதாய முன்னேற்ற நடவடிக்கைகளிலும் பல்கலைக்கழகம் ஈடுபட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிருர்கள். அதைநிறைவு செய்ய வேண்டியது எம் கடமை ஆகும்.

தொழிலாளர் கல்விப்பிரிவு ஒன்றை ஆரம்பித்து தொழிலாளர் கல்விபற்றி பட்டம் வழங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. விரைவில் இத்துறை ஆரம்பிக்கப்படும்.

அத்துடன் நூலகவியல் துறை ஒன்றையும் இங்கு ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இப்படி அவர் கூறினுர்.

யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலாலா பேசுகையில், சமுதாய வளர்ச்சிக்கு நூலகங்களின் சேவை அவசியமானது. அதேவகையில் எம் திணைக்களம் நூலகங்களுக்கு உதவிவருகிறது. நூலகங்களுடன் வாசகர் வட்டம் அமைக்கப்பட்டு, குறைபாடுகள் குறித்து எமக்கு தெரிவித்தால் அவற்றைத் தீர்க்க முயற்சிசெய்வோம் என்று கூறினுர். (இ-3)

### பரிசளிப்பு விழா

கொக்குவில், தாவடி, வேம்படி முருகன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம் நடத்திய சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்புவிழா நாளை பிற்பகல் 2 30 மணிக்கு நடைபெறும்.

நிலையத்தலைவர் திரு. இ. தவராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ பஞ்சலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார். (த)

### பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஜுலை 22

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தினுல் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு வருடாவருடம் நடத்தப்படும் பாதயாத்திரை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 5.30மணிக்கு சாவகச்சேரி வாரிவனநாத சிவன்கோவிலிலிருந்து ஆரம்பமாகும். (த-6)

### நாளை கொடியேற்றம்

சாவகச்சேரி, ஜுலை 22

சாவகச்சேரி, நுணுவில் மேற்கு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இம் மாதம் 31ஆம் திகதி தேர்த்திருவிழாவும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தோற்சவமும் 2ஆம் திகதி பூங்காவன உற்சவமும் இடம்பெறும். (த-31)

# தமிழ் இலக்கியங்களை பயன்படுத்தி புவியியல் ஆராய்ச்சி செய்தவர்

## பேராசிரியர் செல்வநாயகம் நினைவு வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜுலை 22

"தமிழ்இலக்கியங்களைப்பயன்படுத்தி புவியியல் ஆராய்ச்சி மேற்கொண்ட புவியியல் நிபுணர் செல்வநாயகம்."

இப்படிக் கூறினுர் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடாதிபதி பேராசிரியர் கா. சிவத்தம்பி.

யாழ்-பல்கலைக்கழககைலாசபதி அரங்கில் புதன்கிழமை நடந்த பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரைக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

ஆங்கிலத் துணைத்துறை விரிவுரையாளர் திருமதி தயாநிதி செல்வநாயகம்படத்துக்கு மாலை அணிவித்தார்.

பேராசிரியர் சிவத்தம்பி மேலும் பேசுகையில் கூறியதாவது.

நெருங்கிய உறவுகளை என்றும் கொண்டவர் பேராசிரியர் செல்வநாயகம். இருவரும் எல்லாவிடயங்களிலும் ஒரே கருத்துக் கொண்டிராவிட்டாலும் கருத்துப்பரிமாற்றம் செய்வோம்.

புவியியல் ஆய்வை இலக்கியம் மூலம் கண்டார். சங்ககால இலக்கியங்களைக் கொண்டு புவியியல் ஆராய்ச்சி மேற்கொண்டார்.

இப்படி அவர் கூறினுர்.

கலைப்பீடாதிபதி என். பாலகிருஷ்ணன் பேசுகையில் கூறியதாவது:

"பல்கலைக்கழகங்களில் புவியியல் பாடங்களை தமிழில் கற்பிக்க இவர்தான் உதவினுர் புவியியல் ஆராய்ச்சிகளுடன் தமிழ்மொழி ஆய்வுக்கும் கட்டுரைகள் எழுதினுர். புவியியல் வளர்ச்சிக்காக அவர் பல திட்டங்களை வைத்திருந்தார் அத்திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினுர்.

புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அறிமுகவுரை நிகழ்த்தினுர். புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. செ. பாலச்சந்திரன் சங்ககால நகரங்களின் அழிவும், கடல்கோள்களின் நிகழ்வுகளும் என்னும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினுர். (இ-3)


## ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள். புதுமையான முறையில் தபால்மூலம் தமிழில் ஆங்கிலம்படியுங்கள். எளிய அஞ்சல் வழிப்பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

### Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து

'I am an Engineering Student Lack of English Knowledge makes It Impossible to read Extensively on our Subjects But your Project is Helpful to me now I am Pretty Confidence that I can Speak English Fluently.

**Mr. Kathiravetpillai Sivathasan,**
Muthaliyar Valavu, Vathiry,
Karaveddy.

ஆங்கிலக்கல்வியினை இலகுவாகக் கற்றுக் கொள்ள பிறைட் கல்வி நிறுவனம் செய்யும் உதவி மேலானது. தங்களின் பாடத்திட்டம் அடிப்படை அறிவு இல்லாதவர்களையும் ஓரளவு மனிதனுக்கும் என்பதில் ஐயம் இல்லை. எனக்கு தங்கள் பாடத்திட்டம் மிகவும் உதவியது. நன்றி.

**திரு. எஸ். முகமட் இத்திரிஸ் பி. ஏ. (இலங்கை)**
171, பொது நூலகவீதி, மருதுமுனை,
கல்முனை.

தங்கள் நிறுவனத்தால் நடத்தப்பட்டுவரும் ஆங்கிலப் பயிற்சியில் கல்விகற்றதால் எனக்கு ஆங்கிலம் பேசக் கூடிய நிலையும், மற்றவர்கள் கூறுவதைப்புரிந்து கொள்ளக்கூடியதாகவும் உள்ளது.

**செல்வி கே. இந்திரகலா**
89, சாரைக்காட்டு லேன், வண்/வட மேற்கு,
யாழ்ப்பாணம்.

ஆங்கிலப் பயிற்சியினைச் செய்து வருவதால் கூச்சமின்றி நாமும் ஆங்கிலம் பேசலாம் என்றதோர் புதிய உற்சாகமும், தென்பும் பிறந்துள்ளது.

**செல்வி என். உமையாள்**
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க:

**BRIGHT TRAINING CENTRE,**
P. O. Box 162, COLOMBO.
(C/3071)



நம்பிக்கை நாணயத்தின் சின்னம் → ஷப்ரு

உங்கள் நலனே எங்கள் குறிக்கோள்



நிதித்துறையில் உங்கள் நண்பன்

SHABRA UNICO FINANCE LIMITED
61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL: 589310, 500576.
ஷப்ரு யுனிக்கோ பினுன்ஸ் லிமிட்.
யாழ் முகவர்: 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073-24805



25,000 ஆசிரியர் பயிலுநர் ஆட்சேர்ப்பு
போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி

## பொதுஅறிவு - பொது உளச்சார்பு

(1984, 87 Jan, 87 Aug நடைபெற்ற பரீட்சைகளின் மாதிரி விஞத்தாள்களையும் - விடைகளையும் உள்ளடக்கியது.
அஸ்ரன் வெளியீடு - விலை ரூபா 65.50
யாழ்நகரில்:- பூபாலசிங்கம் புத்தகசாலை; ஸ்ரீலங்கா புத்தகசாலை, ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்
மொத்தமாகப் பெற:-

**அஸ்ரன் பதிப்பகம் (இன்ஸ்ரிரியூட்)**
166/1, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்,
(A. S. சங்கரப்பிள்ளை கட்டடம் 1 ஆம் மாடி,
(C/3078)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மில்க்வைற் அபிமானிகளுக்கு ஓர் வேண்டுகோள்**

இம்முறை மாவிட்டபுரம் ஆலயத்தில் தவிர்க்க முடியாத காரணங்களினால் எங்கள் காட்சிச்சாலை அமையவில்லை. எனவே, அன்பர்கள், ஆதரவாளர்கள் தாங்கள் சேகரித்து வைத்திருக்கும் மேலுறைகளை எங்கள் கந்தோரிலோ அல்லது கடிதமூலமாகவோ தொடர்பு கொண்டு தங்களுக்குரிய பெறுமதிவாய்ந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும். ஆதரவாளர்களின் சிரமத்திற்கு மன்னிக்கவும்.

-மில்க்வைற், யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

22 - 07 - 1989 சனிக்கிழமை

"மனதில் எழும் தீய எண்ணங்களெல்லாம் அகற்றப்பட வேண்டும். ஒரு தீய எண்ணத்திற்கு இடம் தந்தால் உடனே கோட்டைத் துவாரத்து வழியாகப் பகைவருடைய படைகள் நுழைவதுபோல், ஆயிரக்கணக்கான தீய எண்ணங்கள் வந்து நுழைந்துவிடும்"

—ராஜாஜி.

25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை சேகரித்து அனுப்பி ஔவையார் இயற்றிய நல்வழி என்ற அரிய புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.

## மலையகத்தில் வீடு வீடாக ஜே. வி. பியினர் தேடுதல்!

மலையகத்தில் சில பகுதிகளில் வீடு, வீடாக ஜே. வி. பியினர் தேடுதல் நடத்தி வருவதாக அறியவந்துள்ளது.

இரவு நேரங்களில் ஆயுதபாணிகளாக நுழையும் இவர்கள், ஆயுதங்கள், இந்தியப் பொருள்கள் உள்ளனவா என்று கேட்டு சோதனையிடுகின்றனர்.

வீடுகளில் இந்தியப்பொருள்கள் காணப்பட்டால் அவை பொது இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

## அமைதிப்படை விவகாரம் விரைவில் தீர்வு கிட்டும்

### தகவல்துறை அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூலை 22

அமைதிப் படை விலகல் தொடர்பான முட்டுக்கட்டைக்கு இன்னும் சில தினங்களில் தீர்வு காணப்பட்டு விடும் என்று தகவல் துறை துணை அமைச்சர் திரு: ஏ. ஜே. ரணசிங்க நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கக் கூட்டத்தில் துணை அமைச்சர் பேசினார்.

அவர் அப்போது சொன்னதாவது:

அமைதிப்படை விலகல் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே மோதல் உருவாகும் என்ற கேள்விக்கே இடமில்லை.

இந்தியா பலத்தில் பெரிய நாடு. ஆனால் அறிவுள்ள நாடு. ஆனால் இந்தியா ஆக்கிரமிக்க முயன்றால் நாம் அதை எதிர்த்துப் போராடுவோம்.

நாம் அழிந்து போகலாம். எம்மை ஆக்கிரமிக்க ஒருவரையும் அனுமதிக்கமாட்டோம்.

எப்படியாயினும் ஆக்கிரமிப்பு நடவடிக்கை எதிலும் இந்தியா ஈடுபடாது என்று நான் நம்புகின்றேன்.

கொழும்பு அரசின் விருப்பத்துக்கு மாறாக, அமைதிப் படையை இலங்கையில் ராஜீவ் காந்தி தொடர்ந்து வைத்திருப்பாரானால் அவர் உலகின் எதிர்ப்பையே சம்பாதிப்பார்.

அமைதிப்படை விலக வேண்டிய காலக்கெடு குறித்து ஜனாதிபதி பிரேமதாஸா உறுதியாகவே இருக்கிறார்.

— இப்படி துணை அமைச்சர் சொன்னார். (உ-எ)

## கதிர்காம குண்டுவெடிப்பு; இதுவரை 9 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 22

கதிர்காமம் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் ஒன்பது பேரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

கடந்த செவ்வாய் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் 13 பேர் இறந்தனர். 99 பேர் காயமடைந்தனர்.

படுகாயங்களுக்காளான 40 பேரில் 17 பேர் பதுளை ஆஸ்பத்திரியிலும் 23 பேர் கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-எ)

## தற்பாதுகாப்பு ஆயுதங்கள்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யப்பட்ட எமக்கு கொழும்பில் வாழ்வதற்கோ, சபையின் அமர்வுகளில் கலந்து கொள்ளவோ போதிய பாதுகாப்பு இல்லை என்றே கருத வேண்டியுள்ளது.

நாம் இச் சபைக்குத் தெரிவாகி 6 மாதங்களுக்கு மேலாகியும் இந்த அரசாங்கம் எமது பாதுகாப்புக்குத் தேவையான ஆயுதங்களை இன்னும் தரவில்லை.

ஆனால் இச்சபைக்கு இந்த உரை நிகழ்த்தும்வரை வராதிருக்கும் ஈரோஸ் உறுப்பினர்கள் 13 பேருக்கும் ஒவ்வொருவருக்கும் தலா 5 என்ற அடிப்படையில் ரி-81 நவீன தானியங்கி இயந்திரத் துப்பாக்கிகள் கடந்த 16 ஆம் திகதி வழங்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் இப்படி பாரபட்சம் காட்டுவது ஏன்?

சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஷொட்கன், றிப்பீற்றர், ரைபிள், ரிவோல்வர் ஆகியவை மாத்திரமே கொடுக்கப்பட்டுள்ளது.

நாம் ஆயுதங்களைக் கேட்டபோது இவ்வாயுதங்களை கையாள்வதற்கான பயிற்சியை எமது மெய்ப்பாதுகாவலர் பெறவேண்டும் என கூறினர். ஆனால் இன்றுவரை எமது மெய்ப்பாதுகாவலருக்குப் பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

எமது பாதுகாப்பு சம்பந்தமாக இவ்வரசாங்கம் அக்கறையில்லாது இருப்பது மாத்திரமல்லாமல், எம்மை கொழும்பில் கொலை செய்வதற்கான நிலைமையினையும் ஏற்படுத்தியுள்ளது.

எமது பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை இவ் அரசாங்கம் எடுக்கும்வரை இச் சபையின் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை இச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

மற்றைய ஏழு மாகாணங்களில் 5 மாகாணசபை உறுப்பினர்கள் அனைவர்க்கும் ஒவ்வொருவருக்கு 5 மெய்ப்பாதுகாப்பாளர்களும் தரப்பட்டுள்ளனர். ஆனால் வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒரு ஆயுதம் தானும் வழங்கப்படவில்லை — என்று தெரிவித்தார். (உ)

## திருமலை:-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு வைத்துக் கடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது

கொலையுண்ட ஜவானின் சடலம் கோணேசர் ஆலயத்திற்கு அருகிலுள்ள கற்பாறையில் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்தியப் படையினரும் இலங்கைப் பொலிஸாரும் கூட்டாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஒருவர் கைது செய்யப்பட்டார். ஆயுதங்கள் மீட்கப்பட்டன. (உ-150)

## இன்று..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்துச் சென்றவேளை எதிர்ப் புரட்சியாளரினால் கொடூரத்தனமாக அவர் படுகொலை செய்யப்பட்டதைக் கழகத் தோழர்கள் அனைவரும் மிகுந்த வேதனையுடன் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறான கொலைகள் மூலம் எந்த ஒரு விடுதலை ஸ்தாபனத்தையும் அழித்துவிட முடியாது. இதனைக் கொலையாளிகள் உணரவேண்டும். இது வரலாறு கண்ட உண்மை.

— இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## ஆசிரியருக்கு சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு இன்னும் சில தினங்களில் சம்பளம் கிடைக்கும்.

ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவது சம்பந்தமான வங்கி உத்தரவு கொழும்பில் இருந்து நேற்றுக் கிடைத்தது.

இதை அடுத்து சம்பளம் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-3)

## சாரதி தாக்கப்பட்டார்

வல்வெட்டித்துறை ஜூலை 22

பஸ் சாரதியான எஸ். நடராசா என்பவர் நேற்றுக்காலை 11 மணியளவில் கோப்பாய் பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டார்.

பருத்தித்துறை சாலையில் கடமையாற்றும் இவர் 750 இலக்கப் பாதையில் பஸ்ஸை செலுத்திக் கொண்டிருந்தபோது பஸ் வழியில் மறிக்கப்பட்டதாகவும்—

பஸ்ஸில் இருந்த பெண் பயணிகள் பஸ்ஸை விட்டு இறங்காததற்காக இவர் தாக்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது. (உ- 160)

## செய்திச் சாரம்

### சரக்கு ரயிலும் வந்தது

யாழ்ப்பாணம் ஜூலை 22

எரிபொருள்மற்றும் உணவுப் பொருட்களுடன் நேற்று சரக்கு ரயில் ஒன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது.

பெரும் தொகையானமாவும் சீனியும் இதில் கொண்டு வரப்பட்டது.

இதேவேளை இன்னும் ஒரு சரக்கு ரயில் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-10-6)

### விரிவுரைகள் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 22

யாழ்- பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடமாணவியான ராஜாம்பிகை நடராசாவை விடுதலை செய்யக்கோரி நேற்று மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

பல்கலைக்கழக நிர்வாகமும் மாணவியை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. (ஒ-3)

### நிறைவு விழா

யாழ்ப்பாணம் ஜூலை 22

நல்லூர் பரி.யாக்கோபு ஆலயத்தின் 161ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று 22ஆம் திகதியில் இருந்து 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வரை மிக விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-13)

### வவுனியாவில் இரங்கல் கூட்டம்

திரு. அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்து முகமாக பல தமிழர் அமைப்புகளும் இணைந்து இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா மகாவித்தியாலய மண்டபத்தில் ஓர் இரங்கல் கூட்டத்தை நடத்தவுள்ளன. பண்டிதர் எஸ். கந்தையா கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். (உ)

### வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வட இலங்கை சங்கீத சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு நல்லூர் ஸ்தான பாடசாலையில் கல்விப்பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி தலைமையில் நடைபெறவிருக்கிறது. (உ)

## ட்ரக் — வான் விபத்து சாரதி பலி! கிளீனர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

படையினர் டிரக் — வான் விபத்தில் வான் சாரதி பலியானார்.

வானும் பலத்தசேதமடைந்தது. கிளீனரும் படுகாயமடைந்தார்.

நேற்றுக் காலை 8.30 மணி அளவில் பருத்தித்துறை வீதியில் நீர்வேலிக்கும் புத்தூருக்கும் இடையில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

விபத்தில் மரணமானவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மார்க்கண்டு ருஷீந்திரம் (வயது 44) எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த திருச்சிற்றம்பலம் இரட்ணசபாபதிப் பிள்ளை (வயது 42) யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (உ-9-10)

## யாழ்ப்பாணம்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞரே இவ்வாறு படுகாயமடைந்தார். இவர் அநுராதபுரம் ரயில் நிலையத்தின் கீழ் கடமையாற்றி வந்தவர்.

இவரது முழங்காலுக்கு கீழ் குண்டுபாய்ந்து பெரும் முறிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பரந்தன் சம்பவத்தை அடுத்து அதே ரயிலில் யாழ்ப்பாணம் கொண்டுவரப் பட்ட அவர் உடனடியாக யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் தற்போது அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்த ரயில் நேற்று மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

பரந்தன் சம்பவத்தை அடுத்து தொடர்ந்து யாழ்—கொழும்பு ரயில் சேவையை நடத்துவதில் இழுபறி நிலை ஏற்பட்டிருப்பதாக யாழ் ரயில் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9-6)

## இலங்கை நிலைமை.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னம் நிறைவேற்றுதல்.

★ இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ரத்துச் செய்வது.

★ அவசரகாலச் சட்ட விதிகளைப் பயன்படுத்தி நாடு முழுவதிலும் உள்ள மாகாண சபைகளைக் கலைப்பது.

★ இந்தியப்படை ஜூலை 29இற்குப் பின்னர் இலங்கையில் இருப்பதன் மூலம் அமைதிப்படை ஆக்கிரமிப்புப் படையாக மாறிவிட்டது என சர்வதேச நீதிமன்றிலும், ஐ. நா: சபையிலும் முறைப்பாடு செய்வது!

இத்தகைய நடவடிக்கைகளில் எது எடுக்கப்பட்டாலும், அதற்கு உடனடியாகவே பதில் நடவடிக்கை எடுக்கக்கூடியதாக அதிகாரிகள் குழு தயார் நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## நல்லை ஆதீனத்தில் இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

திருமதி. வாசஸ்பதி ரஜீந்திரனின் இசை அரங்கேற்றம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும். (உ)

## இலங்கையின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

காது.

முகாம்களை விட்டு இலங்கைப் படையினரை வெளியே செல்ல ஜனாதிபதி பிரேமதாஸா உத்தரவிட்டாரானால் 'மோதல்' (Confrontation) என்பதே அதன் முடிவாக இருக்கும்.

எந்த நிலையையும் சமாளிக்கவும் புதுடில்லி அரசு தயாராக இருக்கிறது என்றாலும் கொழும்பு அரசு புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளும் என்ற நம்பிக்கையை இந்திய அரசு இன்னமும் இழந்துவிடவில்லை.

— என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அமைதிப்படை விலகல் குறித்து பசு இலங்கை தயாராக இல்லாத பட்சத்தில், அமைதிப்படை விலகல் பற்றி இந்தியா தன்னிச்சையாக செயல்படும் என்பது தெளிவாகி விட்டது.

ஆனால் அப்படி படையை விலக்குவதும், வடக்கு—கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்குவது சம்பந்தமான முன்னேற்றத்தைப் பொறுத்தே இருக்கும் என்று புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## விமானத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமான நிலையம் சென்று விசேட விமானத்தில் ஏறினேன்.

உள்ளே எல்லா ஆசனங்களிலும் அமைச்சர்களும் துணை அமைச்சர்களும் அதிகாரிகளும் உட்கார்ந்திருந்தனர். 40 ஆசனங்களில் ஒன்றுகூட பாக்கி இல்லை.

நான் விமானத்தை விட்டிறங்கி வீடு சென்றேன்.

இதை எல்லாம் நான் கவனத்துக்கு எடுப்பது இல்லை. இவை குறித்து நான் கவலைப் படுவதும் இல்லை!

இப்படி அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார். (உ-எ)

## மரண அறிவித்தல்

### திரு. கதிரிப்பிள்ளை நடராசா

(தோடம்பழம்)

மல்லாகம் கதிரிப்பிள்ளை நடராசா (வடபிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில்) உத்தியோகஸ்தர் 21-07-89 அன்று அகாலமரணமடைந்துவிட்டார்.

இவர் விசாலாட்சியின் அன்புக் கணவரும், கோகுலனின் பிரியமுள்ள தந்தையும், பார்வதிப்பிள்ளை, அன்னபூரணம், அன்னராசா (கனடா), அழகராசா (பழம்பிள்ளையார், ரூவர்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம், பாலசிங்கம், புஸ்பராணி, செல்வநாயகி ஆகியோரின் மைத்துனரும், சர்மினி, காயத்திரி, தாரணி ஆகியோரின் பெரிய தகப்பனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 22-07-89 இன்று சனிக்கிழமை 12.00 மணிக்கு மல்லாகத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. அழகராசா.

கோட்டுரோட்,
மல்லாகம்.

(1257)

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி கிருஷ்ணகுமார் (இராஜன்)

உடுவிலைச் சேர்ந்த காலஞ் சென்ற கிருஷ்ணபிள்ளை கந்தசாமி, திருமதி குணவதி கந்தசாமியின் அன்பு மகனுமாகிய கிருஷ்ணகுமார் (இராஜன்) சுவிற்சலாந்தில் காலமாகிவிட்டார் என்பதை அறியத்தருகின்றோம். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. ஜதீஸ்

உடுவில்

[1207]

### திரு. க. இராசசிங்கம்

(இளைப்பாறிய தலைமையாசிரியர், முன்னாள் செயலாளர், இலங்கை அரசினர் ஒய்வூதியம் பெறுவோர் சங்கம், வடமராட்சிக்கிளை)

கரணவாய் கிழக்கைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை இராசசிங்கம் அவர்கள் காலமானார். இவர் திரு பாலசுப்பிரமணியம் C. T. B. பருத்தித்துறை) திருமதிகள் விஜயலட்சுமி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. மு. குமாரவேல் (வர்த்தகர், கிளிநொச்சி), திரு: கா. கோவிலானந்தம் (C T.B. கிளிநொச்சி), திருமதி பா. விமலாதேவி ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (22-7-89) காலை 10 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
குடும்பத்தினர்.

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(1250)

### திருமதி P. F. R. அந்தோனிப்பிள்ளை (ராணி)

(ஆசிரியை யாழ் மாதகல் புனித தோமையார் வித்தியாலயம்)

திருமதி P. F. R. அந்தோனிப்பிள்ளை (ராணி) 18 7-89 இல் அகாலமரணமானார்: இவர் காலம்சென்ற திரு. J. S. அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் அன்சலம், டனி (Switzerland) ஆகியோரின் பாசமுள்ள தாயும், றெபேக்காவின் பட்சமுள்ள மாமியும், மனோஜ் றெறன்ஸ், றுமேஷ் ஆகியோரின் அருமைப் பாட்டியும், காலம் சென்ற G. E. ஆரோக்கியசாமி, திருமதி லில்லி ஆரோக்கியசாமியினதும் சிரேஷ்ட புத்திரியும், காலம் சென்ற J. சூசைமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், லூச், மாட்டீனா கமலா, றூஜேஸ், பிளஸிடஸ் ஆகியோரின் அன்பு அக்காவும், A. E. நவரட்ணராஜா, S. சவரிமுத்து, பற்றிமாமலர், ரதி ஆகியோரின் அருமை மைத்துனியும், காலம் சென்ற அருட்திரு L. A. சிங்கராயர் O. M. I. அவர்களின் மருமகளும், அருட்திரு S. A. மைக்கல்சாமி O.M.I. அவர்களின் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதி வழிபாடுகள் 24-7-89 திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கு மாதகலில் நடைபெறும் என்பதை உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன்:

தகவல்:
லூக் ஆரோக்கியசாமி

இம்மனுவேல்லொஜ்
மாதகல்:

(1251)

### இராசரத்தினம் தவராசா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் இராசரத்தினம் தவராசா 1989-07-20 ஆந் தேதி சிவபதமடைந்து விட்டார்:

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மனோகரன் (Air-Lanka), ஸ்ரீகரன் (Australia), கருணாகரன் (U.K.), யசோதரா (Oman) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மல்லிகா, Dr. பாலரஞ்சினி (Australia), சிவசக்தி (U.K.), கிருஷ்ணராஜ் (Oman), ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தங்கரத்தினம், இராசலட்சுமி, தர்மராசா, தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஹம்ஷாயினி, தக்ஷாயினி, மயூரி, பிருந்தாவன், அரவிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், மாவிட்டபுரம் ஆ. க. சின்னத்தம்பு, காலஞ்சென்ற சி. எம். அமரசிங்கம், திருமதி பொன்னம்பிகை தர்மராசா, திருமதி சிவபாக்கியம் தியாகராசா, திருச்சிற்றம்பலம், திருமதி காந்திமதி செல்லத்துரை, திருமதி சிவகாமியம்மாள் இராமநாதன், திருமதி நாகேஸ்வரி பரமநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று (1989-07-22 சனிக்கிழமை) அன்னாரின் இல்லத்தில் நடத்தப்பெற்று, பூதவுடல் தகனத்துக்காகப் பிற்பகல் 1-00 மணிக்குக் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் வேண்டப்படுகின்றனர்:

தகவல்:
த. மனோகரன்

17/3, ஐயனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை.

(1259)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 333/3 இலக்கத்தில் [illegible]

பேரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 89, 90, 91
பொருளியல்
திரு. ஸ்ரீரங்கநாதன், திரு. உதயன்
கணக்கியல்
திரு. வன்னியசிங்கம்
வர்த்தகமும் நிதியும்
திரு. தேவா
புவியியல்
திரு. வேலாயுதபிள்ளை



சஞ்சீவி சஞ்சிகை

15 - 07 - 1989 சனிக்கிழமை



பேரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 89, 90, 91
இந்துநாகரிகம், தமிழ்
திரு. பாலா
அளவையியல்
திரு. சந்திரராஜா
அரசியல்
திரு. செபராஜா
வரலாறு
திரு. புஷ்பரட்ணம்
A/L 89 Paper Class நடைபெறுகின்றது.


## கருத்துக் கலசம் — மயூரா

### சமூக ஆபத்து

வெறும் ஏட்டுக் கல்வியினால் சமூக, பொருளாதார வளர்ச்சிகளில் ஏற்படும் பாதிப்பு இப்போது பலராலும் உணரப்படுகிறது. நடைமுறையிலும் வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. தொழில் சார்ந்த கல்விமுறையின் முக்கியத்துவத்தை உலக நாடுகள் பலவும் எப்போதோ உணர்ந்து விட்டன. எனினும் அது இப்போது தான் மெது மெதுவாக, ஓரளவுக்கு இங்கு உணரப்பட்டு வருகிறது எனலாம். ஆனால் அந்த உணர்வைச் செயற்படுத்துவதற்கான முழு அளவிலான, முழுமூச்சான நடவடிக்கைகளைக் காணமுடியவில்லை.

தொழில் சார்ந்த கல்விக்கு ஆரம்பப் படியாக மிகச் சமீபமாகத் தொடங்கப்பட்ட முறைசாராக் கல்வித் திட்டத்தைக் கூறலாம்.

எமது பிரதான மூல வளங்கள் எவை, புதிதாகப் பயன்படுத்தக் கூடிய மூல வளங்கள் எவை என்று இனங்காணுதல் வேண்டும். அவற்றை அடிப்படையாகக்கொண்டு உருவாகக் கூடிய, உருவாக்கக் கூடிய தொழில்கள் என்ன என்று வகுக்கப்பட வேண்டும். அவற்றை இலக்காகக் கொண்டு, அவற்றுக்கு மாணவரை இட்டுச்செல்லும் அடிப்படை நோக்கோடு தொழிற்கல்வி அமைய வேண்டும்.

இதேவேளை, தொழில் பேதம் பாராட்டும் எங்களது பாழ்பட்ட பழக்கம்' மரபு, பரந்த அளவிலான தொழிற் கல்விக்குக் குந்தகம் ஏற்படுத்தும் என்பதை அதிகாரி ஒருவர் கோடிட்டுக் காட்டி உள்ளார். இது பெரும் சமூக ஆபத்து.

ஒருவன் தனது ஆற்றலுக்கும், திறமைக்கும் உகந்த தொழில் நாடிய கல்வியைப் பெறுவதால் மட்டுமே சமூக, பொருளாதார வளர்ச்சியைக் காண முடியும். இதனை உணராது, தொழில் மகத்துவம் புரியாது, வர்க்க பேதம் தொழில் பேதம், சமூக பேதம் என்பவற்றைத் தொடர்ந்து கடைப்பிடித்து, பேணி, நிலை நிறுத்தமுயன்றால் தமிழர்களுக்கு எழுத்துத்துறையிலும் விடிவு இல்லை.

வர்க்கபேதம், தொழில் பேதம் ஒழிக்கப்படும் விதத்தில் சமுதாய விழிப்புணர்ச்சி தேவை. அந்த விழிப்புணர்ச்சி செயல்வடிவம் பெற்றால் மட்டுமே உண்மையான சமுதாய மறுமலர்ச்சியைக் காணமுடியும். அதற்குச் சட்டங்கள், திட்டங்கள் — நிர்ப்பந்தங்கள், கட்டாயங்கள் — எதுவும் குறிப்பிடத்தக்க அளவில் உதவ மாட்டா.

மக்கள் மனங்களில், நோக்கில் மாற்றம் அவசியம். அந்த மாற்றம் இல்லையேல் பொருளாதார சுபீட்சத்தையோ, சமூக முன்னேற்றத்தையோ நினைத்தும் பார்க்க முடியாமல் தொடர்ந்து சீரழிவதே பெறுபேறாக விளையும். ★

# ஜீவகாருண்ய உணர்வை ஊட்டி தமிழ் வளர்த்த தங்கத்தாத்தா!

...ஐம்பது ஆண்டுகள் பின்னோக்கிப் பார்க்கிறேன். திரைப்படக் காட்சிபோல் தெரிகிறது.

அந்த நீலவர்ண ஒற்றைத் திருக்கல்வண்டி. மெலிந்து உயர்ந்த உருவம் ஓட்டி வருகிறது.

சுருண்டு வளர்ந்த கேசம். முக்குறியும் பொட்டும் இடப்பட்ட பரந்த நெற்றி, வட்ட வடிவமான ஆடிகளைக் கொண்ட பொற்கம்பியால் மருவியது போன்ற மூக்குக் கண்ணாடி, அதனூடாகப் பாயும் கவர்ந்த கூரிய பார்வை, வெண் மீசை, நன்றே நீண்ட பஞ்சுபோன்ற -இல்லை-மினுங்குகின்ற வெள்ளிக்கம்பி போன்ற தாடி—

'ஏய், ஏய்! இந்தா, இந்தா' என்று ஜல் ஜல் என்ற தாளத்திற்கு அமைய நடைபோடும் மாட்டின் கழுத்துச் சலங்கை ஒலிக்க—

வீதி வழியே வருகிறார் தங்கத் தாத்தா.

ஆம், முதிர்ந்த பருவத்து மகான் நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

திருக்கல்வண்டிலின் சத்தம் கேட்டதும் எட்டிப்பாராதார் எவரும் இல்லை.

புலவர், புலவர் என்றதும் வீதிக்கு ஓடிவந்து நின்று பார்க்காத குழந்தைகளும் இல்லை, இப்போது அவர்கள் முதியவராய், முதிர்ந்தவர்களாக இருப்பார்கள்.

**கம்பீர நடை**

புலவரின் கம்பீரநடை பெரியவர்களை மட்டுமல்ல, குழந்தைகளையும் வெகுவாகக் கவர்ந்தது.

ஏனெனில் குழந்தைகள் வாழும் போதே அவரது பாடல்கள் எல்லோரது வாயிலும் தவழ்ந்தது.

தமிழர் பழக்கவழக்கம், பண்பு அழியாமல் இருப்பதற்காக அவர் நடைமுறை நிகழ்ச்சிகளையும் செயற்பாடுகளையும் செயல்முறைகளையும் பின்னவர்களும் பின்பற்றுமுகமாக தமது பாடல்களில் புகுத்தியிருந்தார்.

தங்கத்தாத்தாவைக் கண்டதும் குழந்தைகள் ஆச்சரியத்தோடு பார்ப்பார்கள்; பின்னர் பாடுவார்கள்;

ஆடிப்பிறப்புக்கு
நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம்
தோழர்களே!
கூடிப்பனங்கட்டிக்
கூழுங்குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம்
தோழர்களே!

குழந்தைகள் பாடிக்கொண்டே திருக்கல் வண்டியின் பின்னால் தொடர்வார்கள்.

தங்கத்தாத்தா வண்டியை நிறுத்திக் குழந்தைகளைப் பார்த்துப் புன்முறுவல் செய்வார்.

தாத்தாவுக்கு நாடகம் எழுதவும் நடிக்கவும் தெரியும். இதன் பயனாலோ அல்லது குழந்தைகளின் பால் உள்ள விருப்பத்தினாலோ, குழந்தைகளுடன் சேர்ந்து தானும் கைதட்டி' உடம்பை சிறிது அசைத்து அங்குமிங்குமாக கால்களை வைத்து கும்மியடிப்பதுபோல நடித்து அவர்களை மகிழ்வித்து தானும் மகிழ்வார்.

ரசித்துக்கேட்பது, சுவைத்து சாப்பிடுவது, அழகை ரசிப்பது ஆகியன அவரிடமிருந்த அரிய பண்பாகும். நல்லதை நன்கு விமரிசனம் செய்வார். பேச்சு சுவையாக, ஹாஸ்யம் தொனிக்கஇருக்கும்.



தாத்தா, குட்டியின் அப்பானார். அதன் சுவடுகளிலேயே எனக்குக் கிடைத்தது ஒரு கதை.

குட்டியின் அம்மா எங்கே? —நான் கேட்டேன்.

கொட்டிலிற்குள் நிற்கிறது —தாத்தாவின் பதில்.

அதைப் பார்க்க நான் ஆசைப்பட்டேன். தாத்தா கூட்டிச்சென்று தாய் ஆட்டைக் காட்டினார்.

தாத்தா, குட்டியின் அப்பா

**- ஸ்ரீமதி குமாரசாமி, பி. ஏ. -**

ஒருநாள் தங்கத்தாத்தா வீட்டுக்குச்சென்றேன். அவரின் முன்னால் அமர்ந்திருந்தேன்.

**ஆட்டுக்குட்டி**

அச்சமயம் ஆட்டுக்குட்டி ஒன்றுவந்து என்மீது ஏறியது.

போய், போய் அது பாவம்— ஓடு, ஓடு, —என்று ஆட்டை விரட்டினார் தாத்தா. குட்டி மீண்டும் வந்து என்னைச் சுரண்டியது.

அம்மாவிடம் ஓடு —என்று தங்கத்தாத்தா அதை விரட்டி எங்கே? —என்று நான் கேட்க அவர் பெரிதாகச் சிரித்தார்.

அருகில் இருந்தோருக்கும் நான் கேட்டதைச் சொல்லிச் சொல்லி சிரித்தார். எனக்கு வியப்பாக இருந்தது. காரணம் தெரியாமல் நானும் சேர்ந்து சிரித்தேன்.

ஆட்டுக்குட்டியின் அப்பாவின் கதையைத் தாத்தா பாடத்தொடங்கினார்.

ஆடு கதறியது என்ற தலைப்பில் அவர் பாடினார். (மகன் பலி செய்யப்பட்டதை அறிந்து தாயாடு புலம்புவதாக அவர் பாடிய பாடல் பாடல் கீழே தரப்படுகிறது.)

ஐயோ பாவம் என்ற பெருமூச்சு மட்டும் அன்று என்னுள் இருந்து வந்தது.

இன்று அதை நினைக்கும் போது... என் இரத்தம் உறைகிறது.

உயிர்க்கொலைபற்றி மட்டும் அவர் பாடவில்லை; தனது பாடல்களில் பாவச் செயல்களைச் சாடியிருக்கிறார்.

தங்கத் தாத்தாவுக்கு மிகவும் பிடித்தமான உணவு 'பச்சடி'. வேப்பந் துளிர், தூதுவளை, பிரண்டை ஆகியவற்றில் செய்யப்பட்ட பச்சடி என்றால் அவருக்கு உயிர்.

நல்ல ஆரோக்கியத்திற்கு அவை மிகவும் வேண்டற்பாலது என்பார்.

தங்கத்தாத்தா இயற்கையோடுவாழ்ந்தவர். ★

ஆசை மகனேயென் அன்பான கண்மணியே
நேசத் துரையே நெடும்பயணம் போனாயோ

ஓராறு மாதம் உடம்புநொந்து பெற்றெடுத்த
சீராளா! தெற்குத் திசைப்பயணம் போனாயோ

நேராத கோயிலெல்லாம் நேர்ந்து தவமிருந்தே
ஆராத காதலுடன் ஐயோநான் பெற்றெடுத்தேன்

கல்லுவைத்த கோவிலெலாம் கைகுவித்து நோன்பிருந்து
செல்வக் குமரா சிறப்புடனே பெற்றெடுத்தேன்

ஆரக் கழுத்தழகா அஞ்சனப்பூக் கண்ணழகா
வார நடையழகா மாராப்பு மேனியனே!
— பாஅய் பாஅய்

துள்ளு நடையழகுஞ் சோதி முகத்தழகுங்
கொள்ளுஞ் செவியழகுங் கோமளமே காண்பதெப்போ

நீல மயிரழகும் நெற்றிச் செகிலழகுங்
கோல மருப்பழகுங் கோமளமே காண்பதெப்போ

பூங்கரும்பே தேனேயென் பொன்னே நவமணியே
தாங்கிச் சுமந்தகுடல் தழலா யெரியுதடா

யாழுங் குழலுமென மின்பக் குதலைமொழி
நாளும் பொழுதுமினி நயன்கேட்ப தெந்நாளோ

அம்மா வெனவழைக்கும் ஆசைத் திருக்குரலை
எம்மா தவக்கொழுந்தே நான்கேட்ப தெந்நாளோ

புல்லுந் தவிடும்நல்ல பிண்ணாக்குந் தீற்றியுனை
அல்லும் பகலுமவர் அன்பாய் வளர்த்தாரோ

அல்லும் பகலுமவர் அன்பாய் வளர்த்ததெலாங்
கல்லுங் கரையக் கழுத்தவெட்டு வெட்டிடவோ
— பாஅய் பாஅய்

கிம்புரிப் பூணணிந்து கிண்கிணிப்பொற்றார்சூட்டி
வரிசரவு? வம்பரலங்கரிக்கப் பார்த்து மகிழ்ந்தேனே!

வன்னப்பொற் றேரேறி மாப்பிளைபோற் சென்றாயே
இன்னும் வரக்காணேன் எங்குற்றாய் எங்குற்றாய்

பெண்ணை மணந்தெனது பிள்ளைவரு வாளென்றே
எண்ணி யிருந்துநா னேமாந்து போனேனடா

காக்கைக் கரைவுங் கனவும் பலித்ததடா
ஆக்கை துடிக்குதடா அடிவயிறு வேகுதடா
— பாஅய் பாஅய்

காரியமொன் றின்றியிந்தக் கன்னெஞ்சப் பேதையர்கள்
மாரியம்மன் கோவிலிலே வாட்பலிக்கு வைத்தாரோ

பிள்ளையைப் போல்வளர்த்துப் பின்னையந்தச் சண்டாளர்
துள்ளத் துடிதுடிக்கத் துண்டாக வெட்டினரோ

காலிலொரு பாவி கழுத்திலொரு மாபாவி
கோலி யமுக்கக் கொடும்பாவி வெட்டினனோ
— பாஅய் பாஅய்

கோலி யிழுக்கக் குளறி மனஞ்சிதறி
ஆரை நினைந்தோ வழுதாயென் கண்மணியே

ஓங்கிய கத்தி விழும்போ துடல்நடுங்க
ஏங்கி யெனைநினைந்தென் னம்மாவே யென்றாயோ!

தூவாரும் மேனி சுழன்று துடிதுடிக்க
ஆவாவென வாய்விட் டையா விறந்தனையோ

நெஞ்சம் துடிக்குதடா நினைவுதடு மாறுதடா
பஞ்சிலே தீப்போற் பாழ்வயிறு வேகுதடா
-- பாஅய் பாஅய்

உன்றன் றசையரிந்தே யோலைக் குடலைக்கட்டிச்
சென்றுசென்று விற்றனரோ தின்றுபசி யாறினரோ

ஆசாரி மேலோ அதிகாரி தன்மேலோ
மாமாரி மேலோவிவ் வன்பழிதான் சேருமடா

கொன்றவன் மேலோ கொடுத்தவன் தன்மேலோ
தின்றவன் மேலோவித் தீயபழி சேருமடா

வாயில்லாச் சீவன் வதையாதீர் என்றுசொல்ல
வாயுள்ளார் நெஞ்சம் மரமோ கருங்கல்லோ

சைவமு மில்லையோ சான்றோரு மில்லையோ
தெய்வமு மில்லையோ வென்மனது தேற்றிடவே
— பாஅய் பாஅய்



நாளை ஆடிமாதம் பிறக்கின்றது.

இதை எண்ணியவுடன் நம்முடைய வாய் நம்மை அறியாமலேயே ''ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை'' என்ற பாடலைப் பாடுகின்றது.

அது மட்டுமா... 'கூடிப்பனங்கட்டி கூழுங்குடிக்கலாம் ..... கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே' —என்று வாய்க்கு ருசியும் தேடுகிறது.

இவ்வளவு 'வாய்'க்கு சுவையான பாடலின் பின்னணியில், அதை தமிழுலகுக்குத் தந்த தங்கத் தாத்தாவின் உருவமும் தெரிகிறது.

ஆண்டுதோறும் வரும் ஆடிப்பிறப்பு, தங்கத் தாத்தாவையும் தவறாமல் நினைவு கூரவைக்கிறதல்லவா!

நவாலியூரில் கதிர்காமருக்கும் இலக்குமிப் பிள்ளைக்கும் தலைமகனாக உதித்தவர் எங்கள் புலவர்மணியான சோமசுந்தரனார் ஆவர்.

தமிழ்க் கலையிலும் சைவாசாரத்திலும் சிறந்துவிளங்கிய குடும்பத்திலே விக்கிரம ஆண்டு (1880) வைகாசித்திங்கள் இருபத்தைந்தாம் நாள் சனிக்கிழமை புலவர்மணி சென்மமாயினர்,

புலவர்மணிக்கு மானிப்பாயில் இருந்த அருணாசல உபாத்தியார் வித்தியாரம்பச் சடங்கினை நிறைவேற்றிவைத்தார். புலவர் தமிழையும் ஆங்கிலத்தையும் முறைப்படி கற்றார்.

**- தெல்லியூர் செ. நடராசா -**

சைவ நூற்கல்வி கற்க விழைந்த புலவர்களை பல நல்லாசிரியர்களிடம் அவற்றைக் கற்றுக்கொண்டார்' தாமாகவும் பலவற்றைக் கற்றுக்கொண்டார்.

இவர்கள் இருபேரும் அயற்கிராமங்களிலுள்ள இளைஞரை ஒன்றுசேர்த்து, சைவ வாலிபர் சங்கம் ஒன்றினை அமைத்து அரும்பெரும் செயல்களாற்றி வந்தனர்.

புலவர் உள்ளத்தே செய்யுளியற்றலில் ஆசை பிறந்தது. பதினைந்தாம் பராயத்திலேயே செய்யுளியற்றத் தொடங்கிவிட்டார் புலவரவர்கள். அன்று தொடங்கியவர் தமது எழுபத்துநாலாம் பராயம் வரை பாடிக்கொண்டேயிருந்துள்ளார்.

புலவர்பிரான் தமது தாய் மாமனாராகிய வேலுப்பிள்ளை என்பவரது மகள் சின்னம்மையாரைத் தம் வாழ்க்கைத் துணைவியாராக வரித்துக் கொண்டார். இவர்களுக்கு மூன்று புதல்வரும் இருபுதல்வியரும் பிறந்தனர்.

அட்டகிரிப் பதிகம், சாவித்திரிகதை முதலிய நூல்களை அன்றிருந்த அறிஞர் குழாம் வெகுவாகப் பாராட்டியது.

புலவர்கள் வட்டுக் கோட்டை சைவாங்கில வித்தியாசாலையில் கல்வி கற்பித்த போது தம்பாடசாலைப்பிள்ளைகள் நடிப்பதற்கேற்ற பல நாடகங்களையும் எழுதி நடிப்பித்துவந்தார்.

இவ்வாறு எழுந்ததே உயிரிளங்குமரன் நாடகம். சைவ சித்தாந்தத்தின் முடிபுகளை வெகு நுணுக்கமாக எடுத்துக் காட்டும் சிறப்புடையது இந் நூல்.

இவருக்கு 1927 ஆம் ஆண்டில் புலவர் பட்டம் வழங்கப்பட்டது இதற்கு முன்னின்று சைவ பாலிய சம்போதினி என்னும் ஒரு பத்திரிகையை இவரது நண்பர் பண்டிதர் சுப்பிரமணியம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு 1910 ஆம் ஆண்டளவில் ஆரம்பித்து நடத்தினர்.

கலாவிநோதராக விளங்கிய எங்கள் தமிழ்மணி விசய ஆண்டு ஆனி இருபத்தாறும் தேதி (11-7-1953) புநர்வசு நட்சத்திர நாளில் பரிபூரண மெய்தினார். ★

- நன்றி: தங்கத்தாத்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கல்லறை ஒன்றுதான் அவளுக்கு ஆறுதல் அளித்தது. அவனது வீடோ? ஆசையோடு அவள் வாங்கி, பற்றுவைத்துச் சேகரித்த அவளது பொருள்களோ அவளுக்கு ஆறுதல் அளிக்கவில்லை. அதனால்தான் அந்தக் கல்லறையை அடிக்கடி நாடிச் சென்றுள் அவள்.

கொழுந்துவிட்டெரியும் சூரியஒளி மாறி மஞ்சல் வெயிலாகப் படர்ந்துகொண்டிருக்கும் வேளைகளிலெல்லாம் அந்தக் கல்லறையிலே அவளைக் காணலாம்.

பறவை இனங்களும் கால்நடைகளும் தத்தம் இருப்பிடங்களை நோக்கி விரைந்துகொண்டிருக்கும் வேளைகளில் எல்லாம் அவள் அங்கு காணப்படுவாள்.

ஆலயங்களிலுள்ள தெய்வமணிகள் ஒலித்துக்கொண்டிருக்கும் நேரங்களிலும் அவள் அங்குதான்.

அன்றும் அவள் அழுதாள். அது ஆழமான அழுகை. என்றைக்கும் எவரிடத்திலும் ஏற்பட்டிருக்காத ஒரு குமுறல்.

ஜீஸஸ் கிறைஸ்ரின் இறுதிப் பாடுகளான அந்த வேதனையை - பாரச் சிலுவை ஒன்றிலே அவர் அறையுண்டபோது ஏற்பட்ட வாதைகளை மேடை நாடகங்களிலே அவள் பார்த்திருக்கிறுள். அப்போதெல்லாம் அவளது கண்களிலிருந்து நீர்வடிய அவள் அழுவது வழக்கம்.

'தெய்வமே! என்னை பாவங்களுக்காக இப்பிடி மரிந்தாயே' என்றெல்லாம் சொல்லிச் சொல்லி அழுவதைப் பார்க்கவேண்டும்.

ஆனாலும், இன்றைய அவளது அழுகையோ ஒரு தனிவகை. மண்ணிலிருந்து கிளம்பி அந்த விண்ணை ஊடறுக்கும் ஏவுகணை போலவே காணப்பட்டது.

இந்தக் கல்லறைக்குள்ளே புதைக்கப்பட்டிருக்கும் அந்த உயிர் தனது நாடியோட்டத்தை அன்றைக்கு முடித்து ஒரு சடலமாகக் காணப்பட்டபோது அழாத இந்த ஜீவபுஸ்பம், இன்றைக்கு வட்டியும் குட்டியுமாக அழுது தீர்க்கிறுள்.

அலறலாகவும் குமுறலாகவும் வெடித்து, வானவெளியிலும் அண்டவெளியிலும் பரவிக் காற்றேடு பறக்கிறது அந்த அழுகை.

இந்த அழுகையை அன்றைக்கு இந்த ஜீவபுஸ்பம் ஜீவசுதன் இறந்த அந்த நேரத்தில் அழுதிருந்தால் ஊரும் உறவும் அவளை நிகரற்ற ஒரு ஸ்தாபனத்தில் வைத்திருக்கும்; 'உண்மையான பற்று - பாசம் இதுதான்' என்று பரஸ்பரம் கூறியிருக்கும்; பற்பல உதவிகளையும் அவளுக்குச் செய்திருக்கும்.

அன்றைக்கு அவள் அழவேயில்லை. தனது உணர்ச்சி நரம்புகளிலே ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தை அன்று கட்டியாக்கி மௌனம் சாதித்தவள், இன்று அதே நரம்புகளிலிருந்து வரும் உணர்ச்சிகளைக் கண்ணீர் வெள்ளமாக்கிக் கசிந்து அழுகிறுள்.

இந்த அழுகையோ அவளது ஊருக்குத் தெரியாத வகையில் நடைபெறுகிறது.

அவள் இருந்து அழுகின்ற இந்தக் கல்லறைக்கும் அவளது ஊருக்குமிடையிலே இரண்டு மைல் தூரம். அது கடற்கரையை அண்டியுள்ள பகுதி. அதிலிருந்து இரண்டு மைல் தூரமிருக்கும் அந்தக் கடல். ஆனபடியால், அவளது அழுகை யாருக்கும் எட்டப்போவதில்லை.

அது தெரிந்துதானே என்னவோ அவள் கதறிக் கதறி அழுகிறுள்.

'அண்டைக்கு நீங்கள் சொன்னியள் அதை நான் அசட்டைபண்ணி உங்களை மரியாதைக் கேடாய்ப் பேசிப்போட்டன். என் நன்மைக்காகத் தான் நீங்கள் சொல்லுறியள் எண்டதை நினைச்சு நான் நடக்கேல்லை. என்னை மன்னியுங்கோ— மன்னியுங்கோ.'

சுமக்க முடியாத ஒரு வேதனைச் சுமையைத் தூக்கிச் சுமந்து கஷ்டப்படும் அவளைப் பார்த்து ஆறுதல் கூறுவதற்கு அங்குள்ள அசைவற்ற இயற்கைப் பொருள்களைத் தவிர வேறு...? ஊரில்லை - உறவில்லை - தான் பெற்ற...இல்லை; இல்லை.

இப்போது அவள் ஒரு தனி உயிர். அவளது ஊரில் உள்ள எந்த மனித கண்கள் அவளைக் கண்டாலும் அவளைப் பார்ப்பதுமில்லை - பார்க்க நினைப்பதுமில்லை. எல்லா மனிதர்களும் அவளை வெறுத்துவிட்டார்கள்.

'உந்த வீட்டு உறவும் வேண்டாம் - உரிமையும் வேண்டாம். ஜீவசுதன் இருக்கும்போது போனம் வந்தம். இனி சாவுக்கும் வேண்டாம்' என்று கூறி ஒதுக்கிவிட்டார்கள் அவளை.

ஊரானின் இந்த நிலைப்பாட்டை எண்ணும்போதெல்லாம் ஜீவபுஸ்பத்தின் கண்கள் சிவந்த நீரோடையாகிவிடும்.

பால்வண்ண வெள்ளை உடுத்து, மண அலங்காரக் காரிலே தனது தமையனுடன் தான் ஆலயம் சென்றதும்;

தந்தை தாய் இல்லாத தன்னை ஆலய வாசலிலிருந்து கூட்டிக்கொண்டுபோய், பிரசங்க மேடைக்குமுன் வைக்கப்பட்டிருந்த இரண்டு கதிரைகளில் ஒன்றில் தன்னுடைய தமையன் தன்னை அமரவைத்ததும்;

ஒரு சில நிமிடங்கள் கழியுமுன் தன்னுடைய உயிரில் கலந்து உறவாடித் தன்னைக் காப்பாற்றி வாழவைக்கப் போகும் தனது மன்னவன் வந்து வலப்பக்கம் வீற்றிருந்ததும்;

திருமணச்சடங்கை ஆலயப் போதகர் நடத்திவைத்ததும்; தனது கழுத்திலே தனது மன்னவன் மாங்கல்யத் தாலியை முடிந்ததும்;

ஆலயப் பாடகர் குழுவினர் மங்கல வாழ்த்துப் பாடியதும்.

கருவேறிய தனது கர்ப்பத்திலிருந்து ஆண்குழந்தை ஒன்று பிறந்த எட்டாம் நாளில் தனது கணவன் மாரடைப்பால் இறந்ததும்;

அன்று தொடக்கம் தனக்கும் தனது மகனுக்கும் உரமாக' ஆணிவேராகத் தனது அண்ணன் இருந்ததும் படமாகத் திரையோடி முடியும்போது அவளது கண்கள் குளமாகின.

'எனக்கு நடக்கவேண்டிய எல்லாமே நடந்து போச்சண்ணை. என்ரை வாழ்க்கையிலை இனிமேல் நடக்கிறதுக்கு எதுவுமேயில்லை என்ரை வாழ்க்கை செழிக்கவேணும் எண்டுதானே கலியாணம் உங்களுக்கு வேண்டாமெண்டு நீங்கள் ஒரே பிடியாய் நிண்டீங்கள். ஆனல் இண்டைக்கு...? இனி ஆரிட்டை நான் சொல்ல...? அண்ணை-ஊரா-உறவா-கணவனு-பிள்ளையா? ஆருமே இல்லையண்ணை; எனக்கு ஆருமே இல்லை'

இதற்குமேல் அழுவதற்கு ஜீவபுஸ்பத்தால் முடியவில்லை. மகாவலிகங்கையாய் நின்ற அவளது கண்கள், நீரைச் சிந்த மறுத்துவிட்டன-இல்லை வறண்டு காய்ந்து விட்டன. அவளது இதழ்கள் மட்டுமே முணுமுணுத்தன. 'ஆருமே இல்லை .... ஆருமே இல்லை...'

உண்மையும் அதுதான். ஜீவசுதன் என்றைக்கு இறந்தானே, அன்றைக்கே அந்த ஊரும் அவளை வெறுத்துவிட்டது. ஜீவசுதன் இறப்பதற்குக் காரணமாயிருந்தவளே ஜீவபுஸ்பம்தான்.

தான் கூறவேண்டிய அறிவுரைகளை ஜீவபுஸ்பத்திற்குக் கூறுவதற்கு அவன் என்றுமே தயங்கியதில்லை. அன்று ஓர் இரவு— இரவுச் சாப்பாட்டை முடிக்குமுன், அவன் சொல்லிக்கொண்டிருந்தான்.

★ ★ ★

'தங்கச்சி! உன்ரை நன்மைக்குத்தான் சொல்லுறன். பிறகொரு காலத்திலை நீ கவலைப்படக்கூடாது. அம்மா அப்பா இல்லையெண்ட கவலை எங்களைத் தொடாதபடி, நாங்கள் ரெண்டுபேரும் ஒருத்தருக்கொருத்தர், துணையாகவும் ஆறுதலாகவும் இருக்கவேணும்.

உன் அண்ணனைத் தான் நான் எண்டைக்கும் உனக்கு இருக்கவேணும். அதுமாதிரி என் தங்கச்சியாய் நீயும் எனக்கு இருக்கவேணும்.

உனக்காகவும் உன் பிள்ளைக்காகவும், நான் எதையும் விட்டுக் கொடுப்பன். எந்த இன்பம் பெரிசெண்டு உலகம் நினைக்குதோ அதெல்லாம், உன் வாழ்க்கையைப் பார்த்த பிறகு என் கண்ணுக்கு ஒரு தூசு மாதிரிப் போச்சு. அந்த அளவுக்கு நீதான் எனக்குப் பெரிசு.

ஆனல் ஒண்டு சொல்லுறன் தங்கச்சி......? நான் சொல்லுறதை நீ கொஞ்சம் ஆராயத்தான் வேணும்— அதிலை உண்மையிருந்தால் அதை நீ தட்டிக்கழிக்க முடியாது.

அப்படியில்லையென்று உன் நன்மையைக் கருதி நீ என்னை வெறுத்தால், அண்டைக்குத் தொடக்கம் நான் ஆரிட்டையும் போகமாட்டேன். எனக்சாக ஒரு குழியை நானே தோண்டி அதிலை நிம்மதியாய் தூங்கிறதுதான் என்ரை முடிவாயிருக்கும். அது எனக்கு ஆறுதலைத் தரும்'

இப்படி அன்று மட்டுமல்ல- பல சந்தர்ப்பங்களிலும் இதை அவன் வலியுறுத்திவிட்டு, ஒரு நாள்...? எதை நினைத்தானே அதை நிறைவேற்றி விட்டான்.

சேதி அறிந்த ஊரும் உறவும் அழுது கொட்டிய காட்சிக்கு எல்லையே இல்லை. ஆனல் ஜீவபுஸ்பம் அன்றைக்கு அழவே இல்லை.

# தவறுன முடிவுகள்



இன்று அழுதாள் - கதறினாள்-வீறிட்டாள். வேதனைப் புளுதியிலே உருண்டாள். வெடித்துச் சிதறும் கண்ணாடித் துண்டுகள்போல், அவளது மனக் கண்ணாடி வெடித்துச் சிதறும் நிலையிலே காணப்பட்டது.

எந்த மகனை எல்லாவற்றிற்கும் மேலாக நேசித்தாளோ, அந்த மகனுக்கு அன்று கூறியதை அவளால் நினைவுபடுத்தாமல் இருக்க முடியவில்லை.

★ ★ ★

நீ எனக்கு ஒரே பிள்ளை. உன் அப்பா இறந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் நான் பட்ட வேதனை, துடிப்பு? அதெல்லாம் உனக்குத் தெரியக்கூடாதெண்டு தான் உன்னைச் செல்லமாய் வளர்த்தன். சாயலிலை - உருவத்திலை உன்ரை அப்பா மாதிரி நீ வந்திட்டாய் எண்டதை நினைச்சு நினைச்சு சந்தோஷப்பட்டேன். என் சொந்த ஆசையையும் சந்தோஷத்தையும் தூக்கிஎங்கையோ எறிஞ்சு போட்டு உன்னை வளர்த்தனுன். நான் மாத்திரமில்லை. உன்ரை மாமனான என் அண்ணனும் தான்.

'மதுவும் - மாதும் - சூதும்- புகையும் உன்ரை மருமோன்ரை வாழ்க்கையைக் கெடுக்குது ஜீவசுதன் - அவனைக் கொஞ்சம் அருக்கை பண்ணு இல்லையெண்டால், கெதியிலை அவன் பழுதாய்ப் போவான்' எண்டெல்லாம் பெரியவர் தியாகமூர்த்தி சொல்லுறுர் தங்கச்சி. பட்டதும் படாததுமாய்க் கேட்டுப் பார் அருள்ஜீவனை' எண்டு என் அண்ணன் என்னட்டைச் சொல்லேக்கை, நான் அவரைப் பேசிப்போட்டன். அவரோடை இனிமேல் எனக்குக் கதையே இல்லை எண்ட முடிவுக்கு வந்தன். உன்னிலை வைச்ச பாசத்தாலை அவரை நான் வெறுத்தன். அப்பிடி நான் செய்தும், என்னைத் தேடி என்ரை வீட்டுக்கு எத்தினை தரம் வந்திருப்பார் என் அண்ணன். ஆனல் நான் ...? என்ரை பிள்ளையைக் குறை சொல்லுற உங்களோடை உறவு வேண்டாம் எண்டு பிடிவாதமாய்ச் சொல்லிப் போட்டன்.

தங்கச்சி எங்கடை பிள்ளையள் எங்கடை வீடுகளிலை குழப்படியில்லாமல் இருக்கிறுங்கள் எண்டத்துக்காக அவங்களை நாங்கள் நல்லவங்களெண்டு உறுதியாய் எப்பிடியம்மா சொல்லுறது? வெளியிலை நாலுபேர் கவனிச்சுச் சொல்லேக்கைதான் அவங்கடை குணத்தை நாங்கள் அறிஞ்சு பார்க்கவேணும்'

எண்டெல்லாம் திரும்பத் திரும்பச் சொன்ன அவரை அண்டையோடை வெறுத்தன்.

இப்ப...? நீ அப்படித்தான் வாழுறுய் - திரிகிறுய் எண்ட உண்மை எனக்குத் தெரிஞ்ச அண்டைக்கே உன்னைக் கேட்டன். நீ...? என்னை அடிச்சாய் - அடிச்சது மட்டுமில்லை, உன்ரை காலாலை உதைச்சாய் - என் வீட்டிலேயிருந்த நல்ல பொருள்களை நீ வித்தாய் - வித்த காசை நாசமாக்கினுய். உன் இஷ்டத்துக்கு ஒரு பிள்ளையைக் கட்டினுய் என் வீட்டை விக்கச் சொல்லி அடம்பிடிச்சு என்னை ஆக்கினைப்படுத்தி அதையும் வெற்றியாய் முடிச்சு உன் பெண்சாதியோடை இப்ப நீ ஜேமனியிலை. ஆனல் நான்..? என் பிள்ளை எந்த நேரத்திலையும் எனக்கு உதவுவான் என் பக்கத்திலேயே இருப்பான் எண்டு நினைச்ச எனக்கு இப்ப...? ஆருமே இல்லை — ஆருமே இல்லை.

உன் குடியாலை - உன் சண்டித்தனத்தாலை - 'நான்' எண்ட நடத்தையாலை பெரியவையை மதிக்காத தன்மையாலை எ[ங்] ஊர் என்னோடை ஒரே சண்டை. உனக்காக வாதாடப் போய் ஊரையும் பகைச்சன், அண்ணனையும் பகைச்சன் முடிவு...?

உண்மையான ஆறுதலை அவள் இழந்துவிட்டாள். அவள் மணம்முடித்துக் கருவுற்ற ஆருவது மாதம் அவளது கணவன் ஜெயமுகன் கூற்றெருன்று அவளை நிம்மதியற்றவளாக்கியது.

'புஸ்பா! உன்னைக் கல்யாணம் கட்டவேணும் எண்ட ஒரேயொரு ஆசைக்காகத் தான் கிறிஸ்தவ மதத்திலை நான் சேர்ந்தன். என் உள்ளத்தாலை - உண்மையான பற்றாலை நான் கிறிஸ்தவனாய் [illegible] இப்ப நீ உணர்ந்திருப்பாய். எங்கடை இந்துசமயத்திலை இருக்கிற எல்லா விரதமும் இப்ப நான் பிடிக்கிறபடியால் உனக்கு எல்லாமே விளங்கி இருக்கும். இண்டைக்குக் காலையிலையும் நான் நல்லூருக்குப் போனது நல்லூர்க் கந்தனைக் காணத்தான். ஒண்டு சொல்லுறன் புஸ்பா உனக்குப் பிறக்கப்போற என் பிள்ளையை இந்துவாகத்தான் நீ வளர்க்கவேணும். அதுமட்டுமில்லை, தற்செயலாய் உனக்கு முந்தி நான் போகவேண்டி வந்தால் என் பிணத்தை எரிச்சுப்போடு, என் ஊர்ச் சுடலையிலை.'

இதைக் கேட்டுத்தான் அன்றைக்கு நிம்மதி இழந்திருந்தாள் ஜீவபுஸ்பம். தங்களுடைய ஆசைகளை எப்படியாவது பூர்த்திசெய்யவேண்டும்என்றுவிரும்பும் ஆண்வர்க்கம் தம்மால் நிறைவேற்ற முடியாத ஒரு சில வாக்குறுதிகளைப் பெண்ணினத்திற்குக் கொடுத்து, தங்களது விருப்பாசைகளைத் தீர்ப்பதையும், கொடுத்த வாக்குறுதிகளை அதற்குப்பின் ஆற்றிலே கைகழுவுவதுபோலக் கழுவிவிடுவதையும் எண்ணி எண்ணி வேதனைப்பட்டாள்.

அவளது உள்ளமோ வெந்து கொதித்து நீர்க்குமிழிகளாக வெடித்துத் தனக்குத்தானே தீங்கிழைத்துக்கொண்டிருந்தது.

'என் வற்புறுத்தலால் தானே கிறிஸ்தவராகி ஞானஸ்நானம் எடுத்தார் அவர். வில்லங்கமாக யாரையும் மதம்மாற்றக்கூடாது'

தன்னைத்தானே நொந்துகொணடாள் அவள். இருந்தும் தனது கணவனின் ஆசைகளைப் பூர்த்திசெய்ய அவள் பின்நிற்கவேயில்லை.

இந்துவாகவே வளர்த்தாள் தன் பிள்ளையை. தனது கணவன் இறந்தபோது கூட 'அவரின்ரை ஆசைப்படி அவர் உடலை எரியுங்கோ' என்று அதையும் நிறைவேற்றினுள் — அதுவும் பல மைல் தூரத்திலுள்ள ஜெயமுகனின் ஊரான நயினுதீவில்

அந்த நிகழ்ச்சிக்குப்பின் காலமும் கரையக் கரைய இறந்த தனது கணவனின் உறவினரோடு அவள் வைத்த பந்த பாசங்களெல்லாம் கருமுகிற்கூட்டங்கள்போல இருண்டன.

தனக்கும் வளர்ந்துவரும் தனது பிள்ளைக்கும் நீராக-சலையாக அமைந்த தனது அண்ணனையே அவள் பூசித்தாள்.

அந்த உறவிலும் ஒரு வெடிப்பு ஏற்பட்டு தனது அண்ணனை அன்று வெறுத்தவள் தன் அண்ணன் தன் வாழ்வை ஒளிமயமாக்க எண்ணிய தெய்வதீபம் என்பதை இப்போது உணர்ந்துவிட்டாள்.

'என் புருஷனை நான் பறிகொடுத்து நிம்மதியில்லாமல் இருந்தன். அந்த நேரத்திலை கண்கலங்கவிடாமல் பார்த்தவர் என் அண்ணன். அந்த நன்றிச் செயலுக்குக் கைமாருக எதை நான் குடுத்தாலும் அது ஈடாகாது. கொஞ்சக் காலம் அவரை நான் வெறுத்தன். அதுக்குப் பரிகாரம் இந்தக் கல்லறையிலை என் வாழ்நாள் பூராகவும் நான் கிடக்கிறதுதான்.'

மறுபடியும் அவளது உள்ளமும் உணர்ச்சியும் வெடித்தன. நீரை நிறுத்த மறுத்தன கண்கள். சோகத்தை மறக்க மறுத்தது மனம்.

சிறிது நேரம் தூங்கலாம் என்று எண்ணினுள் - தூங்கக்கூட அவளது கட்டுப்பாட்டுக்குளில்லை. எழும்பி நடக்க முயன்றுள். வானம் அவளைத் தடுத்து நிறுத்தியது.

இடியும் - மின்னலும் - கொடும்மழையும் அவளை எழும்பவிடவில்லை. அந்தக் குளிரையும் பயத்தையும் தாங்கமுடியாமல் வேதனைப்பட்ட அவளுக்கு அவளுடைய கைகளிலிருந்த நித்திரைக் குளிசைகள் கைகொடுத்தன.

தனது அண்ணன் ஜீவசுதனின் கல்லறைப் படியிலே அவள் குறண்டினுள். அவளது வாழ்க்கையிலே இதுவரை இல்லாத நித்திரை அவளுக்கு இன்பரசம் கொடுத்தது.

பறவைகளின் கீச்சொசைகளோ - நாய்களின் அவலக்குரல்களோ - பிள்ளையின் தொந்தரவோ எதுவுமே அவளின் நித்திரையைக் கெடுக்கவில்லை. சுகமான - இடையிலே குழப்பமில்லாத ஒரு நித்திரை.

(யாவும் கற்பனை)

-நவாலியூர் சி. என். செல்லத்துரை-

# சமுதாயப் பணிபுரியும் புதுமை இளைஞன்

நான்கு வருடங்களில் ஏழு தடவைகள் இரத்த தானம் செய்து யாழ்குடா நாட்டில் சாதனை படைத்த 22 வயது இளைஞன் திரு. க. பாரதி மோகன், தியாக உள்ளம் படைத்தவர்.

ஆரம்பக் கல்வியை மலைநாட்டிலும் உயர் கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும் இவர் பெற்றுர்.

> யாழ்குடா நாட்டில் 4 வருடங்களில் 7 தடவைகள் இரத்ததானம் செய்து சாதனை புரிந்தார் திரு. க. பாரதிமோகன் சஞ்சீவிக்கு அளித்த பேட்டி இங்கு பிரசுரமாகிறது.

தற்போது யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பௌதிக, விஞ்ஞானத்துறை மாணவராக இருக்கிறுர்.

இரத்த தானம் பற்றி சஞ்சீவிக்கு அவர் பேட்டியளித்தார்.

'இன்றைய இக்கட்டான சூழ்நிலையில்இரத்தம்கொடுக்க யாருமின்றி உயிர்கள் வீணே பலியாகின்றன.

'இந்த உயிர்களை முடிந்த அளவு நாம் இரத்த தானம் செய்வதன்மூலம் காப்பாற்ற முடியும்; காப்பாற்ற நாம் முன்வரவேண்டும்.

இத்துறையிலான எனது சிறிய பங்களிப்பே இது'

பேட்டி:

- அகில்ராஜ் -

—இப்படி மிகவும் அடக்கமாக, அமைதியாக கூறுகிறுர் திரு. பாரதிமோகன்.

எழுத்துத் துறையில் நாட்டம் கொண்டவரான திரு. பாரதிமோகன் புதுமை எண்ணங்கள் படைத்தவர்.

1986 இல் முதன் முதலாக 19 ஆவது வயதில் இரத்த தானம் வழங்கினேன். என் அப்பாவுக்குத்தான் கொடுத்தேன்.

சமுதாயப் பற்று வளர வேண்டும். தாமாகவே முன்வந்துசேவை செய்யும் மனப்பான்மை வளர வேண்டும். அப்போது இரத்த தானம் செய்யமுடியும்.

இரத்ததானம் உயிருக்கு ஆபத்தானது என்று கருதுகிறுர்கள். அது உண்மையல்ல.

ஓர் உயிரைக்காப்பாற்ற டாக்டர் முயல்வாரே தவிர, உயிரைப்போக்கடிக்க எண்ணுவாரா?

ஒவ்வொரு பிறந்த நாளின்



பாரதி மோகன்

போதும் நான் இரத்ததானம் செய்ய தீர்மானித்துள்ளேன்.

ஒவ்வொரு தடவை இரத்த தானம் செய்த போதும் சமூகத்திற்கு என்னுல் முடிந்த அளவு சேவை செய்தேன் என்ற மனத்திருப்தி ஏற்படுகிறது.

'தனிமனிதன் சமுதாயத்திற்காக - சமுதாயம் தனி மனிதனுக்காக' - என்ற மார்க்ஸீய கூற்றுக்கிணங்க தனி மனிதனுக நின்று சமுதாயத்திற்கு இரத்ததானம் செய்து வருகின்றேன். இது சாதனையே அல்ல.

இப்படிக் கூறுகிறுர் மிகவும் அரிதான 'ஓ' பொஸிட்டிவ் குறூப் இரத்தவகையைக் கொண்ட திரு. பாரதி மோகன்.

இதுபோன்ற மனப்பண்பு கொண்ட மாணவரை நமது சமுதாயத்தில் காண்பதும் அரிதே! ★

# அறிவியலில் மூன்று அம்சங்கள்

அறியாமையை வணங்குவோர் ஓர் ஆழமான இருளினுள் வீழ்கின்றனர். அறிவை மட்டுமே பின்பற்றி ஒழுகுவோர் அதனினும் ஆழமான இருளினுள் வீழ்கின்றனர்.

அறிவை அடிப்படையாகக் கொண்டுதான் அறிவியல் செயல்படுகிறது.

அறிவியலைப் பொறுத்தவரையில் அறிவு என்பது மூன்று வகைப்படும்.

அவையாவன:-

### அ. உருவக அறிவு

இது நமது கருத்தைக் கொண்டு ஒன்றை நாம் அறிந்து கொள்ளும் முயற்சி.

ஒரு ரோஜாப்பூவைப் பார்க்கிறேம்.

நமக்கு இயல்பாகவே அழகியல் உணர்வு இருப்பதால் நாம் 'ஆஹா! இந்த ரோஜாப் பூ எவ்வளவு அழகாய் இருக்கிறது!' என்று வியப்பும் மகிழ்ச்சியும் அடைகின்றேம்.

நமது மனதில் அழகு என்ற உருவக சிந்தனை இருப்பதால் நமக்கு ரோஜாப்பூ அழகாகத் தெரிகிறது.

ஆனல் ரோஜாப் பூவில் அழகு இருக்கிறதா என்றுல் இல்லை.

அழகு என்பது நமது கண்ணில் மற்றும் கருத்தில் இருக்கிறதே தவிர பூவில் இல்லை.

அதே பூவை ஒரு குரங்கு பார்க்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

அது அழகுணர்வு பற்றி எல்லாம் கவலைப்படுவது இல்லை; அதனது இயல்புப்படி அது அந்தப் பூவைப் பிய்த்து எறிந்து விடும்.

அதனுல் தான் 'குரங்கு கைப்பூமாலை' என்ற பழமொழியே வந்தது.

### ஆ. வாத அறிவு

ஒரு பொருளைப்பற்றியோ அல்லது ஒரு நிகழ்வைப் பற்றியோ வாதிட்டு உண்மைகளை அறிவதற்குப் பெயர் வாத அறிவு.

பொதுவாகவே, இதில் நாம் காரண காரிய உறவுகளைப் பற்றித்தான் வாதிடுகிறேம்.

ஒரு நோய் இருக்கிறது. அது ஏன் வருகிறது? அதற்கான காரணம் என்ன? அந்த நோயின் அடையாளங்கள் யாவை? அந்த நோய் வந்தால் உடலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் என்ன? அவற்றை நாம் சரி செய்ய முடியுமா? அந்த நோயைக் குணப்படுத்துவது எப்படி?

இது போன்ற விஞக்களை எழுப்பி ஒன்றை நாம் அறிய முயற்சிப்பது வாத அறிவு.

### இ. நோக்கறிவு

நாம் சில பல விஷயங்களை அனுபவத்தில் காண்கிறேம். அவைகளைப் பற்றி நமக்குச் சில முடிவுகள் தேவைப்படுகின்றன.

அப்போது, நாம் புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றை வகைப்படுத்தி அலசுகிறேம்.

இது வழக்கமாகச் சமூக இயல்பாடங்களில் நாம் செய்கின்ற ஒன்றுதான்.

பருவுலகு சம்பந்தப்பட்ட விஷயமாக இருந்தால் நமக்கு ஆய்வு கூடம் இருக்கிறது.

அங்கு பரிசோதனை நடத்தி ஒன்றைப் பற்றி நமக்கு வேண்டிய தகவல்களைச் சேகரித்துக் கொண்டு சில முடிவுகளுக்கு நாம் வருகிறேம். ★

- ஏ. ஜே. வில்சன் அமல்ராஜ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நாவில் 'பொடி' மறைந்து 'தூசி' புகுந்த கதை!

பேராசிரியர் தி. அ. சொக்கலிங்கம் தமிழறிஞர். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்: 'பொடி' என்ற வார்த்தை பற்றி அவர் கூறுவதை இனி வாசியுங்கள்;

'ஒருநாள் கேரளத்தில் தமிழாசிரியராக பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது.

'ஒருநாள் என்னுடன் வேலை செய்யும் ஆசிரிய நண்பரைப் பார்க்கச் சென்றிருந்தேன். நண்பர் அன்புடன் வரவேற்ருர்.

'நாற்காலியில் அமரச்சென்ற சமயம், 'பொறுங்கள் நாற்காலி எல்லாம் ஒரே பொடியாக இருக்கிறது' என்று சொல்லித் துணியால் அதிலிருந்த தூசியைத் துடைத்து என்னை அமரச்செய்தார்.

'மறந்த பொடி, அப்போது என் நினைவுக்கு வந்தது.

'தமிழன் மறந்துபோன சொல்லான 'பொடி' மலையாளமொழியை வளம் படுத்துவதை உணர்ந்து பெருமிதம் கொண்டேன்.

'பொடி என்னும்' தூய தமிழ்ச் சொல் புழுதி என்ற பொருளை அன்றி வேறு சில பொருள்களையும் உணர்த்துகிறது.

பெருங்கதையில் 'வாசநறும் பொடி' என வருமிடத்தில் தூள் என்ற பொருளில் இது ஆளப்படுகிறது.

தேவாரத்தில் 'காடுடைய சுடலைப்பொடி பூசி என்னுள்ளங்கவர் கள்வன்' என்று பேசும்போது கலித்தொகையில் 'பொடி அழல்' என்று கூறும் போதும் சாம்பல் என்ற பொருளை பயக்கின்றது.

ஆனால் 'மெய்சேர் பொடியர்' என்று தேவாரத்தில் படிக்கும்போது திருநீறு என்ற பொருளை இப்பொடி போர்த்திக்கொள்கிறது.

மனைவியிடம் நாம் சேட்கிறோம் 'காய்கறியைப் பெரிய துண்டுகளாக வெட்டிப்போட்டிருக்கிறாயே! பொடி பொடியாக வெட்டக்கூடாதோ?' என்று.

இங்கு சிறிய துண்டு என்ற பொருளில் பொடி பயன்படுகிறது. யாழ்ப்பாணத்தில் 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளைப் 'பொடியன்' என்று அழைப்பது மரபு.

இன்று பொடி என்றால் தமிழனுக்கு மூக்குப் பொடி தான் நினைவுக்கு வருகிறது.

தமிழுக்கும் மூக்குப்பொடிக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு:

வடலூர் வள்ளலாரும் பொடி என்று சொல்லை மூக்குத்தூள் என்ற பொருளில் தான் பயன்படுத்தி இருக்கிறார்.

'பொடிக்கடி நாசித்துளையிலே புகுத்திப் பொங்கினேன் – ஐயகோ' என்று அருட்பாவில் வள்ளலார் முறையிடுகிறார்.

தமிழர் நாவினின்றும் 'பொடி' மறைந்து 'தூசி' வந்து சேர்ந்தது. தூசி. திராவிடச் சொல் அன்று. 'தூலி' என்ற சொல்லில் இருந்து 'தூசி' பிறந்தது என்று தமிழ் லெக்ஸிகன் கூறுகிறது.' ★

# விஞ்ஞானிக்கு ஏற்பட்ட 'ஷொக்'

லண்டன் நகரத்து ரோயல் சங்கத்தில் ஒரு விஞ்ஞானி ஒரு கம்பிச் சுருளுக்குள் ஒரு காந்தத்தை நுழைத்தால் கம்பிச் சுருளில் மின்னோட்டம் தோன்றுவதைத் தாம் கண்டுபிடித்ததாக விவரிக்கிறார்.

அவருடைய சோதனைகள் கூட்டத்தினருக்கு கவர்ச்சியாக இல்லை.

அத்தகைய கூட்டங்களில் கூச்சலிடக் கூடாது என்ற எண்ணத்துடன் எல்லாரும் அலுப்புடனும் அமைதியுடனும் கேட்டுத் தொலைக்கிறார்கள்.

பேச்சாளர் உரையை முடிக்கிறார்.

எல்லார் மனதிலும் எழுந்த கேள்வியை ஓர் அம்மையார் வெளிப்படையாகக் கேட்

'நீங்கள் சொன்னதெல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனால் அதனால் மக்களுக்கு என்ன உபயோகம் என்று கூறமுடியுமா?

பதில் வருகிறது.

'அம்மையாரே! புதிதாகப் பிறந்த குழந்தையினால் மக்களுக்கு என்ன உபயோகம் என்று உங்களால் கூறமுடியுமா?' —என்று கனிவுடன் அந்த விஞ்ஞானி திருப்பிக்கேட்டார்.

கிளாட்ஸ்டன் (1809-1898) இங்கிலாந்தின் பிரதமர். சிறந்த நிர்வாகி. பெரிய அறிஞர்.

அவரும் கூட்டத்திற்குச் சென்றிருந்தார்.

அவரும் விஞ்ஞானியைக் கேட்டார்: 'இதனால் எல்லாம் ஏதாவது பிரயோசனம் உண்டா?

பிரதமரின் அலட்சியத் தொனியிலான இக்கேள்விக்கு விஞ்ஞானி,

'ஏனில்லை. சீக்கிரத்திலேயே நீங்கள் மின்சாரத்தின் மீது வரிவிதித்து வருமானம் பெறக்கூடிய காலம் வரலாம்' —இப்படி மின்சாரத்தைக் கண்டுபிடித்த பேராசிரியர் மைக்கல் பாரடே பதிலளித்தார்.

அவர் சொன்னது அப்படியே பலித்தது.

இன்று எல்லாநாடுகளும் மின்சாரத்தை உற்பத்தி செய்து விற்கின்றன. வரிவிதிக்கவும் செய்கின்றன.

ஆனல் 19ஆம் நூற்றண்டில் லண்டன் மக்களுக்கே மின்காந்தவிளைவு அற்பமாகப் பட்டது. ★

## பொன்மொழி

உழைக்க நேரத்தை எடுத்துக்கொள். அது வெற்றியின் விலை.

சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள். அது சக்தியின் ஊற்று.

விளையாட நேரத்தை எடுத்துக்கொள். அது இளமையின் ரகசியம்.

படிக்க நேரத்தை எடுத்துக் கொள். அது அறிவின் வாயில்.

நல்லவை புரிய நேரத்தை எடுத்துக் கொள். அது இன்பத்தின் பாதை.

கனவு காண நேரத்தை எடுத்துக் கொள். அது சாதனைக்கு வழி.

அன்பு காட்ட நேரத்தை எடுத்துக் கொள்; அது இறைவனின் கொடை.

சேவை புரிய நேரத்தை எடுத்துக் கொள். அது வாழ்க்கையின் குறிக்கோள்.

சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக் கொள் அது இதயத்தின் இன்னிசை.

— பொன்மொழிக் களஞ்சியம் நூலிலிருந்து.

## ஒரு யானை உள்ள நாடு ஏற்றுமதி செய்யும் தந்தங்கள்

ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள புருண்டி நாட்டில் ஒரே ஒரு யானைதான் உள்ளது.

ஆனல் அந்த நாட்டில் இருந்து ஏற்றுமதியாகும் யானைத் தந்தங்களின் அளவுக்கு 140 தொன்.

அதாவது உலகின் மொத்த யானைத் தந்த ஏற்றுமதியில் மூன்றில் ஒரு பங்கு புருண்டியில் இருந்துதான் ஏற்றுமதியாகிறது. தான்சானியா, கென்யா, மொஸாம்பிக், சாம்பியா, செயாரே முதலான ஆபிரிக்க நாடுகளில் யானைகள் ஏராளமாக சுட்டுக்கொல்லப்படுகின்றன.

பின்னர் அவற்றின் தந்தங்கள் புருண்டிக்குக் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டு அங்கிருந்து ஏற்றுமதியாகி வந்துள்ளன,

ஆபிரிக்க நாடுகளில் ஆண்டுதோறும் சுமார் 70 ஆயிரத்துக்கு மேற்பட்ட யானைகள் சட்டவிரோதமான முறையில் சுட்டுக் கொல்லப்படுவதாக ஒரு மதிப்பீடு தெரிவிக்கிறது.

யானைகளின் படுகொலைக்குக் காரணம் அவற்றின் தந்தங்களே. உலகெங்கிலும் யானைத்தந்தம் மதிப்புமிக்க உயர்ந்த பொருளாகக் கருதப்படுகிறது.

மிக நுணுக்கமான அழகிய வேலைப்பாடு கொண்ட பொருள்களைத் தயாரிப்பதற்கு யானைத் தந்தம் உகந்தது.

யானைத் தந்தத்தில் தயாரிக்கப்பட்ட ஏ.கே-47 ரக துப்பாக்கிகூட உள்ளது. ★

## சீனப் பழமொழி

சொர்க்கத்திற்கு மலர்கள் தூவிய பாதை உள்ளது.

ஆனல் அதில் யாருமே நடப்பது இல்லை.

நரகத்திற்குவாசலே இல்லை. ஆனல் எல்லாரும் சுவர் ஏறிக் குதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

# நீதிமன்றத்தில் 'விஸ்வாமித்ரர்'

ஆந்திர மாநில முதலமைச்சர் என். ரி. ராமராவ் நடிக்கும்படம் 'மகரிஷி விஸ்வாமித்ரா'

மேனகையாக நடிகை மீனுட்சி சேஷாத்ரி நடிக்கிறார்.

இதன் படப்பிடிப்பு அண்மையில் ஆரம்பமானது.

அன்றிலிருந்து முதலமைச்சர் ராமராவுக்கு எதிராக ஆந்திர மேல் நீதிமன்றத்தில் வழக்குகள் பல போடப்பட்டுள்ளன.

முதலமைச்சராக இருந்து படத்தில் நடிக்கமுடியாது: நடிப்பதைத் தடைசெய்யுங்கள் —இப்படி நீதிமன்றத்துக்கு முறையிடப்பட்டுள்ளது.

மனுக்களை விசாரணைக்கு மேல்நீதிமன்றம் ஏற்றுள்ளது.

இதனிடையில் 'மேனகை' மீனுட்சி சேஷாத்ரிக்கு டெலிபோன்மூலம் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

விஸ்வாமித்ரர் படத்தை ஹிந்தியிலும் தெலுங்கிலும் தயாரித்து இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் வெளியிட வேண்டும் என்பதில் முதலமைச்சர் தீவிரமாக இருக்கிறார்.

இந்திரா காங்கிரஸாரோ எப்படியாவது படத்தயாரிப்பை நிறுத்துவது என்று நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

புராணகாலத்தில் மட்டுமல்ல தற்கால அரசியலிலும், 'விஸ்வாமித்திர மகரிஷி' கலகலப்பை ஏற்படுத்தி வருகிறார்.

## பூச்சிகளின் இன்னிசை!

கோடை காலத்தில் கிராமங்களில் நடந்து போனால் பூச்சிகளின் பாட்டுக் கச்சேரிகளையும் வண்டுகளின் ரீங்காரத்தையும் கேட்கலாம்.

பூச்சிப் பாடகர்களில் பிரபலமானது தத்துக்கிளி (Grass hopper) என்கிற பூச்சி.

ஆனல் சுவர்க் கோழிகள் (Cicadas) எனப்படும் சிறிய பூச்சிகள்தான். உச்ச அளவில் சத்தம் போடுகிறவை.

பலமணி நேரத்திற்கு அவை ஓயாமல் கிரீச்சிட்டுக்கொண்டிருக்கும்.

பூச்சிகள் எழுப்புகிற ஒலிகள் சங்கீதத்தைப்போல காதுக்கு இனிமையாக இல்லாமலிருக்கலாம்.

ஆனல் இசைக் கருவிகள் இசை ஒலி எழுப்பும் முறைகளும் பூச்சிகள் ஒலியெழுப்பும் முறைகளும் ஒரேமாதிரியானவை; ★

## நாங்கள் குதிரைகள்! அண்ணலின் சூடான பதில்

இந்திய சுதந்திரப்போர் நடந்த காலம் அது.

வட்டமேஜை மாநாட்டுக்காகக் காந்தியடிகள் லண்டன் சென்றார்.



காந்தி

அங்கு பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தபோது ஓர் ஆங்கிலேயர்,

'நாங்கள் எல்லாரும் வெள்ளையாக இருந்ததால் வெள்ளையர் என்று பேசுகிறீர்கள்.

'ஆனல் இந்தியர்களோ கறுப்பு, சிவப்பு, வெள்ளை, மாநிறம் என்று பலவாறாக உள்ளனரே, அது ஏன்?' —என்று பேச்சோடு பேச்சாகக் கிண்டலாகக் கேட்டார்.

மகாத்மாவிற்குக் கோபம் வந்தது.

'கழுதைகள் எல்லாம் ஒரே மாதிரி இருக்கும். குதிரைகள் அப்படியில்லை. பல்வேறு நிறங்களில் இருக்கும்'— காந்திஜியின் சூடான இப்பதிலைக் கேட்டதும் ஆங்கிலேயர் வாயை மூடிக்கொண்டனர். ★

## கொமேனி நினைவு நிலையம்

உலகில் இஸ்லாமியப் புரட்சிக்கு வித்திட்டவர் மறைந்த ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா காமேனி.

ஈரானில் இஸ்லாமிய அரசை நிறுவிய கொமேனியின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நினைவாலயம் அமைக்கப்படுகிறது.

இதற்காக அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள 150 ஏக்கர் நிலத்தை வாங்க அரசு முடிவு செய்துள்ளது.



கொமேனி

இந்த நினைவாலயத்துடன் முக்கிய நகரங்களுக்குச் செல்லும் அனைத்து நெடுஞ்சாலைகளும் இணைக்கப்படும் என்று [illegible] அறிவித்திருக்கிறது. ★

## படிப்பறிவற்ற பெண்கள்

படிப்பறிவற்ற பெண்களின் எண்ணிக்கை உலகில் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

1960 ஆம் ஆண்டு படிப்பறிவற்ற பெண்கள் எண்ணிக்கை 42 கோடியே 80 லட்சமாக இருந்தது.

1985 ஆம் ஆண்டில் இது 56 கோடியே 10 லட்சமாக உயர்ந்தது.

இப்போது இந்த எண்ணிக்கை 75 கோடியாக அதிகரிக்கலாம் என்று ஐ. நா. அதிகாரிகள் அச்சம் தெரிவித்திருக்கின்றனர். ★

## உங்களுக்குத் தெரியுமா?

மனிதனின் விதியை இறைவனின் தலையில் எழுதினான் என்று நாம் சொல்வது வழக்கம்.

ஆனல் அதையே சற்று வித்தியாசமாகச் சொல்கிறது நவீன விஞ்ஞானம்;

ஒவ்வொரு மனிதனின் உடல் அணுக்களிலும் அல்லது 'ஜீன்'(Gene) களிலும் அவனவன் 'விதி' குறிக்கப்பட்டுள்ளது என்கிறது அந்த விஞ்ஞான ஆய்வு.

இந்த ஜீன்களில் நான்கு இலக்க (டிஜிட்டல்) 'எழுத்துக்கள்' உள்ளன.

ஒவ்வொரு மனிதனின் குண இயல்புகளையும் இந்த எழுத்துக்கள் நிர்ணயிக்கின்றன.

ஒருவன் கவிஞனு, அறிஞனு, மூடனு, மூடவனு என்பது எல்லாம் இந்த எழுத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ள முறையாலேயே அமைகின்றன என்கிறது 'ஜெனட்டிக்ஸ்' என்னும் நவீன விஞ்ஞானம்.

மற்றும் மனிதனின் பாரம்பரிய குணப் பண்புகளையும் அது விளக்குகிறது.

★ 17 ஆம் நூற்றண்டில் அமெரிக்காவில் திருமணமான ஒரு பெண் சராசரியாக 13 குழந்தைகள் பெற்றுக் கொண்டிருந்தாள்.

★ ரைட் சகோதரர்கள் மேலே ஆகாயத்தில் முதன் முதலில் பறந்தபோது 12 விநாடிகளே பறந்தார்கள். இந்தச் செய்தியை தந்தி மூலம் மக்களுக்குச் சொல்ல 12 நிமிடம் பிடித்தது.

★ முதலாவது வான் புகைப்படம் அமெரிக்க உள்நாட்டுச் சண்டையின்போது பலூனில் இருந்து எடுக்கப்பட்டது.

## எய்ட்ஸுக்கும் அணுக்குண்டுக்கும் தொடர்பு?

1950 ஆம் ஆண்டுக்கு பின்னர் இடம்பெற்ற அணுக்குண்டு வெடிப்பு சோதனைகள் தான் எய்ட்ஸ் ஏற்படக் காரணமாக இருக்கலாம் என பிரபல சோவியத் விஞ்ஞானி டாக்டர் லாசர் மெக்லர் கூறியிருக்கிறார்.

அணுக்குண்டு வெடிப்பால் கதிர்வீச்சு உணவுப் பொருள்களில் பாதித்து அதன் மூலம் எய்ட்ஸ் நோய்க் கிருமிகள் தோன்றியதாகக் அவர் கூறுகிறார். ★

## செயற்கை விதை

விதையில் இருந்து செடி வளருகிறது.

ஆனல் விதையை செயற்கை முறையிலேயே உற்பத்தி செய்யும் காலம் வந்து விட்டது.

கனடா நாட்டில் குயல்ப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திஸ்ஸ சேனத்ரத்தின, பானியன் மார்க்ஸ் ஆகியோர் ஒரே ஒரு செடியில் இருந்து செயற்கை முறையில் விதைகளை உற்பத்தி செய்வதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்:

செடியின் சிறிய திசுதுண்டை வெட்டி எடுத்து, அதில் இருந்து விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதன் மூலம் நசிந்து வரும் நிலையில் ஏராளமான தாவர இனங்களைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு உள்ளது. ★

## வானத்தைப் பார்த்து நேரத்தைக் கூறலாமா?

இரவில் வானத்தைப் பார்த்து நேரத்தைக் கணித்துக் கூற முடியுமா? — என்றால் நன்றாகவே முடியும் என்பது தான் விடை.

ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து அப்பொழுதுள்ள வானக் காட்சியைக் கண்டுகொண்டு நேரத்தைக் கணக்கிடுவது என்பது தொன்றுதொட்டு நம் நாட்டில் இருந்து வரும் வழக்கம்.

மாதமும் திகதியும் உச்சத்தில் உள்ள விண் மீனும் தெரிந்தால் நேரத்தைக் கூறலாம். இது மிகவும் எளிதான முறையும் கூட.

இந்தப் பழைய தமிழ்ப் பாடல் அம்முறையை விளக்குகிறது.

சித்திரைக்குப் பூச முதல்
சீரனுஷம் ஆவணியாம்
அத்தனுசுக் குத்திரட்டா-
தியே நித்த நித்தம்
ஏதுச்சமானாலும் இரண்டே
காலிற் பெருக்கி
மாதம் ஐந்து தள்ளி மதி.

— என்பது வெண்பா. ★

## 'மெல்லத் திற' என்றவுடன் தானாகத் திறக்கும் கதவு

மாயாஜால சினிமாப் படத்தில் பயங்கர உருவம் கொண்ட ஒரு மந்திரவாதி ஆள் நடமாட்டமற்ற காட்டுப் பிரதேசத்தில் ஒரு மலைப் பாறையின் முன்பாக நின்று கொண்டு 'ஓம் ஹ்ரீம்!'— என்று மந்திரத்தை உரக்கக் கூறுவார்.

உடனே பாறைக்கதவு மெல்ல விலக, ரகசியக் குகைக்குள் மந்திரவாதி நுழைகிறார்.

நிஜவாழ்க்கையில் மந்திரத்தின் மூலம் பாறைக் கதவை அல்லது வங்கி இரும்புப் பெட்டியைத் திறக்க முடியாதுதான்.

ஆனல் நவீன கம்பியூட்டர் யுகத்தில் 'மந்திரத்தை' உச்சரித்துக் கதவைத் திறக்கும் முறை சாத்தியமாகி உள்ளது.

குறிப்பிட்ட சொற்களை (மந்திரம் என்பது சொற்கள் தானே) கூறினால் கதவு திறந்து கொள்கிறது.

ஆனல் குறிப்பிட்ட வார்த்தைகளைக் குறிப்பிட்ட ஒரு நபர் கூறினால் மட்டுமே கதவு திறக்கும்.

அவர் கூறுவது 'கதவே மெல்லத் திற' என்பது போன்ற சாதாரண வார்த்தைகளாகக்கூட இருக்கலாம்.

அவர் இந்தச் சொற்களைக் கூறும்போது உணர்கருவிகளுடன் இணைந்த கம்பியூட்டர், அவரது குரலை அடையாளம் கண்டு கொள்கிறது.

கடும் ஜலதோஷம் காரணமாக தொண்டை கட்டியிருந்தாலும் சரி அக் கம்பியூட்டர் அவரது குரலைத் தவறாது அடையாளம் கண்டு கொள்கிறது.

கம்பியூட்டரின் நினைவுப் பகுதியில் அவர் கூறவேண்டிய வார்த்தைகள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளப்படுகிறது. அதை வைத்தே அக்கருவி இயங்குகிறது.

வங்கி இரும்புப்பெட்டியைத் திறக்க குறிப்பிட்ட வார்த்தையைக் கூறுபவர் வங்கிப் பொறுப்பு அதிகாரியாக இருப்பார். அவர் மாற்றப்பட்டால் புதிதாக வருகிற அதிகாரியின் குரலைப் பதிவு செய்தால் போதும். ★

## மேலை நாடுகளில் தலையலங்காரம்

கம்பியூட்டருடன் கூடிய வடிவமைப்பு சிலகாலம் வரை வெகுவாகப் பொறியியல் சம்பந்தப்பட்ட விஷயங்களில்தான் உபயோகிக்கப்பட்டு வந்தது.

ஆனல் சமீப காலமாக இது பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலைநாடுகளில் தலைமுடியைத் திருத்தம் செய்யும் நிலையங்களில் கூட இது உபயோகப்படுத்தப்படுகிறது.

இப்படிப்பட்ட நிலையங்களுக்கு நாம் சென்றால், நம்மைக் கம்பியூட்டருக்கு முன்பாக உட்காரவைத்து, நமக்கு எந்த விதமான முடி அலங்காரம் வேண்டும் என்று கேட்பார்கள்.

நாம் சுட்டிக் காட்டும் முடி அலங்காரத்தை நமது உருவத்துடன் இணைத்து, கம்பியூட்டரின் திரையில் காட்டுவார்கள்.

இது போல் நமது முடியை ஒன்றும் செய்யாமலேயே நம் உருவத்தைப் பல விதமான முடி அலங்காரத்துடன் சம்பியூட்டர் திரை மூலம் காட்டுவார்கள்.

நமக்கு வேண்டிய முடி அலங்காரத்தைத் தேர்ந்தெடுத்தவுடன் தான் நமக்கு முடி அலங்காரம் செய்யப்படும். இதன் மூலம் வாடிக்கையாளர்களின் நன் மதிப்பைப் பெறமுடிகிறது. ★

## மண்டேலா பெயரில் நெடுஞ்சாலை

தென் ஆபிரிக்க விடுதலை வீரர் நெல்ஸன் மண்டேலா.

இனவெறி அரசால் இருபத்தைந்தாண்டுகளாக எழுபது வயதான நெல்சன் மண்டேலா சிறையில் அடைச்சுப் பட்டிருக்கிறார்.

அவரின் விடுதலைக்காக உலக நாடுகள் அனைத்தும் குரல் கொடுத்தும் தென் ஆபிரிக்க அரசு செவி சாய்க்கவில்லை.

இதே வேளை—

மண்டேலாவைச் சிறப்பிக்கும் பொருட்டு புதுடில்லியில் ஒரு வீதிக்கு 'நெல்சன் மண்டேலா சாலை' என்று பெயரிடப்பட்டு உள்ளது.

இதுவரை புதுடில்லியில் உயிருடனிருப்பவர் பெயரில் பூங்கா, சதுக்கம், வீதி எதுவும் கிடையாதாம்.

உயிருடனிருப்பவர் பெயரில் வீதி ஒன்றுக்குப் பெயர் சூட்டப்படும் பெருமை நெல்சன் மண்டேலாவுக்கே கிடைத்து உள்ளது. ★

## 'கம்பியூட்டர்' கண்ணதாஸன்

கவிஞர் கண்ணதாஸன் பாய் மீது அமர்ந்திருக்கிறார்.

'சந்ததி' படத்தின் தயாரிப்பாளர் கௌசிக் மேஜர் சுந்தரராஜன் ஆகியோர் எதிரே அமர்ந்திருக்கின்றனர்.

படத்துக்கு ஒரு தத்திற்கு ஒரு தத்துவப்பாடல் வேண்டும்.

மேஜர் சுந்தரராஜன் கண்ணதாஸனைப் பார்த்து '[illegible]ண்ணு புற்றுநோயை மையமாகக் கொண்ட கதை. மரணவாயிலில் அமர்ந்திருக்கும் பிள்ளை பாடும் பாடல் இது. பல்லவியிலேயே புற்று நோய் பற்றிய வார்த்தைகள் விழுந்தால் நன்றாக இருக்கும்' —என்கிறார்.

ஒரு விநாடிதான் யோசனை. எழுதிக் கொள்ளுங்கள் என்கிறார் கவிஞர்.

'என்னிடத்தில் அன்புற்று நோய் கொடுத்தான் இறைவன்!

சந்ததியில் விருப்புற்று
நோய்கொண்டான் தந்தை
அப்போது புரியவில்லை
ஆண்டவ[illegible]ன் வடிவம்!
இப்போது வருகிறது
இறைவனின் கடிதம்!

கவிதை பிறந்தது. கம்பியூட்டர் கவிஞர் என்ற பேர் கண்ணதாஸனுக்குப் பொருந்தாதோ! ★

பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

## இந்து நாகரிகம்

### சிந்துவெளி நாகரிகமும் அதன் வரலாற்று முக்கியத்துவமும்

**தூபதீபம்:**

சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட பெண்தெய்வ உருவங்கள் புகைபடிந்து காணப்படுகின்றன. இவை அக்காலத்தில் தூபதீபம் காட்டும் வழக்கம் இருந்தது என்று எண்ண இடம் தருகின்றன. ஒரேமாதிரியான பல தட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் படைக்கும் தட்டுகள் என்பது அறிஞர்களது கருத்து.

தெய்வங்களுக்கு உணவுப் பண்டங்கள் படைக்கும் வழக்கம், தெய்வங்களின் உருவங்களை ஊர்வலமாகக் கொண்டு செல்லும் வழக்கம் ஆகியனவும் இருந்தன என ஊகிக்கலாம்.

**கோயில்:**

சிந்துவெளி நாகரிகத்துடன் ஒத்த பழமைவாய்ந்த பபிலோனிய நாகரிகத்தில் கோயில் முக்கிய இடம்பெற்றிருந்தது. அதுபோலச் சிந்துவெளியிலும் கோயில்கள் இருந்திருக்கவேண்டும் என்பது டாக்டர் மக்கேயின் கருத்து.

ஆனால் கோயில் என்று அறுதியிட்டுக் கூறக்கூடிய கட்டடங்களோ, வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டன என்று கூறக்கூடிய பெரிய விக்கிரகங்களோ சிந்துவெளியில் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**ஊகம் தழுவிய கருத்து**

இதுவரை கிடைக்கப்பெற்ற சான்றுகளைக் கொண்டு இந்து சமயத் தெய்வங்கள் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றின் தொடக்க நிலையினைச் சிந்து வெளி நாகரிகம் காட்டி நிற்கின்றது என்ற கருத்தை சேர் ஜோன் மார்ஷல் வெளியிட்டுள்ளார்.

சிந்து வெளியில் இருந்தது சைவ சமயமே என்றும் பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தக் கருத்துக்கள் ஆராய்தற்குரியன.

இன்றைய இந்து மதவழிபாட்டு முறைகளின் சாயல் சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட சின்னங்களில் காணப்படுகிறது என்பது உண்மை.

அங்கு கிடைத்துள்ள சான்றுகளைக்கொண்டு, இந்து மதவழிபாட்டின் தொடக்க நிலையினைச் சிந்து வெளிச் சமயம் சுட்டி நிற்கிறது என்ற கருத்தை முதலில் மேனுட்டு அறிஞர்கள் வெளியிட்டனர்.

ஆனால் அங்கு கிடைத்துள்ள உருவங்கள் எல்லாம் வழிபாட்டிற்குத்தான் பயன்படுத்தப்பட்டன என்று அறுதியிட்டுக் கூறப்போதிய சான்றுகள் இல்லை.

குறிப்பாக இலக்கியச் சான்றுகள் இல்லை. சமகால இலக்கியச் சான்றுகள்தான் இந்தப் பிரச்சினைக்குச் சந்தேகத்திற்கு இடமற்றமுறையில் விளக்கம் கொடுக்கவல்லன.

நாம் அச்சமயம் பற்றிக் கூறுபவையெல்லாம் வெறும் ஊகம் தழுவிய கருத்துக்களே.

**இந்து மதத்தின் பழைமை**

இந்து சமயத்தின் பழைமையை நாம் இந்துவெளி நாகரிகத்தைக்கொண்டு நிறுவ வேண்டிய அவசியம் இல்லை. என்று சிந்திக்கும் திறனுடைய மனிதன் தோன்றினானோ, அன்றே தோன்றியது இந்து மதம்.

அன்று முதல் நடந்துவரும் பரிணாம வளர்ச்சியின் மலர்ச்சியே இன்றைய இந்துமதம், சிந்துவெளிச்சமயம்,இந்து சமயம் எனக் கொண்டால், அது இந்து சமயத்தின் பழங்கால வளர்ச்சியின் ஒரு கட்டத்தைக் குறிக்கிறது எனலாம்.

**சிந்துவெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தவர் யார்?**

இந்து நாகரிகம் ஆரியருடையது என்பர் ஒரு சாரார்; திராவிடருடையது என்பர் இன்னொரு சாரார். இது இந்த இரண்டு இனத்தவருமே அல்லாத பிறிதோரினத்தவருடையது என்ற கருத்தும் உண்டு.

சிந்துவெளிச் சின்னங்களை ஆராய்ந்த அறிஞர்கள் ஒன்றுக்கு மூன்று என்ற விகிதாசாரத்தில் திராவிடர் பக்கமே சார்ந்துள்ளனர்.

அது ஆரியருடையதல்ல என்று கூறுவதற்குச் சில வலுவான காரணங்கள் உள்ளன. சிந்துவெளி நாகரிகம் நகர நாகரிகம் ஆரியரது நாகரிகம் கிராமிய நாகரிகம்.

இருக்கு வேத காலத்தில் உருவ வழிபாடு இருந்ததாகத் தெரியவில்லை. சிந்துவெளி மக்கள் உருவவழிபாடு செய்தனர்.

ஆரியர் ஆண் தெய்வங்களையே பெரிதும் வழிபட்டனர். சிந்துவெளியில் பெண் தெய்த வணக்கமே முதன்மை பெற்றிருந்தது போலக் காணப்படுகிறது.

ஆரியர் பசுவை வழிபட்டனர். சிந்துவெளிமக்கள் எருதுக்கே முக்கியத்துவம் அளித்தனர்.

சிந்துவெளி எழுத்துக்கள் இன்னும் சரியாக வாசிக்கப்படவில்லை. பலநாட்டு அறிஞர்கள் அவற்றை வாசித்துவிட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டாலும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு பொதுவான முடிபு இன்னும் எட்டப்படவில்லை என்பதையும் மறந்துவிடலாகாது.

அந்த எழுத்துக்கள் வாசிக்கப்பட்ட பின்பே அந்த நாகரிகத்தைத் தோற்றுவித்தவர் யார்? என்ற வினவுக்கும் சரியான விடை கிடைக்கும். ★

- அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை -
(பி. ஏ. இலங்கை – கல்வியில் டிப்ளோமா)

# நெப்போலியன் வாழ்வில்...

ஓரிடத்தில் ஏதோ வேலை நடைபெற்றுக்கொண்டிருந்தது. பல கூலியாட்கள் மிகக் கனமான தூண்களைத் தூக்க முயற்சித்துக்கொண்டிருந்தார்கள். அம்முயற்சியில் வியர்த்து விறுவிறுத்துப்போய் நின்றார்கள். அப்போது நெப்போலியன் அவ்வழியே வந்தான்.

வேலைவாங்கிய வண்ணம் கட்டட வேலையை குத்தகை எடுத்தவன் அங்கே நின்றுகொண்டிருந்தான். நெப்போலியன் அவன் அருகே சென்று,

'பாவம், இவர்கள் செய்யும் இந்த வேலையில் நீங்களும் ஏன் கைகொடுத்து உதவக்கூடாது?' என்றான்.

இதைக் கேட்டதும் அந்தக் கண்டக்ரருக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்தது. பற்களைக் கடித்து 'தெரியுமா, உனக்கு நான் யாரென்று'? என்றான்.

நெப்போலியனோ அதற்கு அமைதியாக 'இந்த வேலையை எடுத்து நடத்தும் கண்டக்ரராக்கும்' என்றான்.

நெப்போலியன் பிறகு ஒன்றுமே பேசவில்லை. கூலிகளோடு ஒன்றுசேர்ந்து தூண்களைத் தூக்கும் அந்த வேலையில் தானும் ஈடுபட்டுவிட்டான்.

'பைத்தியக்காரனாக இருப்பான் போலிருக்கிறதே இந்த மனிதன்' என்று எண்ணியபடி அந்தக் குத்தகைக்காரன் அவனிடம் சென்று,

'நீ யார்? நான் உன்னை கூலி வேலைக்கு அமர்த்திக் கொள்ளாமல் இருக்கும்போது நீயாகப் போய் வேலைசெய்கிறாயே' என்று கேட்டான்.

நெப்போலியன் பதில் கூறினான் 'சகோதரரே! உங்களுக்கு என்னைத் தெரியாது போலும், இந்த ஏழையைத்தான் நெப்போலின் என்று கூறுவார்கள்'.

செல்வன்.
வே. பவதாரணன்

## விருந்தில் பெற்றி!

விருந்தில் ஒருநாள் என்றிட்டாள்
சின்னச் சிறுமி பெற்றிதான்
வயது நாலு தானிருக்கும்
சின்னச் சிறுமி ஒருத்திதான்
கதிரை தடுக்கி நிலத்திலே
தடா லென்று விழுந்திட்டாள்
என்னைத் தவிர சபையிலே
யாவருமே சிரித்தனர்.
எனது அருமைக் கண்மணி
நீ சிரிக்க வில்லையோ
என்று தாயும் மகிழ்ந்துமே
உச்சி மோந்து கொண்டனள்.
மகளின் கருணை எண்ணியே
பெரு மிதமும் அடைந்தனள்
எந்தன் சின்னக் கண்மணி
சிரிக்க வில்லை என்றனை
காரணம் என்னவோ
எனக்கு நீயும் சொல்லுவாய்
நானே தானே விழுந்தது
எப்படித் தான் சிரிப்பது
என்றுமே சின்ன பெற்றி
விரைந்து பதில் கூறினள்.

(Betty At The Party என்ற ஆங்கிலக் கவிதையில் இருந்து.)

—ராசி

# ஓடும் மேகங்களே!

மனித வாழ்வில் மேகங்களுக்கு முக்கியமான இடம் உண்டு. படைப்பின் தொடக்கத்தில் இருந்து மேகங்கள் மனிதகுலத்திற்கு மழையைத் தந்துகொண்டிருக்கின்றன.

மழையில் இருந்து பொழியும் நீர்தான் மனிதர்களும், மற்ற உயிரினங்களும், தாவரங்களும் உயிர்வாழ்வதற்கு ஆதாரமாக இருக்கிறது.

மேகங்கள் எத்தனை விதம் என்பது உங்களுக்குத் தெரியுமா...?

வானத்தில் உள்ள மேகங்களை நோக்கும்போது அவை எல்லாம் ஒரே அளவில் இருப்பதில்லை என்பது தெரிய வரும்.

உருவ வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு மேகங்களை இவ்வாறு வகைப்படுத்தலாம்.

**மென்பஞ்சியல் முகில்கள் (SIRRUS CLOUDS)**

இவை 8 முதல் 11 கிலோ மீற்றர் உயரத்தில் உருவாகின்றன. வெண்ணிறமான இம்முகில்கள் புள்ளினங்களின் இறகை ஒத்திருக்கின்றன. இவை சின்னஞ்சிறு பனிக்கட்டிகளால் ஆனவை.

**பாவடிவ முகில்கள் (STRATUS CLOUDS)**

இம்முகில்கள் 8,000 அடி உயரத்தில் உருவாகின்றன. மூடுபனியின் படுகைகளைப் போன்ற இம் முகில்கள் மழை மூட்டத்துக்கும், தூறலுக்கும் அறிகுறியாகும்.

**திரள் குவிக்கரு முகில்கள் (CUMULUTLOUDS)**

நாலாயிரம் அல்லது ஐயாயிரம் அடி உயரத்தில் உருவாகும். இவை வானத்திலே வெண்ணிற மாலை போலத் தோற்றமளிக்கும்.

**மழைமுகில்கள் NIMLOSTDATUSDLOUDS**

தாழ்ந்து காணப்படும் இவ்வகை மேகங்கள் கருநிறமாகவே இருக்கும். இம்முகில்கள் தான் மழை தருகின்றன.

**சில மேகங்கள் மழை பொழியாமல் போவதேன்?**

மழை காலத்தில் அடிக்கடி வானத்தில் மேகக்கூட்டங்கள். சூழ்வதைக் காணலாம். இதோ மழை அடித்துக் கொட்டப்போகிறது என்று தோன்றும்.

சில சமயம் மழை பெய்யவும் செய்யும். ஆனால் ஒரு துளிகூட மழை பெய்யாமல் மேகங்கள் மறைந்துவிடும் சந்தர்ப்பங்களும் உண்டு.

எல்லா மேகங்களிலிருந்தும் மழைபெய்யாததன் காரணம் என்ன தெரியுமா...?

சூரிய வெப்பத்தினால் பூமியில் உள்ள நீர் நீராவியாக மாறி வாயுமண்டலத்தில் உயர்ந்து போய்க் கொண்டே இருக்கிறது.

வேனீர் காலத்தல் நீராவியாதல் மிக வேகமாக நிகழ்கிறது. இதன் பயனாக வாயு மண்டலத்தில் நீராவியின் அளவு அதிகரிக்கிறது.

சுற்றுப்புறக் காற்று சற்றேனும் குளிர்ந்து விட்டால் நீராவி கெட்டியாகி நீர்த்துளியாக மாறுகிறது. கெட்டியான இந்த நீராவித் திரளில் எண்ணிறந்த மழைத்துளிகள் அடங்கியுள்ளன.

நீர்நிறைந்த மேகங்களின் கீழ்ப் பகுதியிலுள்ள காற்று குளிர்ச்சியடைந்தால் மேகத்தில் உள்ள மழைத்துளிகளின் எண்ணிக்கை பெருகுகிறது. கடைசியாக நீர்உண்ட மேகங்கள் மழையாகப் பொழிகின்றன. ★




# கூந்தல் அழகை பாதுகாக்க பாவையர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில வழிமுறைகள்

'ஆகா... இந்தப்பெண் எவ்வளவு அழகாக இருக்கிறாள்' என்று பார்ப்பவர்கள் 'சேட்டிபிக்கேற்' கொடுக்கிறார்கள் என்றால் அதற்கு நிச்சயமாக அவளுடைய கூந்தலும் ஒரு காரணம்தான்.

கூந்தல் நீளமாகவோ, கட்டையாகவோ இருந்தாலும் அதனைப் பராமரிக்கும் முறையிலேயே அதன் அழகு தங்கியுள்ளது.

அடர்த்தியான கூந்தலோ அழகைத் தருகிறது. சிலருக்கு முடி உதிர்ந்து தலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக முடி இருப்பதைக் காணலாம். முடிகொட்டுவதற்குபல காரணங்களைக் கூறலாம்.

**முடிகொட்டுவதற்கு....**

பலத்த காற்றும், மிகக் கடுமையான வெயிலும் அடிக்கடி முடிமீது பட்டுத் தெறிப்பதால் முடி கொட்டுவதற்கு வாய்ப்புண்டு.

பலத்த காற்றுஎன்று சொல்லும்போது, பலமாகச் சுழலும் மின்விசிறிக் காற்று அடிக்கடி நம் தலைமுடியில் படும்போதும் முடிகொட்டும் நிலை ஏற்படுகிறது.

அடிக்கடி சோப்பை தலைக்குப் போட்டுச் குளித்தாலும், சரியான சத்தான உணவைச் சாப்பிடாமல் விட்டாலும் முடிஉதிரும்.

உடலில் உள்ள ஹோர்மோன்களின் அளவு சரியாக இல்லாமல் இருந்தாலும், ஒருவர் அதிகமாக அதிர்ச்சி அடைந்து மன இறுக்கத்திற்கு ஆளானாலும், உடலில் ஏற்படும் மாறுதலினாலும், கூந்தலைச் சரியானமுறையில் பராமரிக்காது விடுவதாலும் கூந்தல் உதிர்கிறது.

சாதாரணமான ஒவ்வொருவர் தலையிலும் ஒருலட்சத்திலிருந்து ஒன்றரை லட்சம் வரை தலைமுடிகள் இருக்கின்றன. இவற்றில் தினந்தோறும் 40இல் இருந்து 100 இழைமுடிகள்வரை உதிர்கின்றன. இவற்றுக்குப் பதிலாக மிக விரைவில் புதிய முடிகள் முளைத்தும்விடுகின்றன.



உடலிலுள்ள ஹோர்மோன்களின் அளவில் ஏற்படும் ஒவ்வொரு மாறுதலும் கூந்தலில் மாறுதலை ஏற்படுத்துகிறது.

குடும்பக் சட்டுப்பாடு மாத்திரைகளில் சேர்க்கப்பட்டுள்ள ஹோர்மோன்களின் விளைவாக, தற்காலிகமாகக் கூந்தல் உதிரலாம். பின் இவற்றைப் பாவிக்காது நிறுத்தும்போது உதிரும். ஆனால் சில மாதங்களில் உதிர்வது நின்றுவிடும்.

கூந்தலே நமது உடல் ஆரோக்கியத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக உள்ளது;

ஒருவருக்குக் கூந்தல் உதிர்கிறது என்றால் அது நம் உடலுக்கு ஏற்பட்டுள்ள கோளாறைப்பற்றி எச்சரிக்கை செய்வதாக அமைகின்றன.

எடுத்துக்காட்டாக கூந்தல் உதிர்வது, மண்டையில் நமைச்சல், எமக்கு அனீமியா, தைராய்டு சுரப்பி, கல்லீரல் சரியாக வேலை செய்யவில்லை, நீரிழிவு நோய் போன்ற கோளாறுகள் ஏற்பட்டிருக்கலாம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

**இளநரை**

பொதுவாக 40 வயதுக்கு மேல்தான் நரை தோன்றும், ஆனால் இன்று 4 வயதுப் பிள்ளைகளின் கூந்தல் கூட வெள்ளிக்கம்பிகளாகக் காணப்படுகிறது. இப்படியேபோனால் அடுத்த அடுத்த சந்ததிகளில் கறுப்பு முடியைக் காண்பதே அரிதாகிவிடும்.

இந்த இளநரைக்குக் காரணம் பல கூறலாம். முக்கியமாக தாய், குழந்தையை வயிற்றில் இருக்கும்போது தேவையான சத்துணவை உண்ணாமல் விடுவது முக்கிய காரணமாகும்.

குழந்தை பிறந்தபின் வளரும்போது அதற்குவேண்டிய போஷாக்குணவு இல்லாததாலும்,

காற்றும், நீரும் நாளுக்கு நாள் அசுத்தமாகி வருவதும் இளநரைக்குக் காரணங்களாக அமைகின்றன.

**இளநரை போக**

இளநரையை மறைக்க பலர் பலவிதமான 'டை' வகைகளைப் பாவிக்கிறார்கள். இது இருக்கும் முடியையும் கொட்டுவிக்கும் முயற்சியாக அமையலாம்.

எனவே கீழே தரப்படும் இயற்கை வழியை ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்.

இளநரையுள்ளவர். ஒவ்வொருநாளும் காலை வெறும் வயிற்றில், கருவேப்பிலையில் ஒருபிடி எடுத்து, அரைத்து, 'மாபிள்' அளவு உருண்டை பிடித்து தண்ணீருடன் உட்கொண்டுவந்தால் நிச்சயமாசப் பலனளிக்கும். தொடர்ந்து ஒருமாதத்திற்குச் செய்தல்வேண்டும்.

**கூந்தலைப் பராமரிக்கும் முறை**

கூந்தலைப் பராமரிக்க 'விட்டமின்கள், தாதுப்பொருள்கள் அடங்கிய சத்துள்ள உணவுவகைகளைச் சாப்பிடவேண்டும்.

நிறையப் பழங்கள், பச்சைக்காய்கறிகள், மீன், முட்டை, பருப்பு வகைகள் போன்றவற்றை உண்ண வேண்டும்.

[illegible] காற்றோட்டமான இடத்தில் நடப்பதும், முடியுமானால் தினமும் கூந்தலை நீரினால் அலசுவதும்நல்லது:

அலசும்போது மிருதுவான ஷாம்புவை உபயோகியுங்கள். ஷாம்பு எவ்வளவுக்கு எவ்வளவு மிருதுவாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அது கூந்தலுக்கு நல்லது.

ஷாம்புவைப் பயன்படுத்தும்போது முதலில் கூந்தலை நன்றாக நீரில் நனைத்த பின் ஷாம்புவை கையில் சிறிது சிறிதாக எடுத்து கூந்தலில் பரவலாகத் தடவவும்.

தலை ஈரத்தைப் போக்கும்போது ஒரு கெட்டியான ஆனால் மிருதுவான துவாயால் மெதுவாகத் துடைத்து ஈரத்தைப் போக்கலாம்.

பின் கூந்தல் ஈரம் தானாகக் காயவிடவேண்டும். கூந்தல் ஈரமாக இருக்கும்போது 'பிரஸ்'செய்யவோ, சீப்பினால் இழுக்கவோ கூடாது. இப்படிச் செய்வதால் கூந்தல் முறிந்துபோகும்.

கூந்தலைப் பாதிக்கக்கூடிய எண்ணெய், சாயம் பூசுதல், 'பிளீச்சிங்' செய்தல் தவிர்க்கவும்.

கண்ட கண்ட விளம்பரங்களைப் பார்த்து அதன் படி கூந்தலை வளர்க்கலாம் என்று முயற்சிப்பதை நிறுத்தி இயற்கையான வழியில் முறையான உணவு வகைகளின்மூலம் கூந்தலைப் பாதுகாக்கலாம். ★

## மோர் இல்லையென்றால்

பாலைத் தயிராக்குவதற்கு மோர் இல்லையா...? நான்கு பச்சைமிளகாய்க் காம்புகளைப் பாலில் போட்டு வைத்துவிடுங்கள். மறுநாள் நல்ல கெட்டியான தயிர் கிடைத்துவிடும். ★




# ஆடிக்கூழ் செய்வது எப்படி?

நவநாகரிகம் மலிந்துள்ள இந்நாட்களில் உடையில் இருந்து உணவு வரைக்கும் மாற்றங்கள் ஏற்பட்டாலும் பழைமையையும் நாம் மறந்துவிடவில்லை.

தீபாவளி, பொங்கல் போன்று ஆடிப் பிறப்பும் தமிழர் வாழ்வில் முக்கிய இடம் பெறுகிறது.

தைப்பொங்கல் வேளைகளில் சர்க்கரைப் பொங்கல் எப்படியோ, அப்படியே ஆடிப்பிறப்பு நாளில் ஆடிக்கூழ் முக்கிய இடம்பெற்று வீட்டில் உள்ளவர்களையும் விருந்தினரையும் மகிழ்விக்கிறது.

ஆனால் வளர்ந்து வரும் இளைய தலைமுறை கேக், ஐஸ் கிறீம் செய்வதற்குக் காட்டும் ஆர்வம் நம் பழைய உணவு முறையில் காட்டுவதில்லை. இதனால் பலருக்கு ஆடிக்கூழ் செய்யும் விதம் தெரிவதில்லை.

இந்த உணவுமுறை ஆடிப் பிறப்பு நாளில் மட்டும் செய்யும் உணவு அல்ல. அன்றாடம் நம் வாழ்வில் சேர்த்துக் கொள்ள வேண்டிய போஷாக்கு நிறைந்த உணவாகும். எனவே அதனைச் செய்யும் விதத்தைக் கீழே தருகிறோம்.

**வேண்டிய பொருட்கள்:**

சிவப்பு பச்சை அரிசிமா – 1 சுண்டு
உழுத்தம் மா – ½ சுண்டு
அளவானபனங்கட்டி – 1
வறுத்த பயறு – ½ சுண்டு
தேங்காய்ச் சொட்டு – 1 பிடி
½ தேங்காய் பிழிந்த பால்
சீரகம், மிளகுப்பவுடர் – ½ கரண்டி
சிறிதளவு உப்பு

**செய்யும் விதம்:**

முதலில் பயறை நீர் ஊற்றி அவிய விடவும். அகன்ற வாய் உள்ள பானையிலோ பாத்திரத்திலோ அரிசிமா, உப்பு, உழுத்தம்மா மூன்றையும் தேங்காய்ப்பாலில் கரைத்து, அதற்குள் பனங்கட்டியையும் சிறிதாக வெட்டிக் கலந்து வைக்கவும்.

ஒரு பிடி அரிசிமா எடுத்து நீர் விட்டுக் குழைத்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டவும்.

உருண்டைகளை அவிந்து வரும் பயறுடன் போட்டு அவிக்கவும். பின் உருண்டை அவிந்ததும் தேங்காய் சொட்டையும் போட்டு ஐந்து நிமிடங்கள் வேக வைக்கவும்.

கடைசியாக அரிசிமா, உழுத்தம்மா கலவையையும் பயறுடன் கலந்து கூழ்ப்பதம் வரும் வரைக்கும் கைவிடாது கரண்டியால் கலக்கிக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையென்றால் மா கட்டியாகி கூழ்ப்பதத்தை இழந்து விடும்.

கூழ்ப்பதம் வந்தவுடன் மிளகு சீரகப்பொடியைப் போட்டு இறக்கி சூட்டுடன் பரிமாறலாம். ★

— உஷா —

## வெய்யில் காலத்தில்...

வெய்யில் காலத்தில் உணவில் நிறைய வெங்காயம் சேர்க்க வேண்டும்.

இது வெய்யிலினால் ஏற்படும் சூட்டைத் தணிக்கும். வயிற்றுப்புண், வயிற்றுக் கடுப்பு வராமல் பாதுகாக்கும்.

முடிந்தால் வெங்காயத்தை நல்லெண்ணெயில் சிறிது உப்பு போட்டு வதக்கி காலையில் குழந்தைகளுக்கு வெறும் வயிற்றில் கொடுங்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பூலன்தேவி'யாக ஆங்கில நடிகை

'இந்த நூற்ருண்டின் வீர புருஷர்களில் இவரும் ஒருவர். இவரது வாழ்க்கையை ஊன்றிப்பார்க்கையில் இவர் வாழ்க்கையின் பல்வேறு பரிணமங்களை நாம் காணமுடியும்.

இவரது வாழ்க்கையில் ஆன்மீகக் கூறுகள் உள்ளன; ஆணுதிக்கம் மிகுந்த ஒரு சமூகத்தில், இவர் ஏவலுக்கு ஆண்கள் காத்திருக்க இவர் தலைவி ஆகிருர்;

உலகில் வேறெங்கும் இவர் போன்ற ஒரு வீர மங்கையைக் காண்பதற்கில்லை;

இவர், முதல் பெண் ரொபின்ஹூட்

— இப்படி இந்திய கொள்ளைக்காரி பூலன்தேவியை வர்ணிக்கிருர் ஆங்கிலத் திரைப்பட வசனகர்த்தா ஜோன் ரைட்.

பாரீஸ் பத்திரிகை ஒன்றில் பூலன்தேவி பற்றிய கட்டுரையை இவர் முதலில் பார்த்திருக்கிருர்.

ஒரு திரைப்படத்திற்கான விஷயதானம் பூலன் வாழ்க்கையில் இருப்பதைக் கண்டதும், 'ரைட்டின்' சினிமா புத்தி வேலை செய்துவிட்டது.

பூலன் பற்றிய எல்லாச் செய்திகளையும் சேகரித்தார். படத்தயாரிப்பாளர் ஒருவரும் இவருக்குக் கிடைத்தார்.

'என்டர் தி ட்ராகன்' படத்தைத் தயாரித்தவர்கள் பூலன் தேவியின் கதையைப் படமாக்குகிருர்கள்.

பொதுவாக ஒரு ஹொலிவூட் படத்திற்கு சுமார் பதினுறு மில்லியன் டாலர்கள் செலவாகும். 'பூலன்தேவி' படத்திற்கு இருபத்திரண்டு மில்லியன் டாலர்களைக் கொட்டியிருக்கிருர்கள். மெக்சிக்கோ அல்லது பெருநாட்டில் படப்பிடிப்பை நடத்தவிருக்கிருர்கள்.

பிரபல ஹொலிவூட் நடிகைகள் 'பூலன்தேவி' பாத்திரத்திற்குப் போட்டியிட்டு இருக்கிருர்கள்.

ஆனுல் படத் தயாரிப்பாளர்கள் புதுமுகம் ஒன்றையே தேடுகிருர்கள்.

பூலன்தேவியின் மனஅழகை வெளிக்கொணர வல்லவராக உள்ள ஒருவராகப் பார்க்கிருர்கள். அவர் இந்தியராக இருக்கவேண்டும் என்ற அவசியமில்லையாம்.

இந்தியா அல்லது பாகிஸ்தானில் கிடைக்கிருர்களா என்று பார்ப்பார்களாம்.

இல்லையென்ருல் இத்தாலி அல்லது ஸ்பெயினில் பார்த்துக்கொள்வார்களாம்.

படம் வீரதீர சாகஸங்கள் நிறைந்ததாக இருக்குமாம், கூடவே, பூலன்தேவி ஏன் கொலை வாழ்க்கையை மேற்கொண்டார் என்பதைப்படம் கொஞ்சம் ஆழமாகவே ஆராயுமாம். ★

## நடனக் கலைக்காக வாழும் பத்மா சுப்பிரமணியம்

பரதநாட்டியம் என்ருல் குமாரி பத்மா சுப்பிரமணியத்தின் பெயர் உலகம் முழுவதும் நினைவுக்குவருகிறது.

முப்பது ஆண்டுகளுக்குமேல் நடன நிகழ்ச்சி நடத்திவரும் பத்மா, நாட்டிய சாஸ்திரம் பற்றி ஆராய்ச்சிசெய்து டாக்டர் பட்டமும் பெற்றிருக்கிருர்.

மறைந்த சினிமாமேதை டாக்டர் கே. சுப்பிரமணியத்தின் புதல்வியான இவர் தாயார் மீனுட்சியிடம் முறைப்படி சங்கீதம் பயின்றவர். இப்போது இசையில் முதுகலைப்பட்டம் பெற்றிருக்கிருர்.

ஒரு நடனக் கலைஞராக, நடன ஆசிரியையாக, நடன ஆராய்ச்சியாளராக, நடனக் கலைபற்றி எழுதும் எழுத்தாளராக, நடன நாடகங்களை எழுதித் தயாரிப்பவராக, அதை இயக்குபவராக, இசை அமைப்பாளராக பல்வேறு திறமைகளைப் பெற்று புகழுடன் திகழ்கிருர் பத்மா சுப்பிரமணியம்.

காஞ்சி, காமகோடி பீடம் பெரியவர் நல்லாசியுடன் பத்மா சுப்பிரமணியம் ஒரு நல்ல காரியம் செய்திருக்கிருர்.

நாட்டிய சாஸ்திரத்தில் உள்ள 108 கர்ண வடிவங்களை கருங்கல்லில் டிசைன்செய்து, அதை மராட்டிய மாநிலம் சதாராவில் உள்ள நடராஜர் கோவிலுக்கு அளித்து இருக்கிருர்.

புதிய இளம்நடனக் கலைஞர்களை உற்சாகப்படுத்துவதிலும் பத்மா சுப்பிரமணியம் ஆர்வமாக இருக்கிருர்.

இதற்காக மகாபலிபுரத்தில் நாட்டிய சாஸ்திரி பயிற்சி முகாமை நடத்திஞர்.

நாற்பது வயதைத் தாண்டிவிட்ட பத்மா சுப்பிரமணியம் இன்னும் திருமணம்செய்து கொள்ளவில்லை. நாட்டியத்திற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டார்.

● 'திருமணம் செய்யாதது உங்களுக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறதா?'

பதில்:– நிச்சயமாக இல்லை. நான் 5 வயது முதல் ஆடுகிறேன். பரதக்கலை என் உடலோடு, உயிரோடு ஒன்றிவிட்டது. அதனுல் திருமணம் பற்றி நான் சிந்திக்கவில்லை. நான் சந்தோஷமாகவே இருக்கிறேன். ஆண்டவன் எனக்கு எந்தக்குறையையும் வைக்கவில்லை. ஒருபெண் கண்டிப்பாக திருமணம்செய்து கொள்ளவேண்டும் என்று கட்டாயம் எதுவும் இல்லையே. ★

## சென்னை ஸ்ருடியோக்களில் ...

'சொந்தம் — 16 - இத்தலைப்பில் புதியபடம் ஒன்றை ஸ்ரீதுர்கா பிலிம்ஸார் தயாரித்து வருகின்றனர்.

மோகன்–கல்யாணி ஜோடியாக நடிக்கும் இப்படத்தை டி. எஸ். கிருஷ்ணகுமார் டைரக்ட் செய்கிருர்.

துர்கா பிலிம்ஸ் தயாரிக்கும் இன்னெரு படத்தின் பெயர் 'சின்ன மாப்ளே பெரிய மாப்ளே!'

## துக்கத்தின் முடிவே சிரிப்பின் ஆரம்பம்; நடிகர் நாகேஷ் கூறும் கண்ணீர்க் கதை!

அமராவதி ஆற்றங்கரையோரம்.........

சிதை ஒன்று எரிந்து கொண்டிருக்கிறது.

அருகில் உள்ள வீதியில் வந்துகொண்டிருந்தது ஒரு கார்.

உள்ளே இருந்தவரின் கண்களில் சிதை எரிவது தென்படுகிறது.

அதைச் சுற்றிக் கவலையுடன் நிற்பவர்களைப் பார்க்கிருர்.

என்ன! எல்லாம் தெரிந்த முகங்களாக உள்ளனவே;

இப்படி எண்ணியவர் காரை நிறுத்திவிட்டு இறங்கிச் சிதை அருகே செல்கிருர். மாமனுர் சிதைக்குத் தீமூட்டுவதைக் காண்கிருர்.

குழுமியிருந்தவர்களை வினவுகிருர். விஷயம் தெரிந்தவுடன் அப்படியே உட்கார்ந்து விடுகிருர் 'அம்மா' என்ற அழுகையுடன்.

'அன்னை இல்லம்' படப்பிடிப்பை முடித்துக்கொண்டு தான் வாங்கிய புதுக்காரை அம்மாவிடம் காட்டி ஆசிபெறச் சென்றவர், ஆற்றங்கரையோரத்தில்.........

அன்றே அவர் தீர்மானிக்கிருர்.

'இனி நான் சிரிக்கமாட்டேன். மற்றவர்களைச் சிரிக்க வைப்பதே இனி எனது பணியாக இருக்கும்'—

இப்படி அவர் எடுத்த சபதம் ஆற்றங்கரை மணலாக மாறவில்லை.

ஆனுல்...

இன்று தமிழ்த்திரையுலகில் கோடிக்கணக்கானவர்களைத் தத்துவக் கருத்துக்களை நகைச்சுவையுடன் கலந்து வழங்கி சிரிக்க சிந்திக்க வைக்கும் சிரிப்பு நடிகராக மாற வைத்தது.

அவர்தான் நாகேஷ்.

சிரிப்பின் ஆரம்பமே துக்கத்தின் முடிவாகும்— இப்படி நாகேஷ் கூறுகிருர்.

பேரும் புகழும் ஒருவர் வாழ்வில் இடைக்கிடை தோன்றுபவையே என்கிருர் நாகேஷ்



நாகேஷ்

அவரின் சபதம் அவரை நாள் ஒன்றுக்கு 20 – 22 மணித்தியாலங்கள் வரை பட உலகில் உழைக்க வைத்தது.

அக்காலத்தில் நாகேஷ் இல்லாத படமே கிடையாது.

திரைப்படத்தில்தான் அவர் சிரிக்க வைக்கிருர் என்று சொல்லிவிட முடியாது.

சிறுவனுக இருந்த காலத்திலும் அவர் அனைவரையும் சிரிக்க வைத்திருக்கிருர்.

பாடசாலை நாட்களில் ஒரு நாள்.........

அடுத்த நாள் பரீட்சைக்கு மாணவர்கள் சுறுசுறுப்பாக தயார் செய்துகொண்டிருக்கிருர்கள்.

நாகேஷ் வகுப்பறைக்குள் நுழைகிருர்... 'இன்று என்ன பாடத்திற்கு சோதனை வைக்கப்படுகிறது?'— அவரின் கேள்வி கேட்டு மாணவர்களின் சிரிப்பொலி எழுகிறது.

பாடசாலை அதிபருக்கு ஒரு முறை அவர் லீவு கோரி கடிதம் அனுப்புகிருர்.

'வருகிற புதன்கிழமை எனக்கு காய்ச்சல்வரவுள்ளது. அதற்காக எனக்கு லீவு வழங்கவேண்டும்'—

இதுதான் கடிதவாசகம்.

அதிபர் நாகேஷிடம் விளக்கம் கேட்டார்.

'வருகிற புதன்கிழமை பாடசாலை வருடாந்த விழாவை நடத்த முடிவு செய்திருக்கிறீர்கள்.

'அது நிச்சயமாக நடக்கும் என்று நீங்கள் நினைத்தால் எனக்குக் காய்ச்சல் வருவதும் நிச்சயமானது ஒன்று.

'நீங்கள் இறக்கலாம்; அதனுல் வருடாந்த நிகழ்ச்சி ரத்தாகலாம்.

'நானும் காய்ச்சலை எதிர் பார்த்து லீவு கேட்டுள்ளேன். காய்ச்சல் வருவதற்கான அறிகுறிகள்இப்பொழுது இருந்தே எனது உடலில் தென்படுகின்றன' —நாகேஷின் விளக்கக் கடிதம் இது.

விஷயத்தை அதிபர், நாகேஷின் பெற்ருேருக்குத் தெரியப்படுத்துகிருர்.

'பாடசாலையில் ஆசிரியரும் வீட்டில் தந்தையும் எனக்கு நன்ருக அடிகொடுத்தார்கள்' —சிரித்தபடி நாகேஷ் கூறுகிருர்.

நாகேஷின் படம் ஒன்றின் ஆரம்பவிழா...

வயோதிபர் ஒருவர் நாகேஷை அணுகி 'ஐயா என் கண்ணில் 'கட்டராக்ட்' நோய். பார்வைபெற சத்திர சிகிச்சை செய்யவேண்டியுள்ளது. பண உதவி செய்யுங்கள்' —என்று கேட்கிருர்.

நாகேஷ் அவதானமாகக் கேட்டார்.

பின்னர் 'இம்மாதம் எனக்கு நிறைய பணக் கொடுப்பனம் உண்டு. என்னை நீங்கள் நம்புங்கள் இந்த உலகில் பார்க்கக்கூடியதாக ஒன்றுமே இல்லை. ஆனுல் பார்வை பெற்று உலகைப் பார்க்கம் வேண்டும் என்று நீங்கள்விருகபினுல் அடுத்த மாதம் வாருங்கள் பணம் தருகின்றேன்'— இப்படி நாகேஷ் கூற,

வயோதிபரோ பலத்த சிரிப்புடன் அந்த இடத்தை விட்டுச் சென்ருர்.


இப்படி அர்த்தமுள்ள சிரிப்புக்களின் மன்னராக விளங்கும் நாகேஷுக்கு இன்று வயது 57.

அவரது வீட்டில் ஒரே ஒரு படம் மட்டுமே உண்டு. அது பிரபல ஹொலிவூட் சிரிப்பு நடிகர்ஜெர்ரி லூயிஸின்படம்

| வெள்ளித்திரையில் |

## சொற்சிலம்பம்

### போட்டி இல: 104



சொற்சிலம்பம் இல: 104
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................
விலாசம்: ..............................
..............................

———— இங்கே வெட்டுக ————

**முடிவு திகதி: 26 - 07 - 1989**

**இடமிருந்து வலம்:**

1. உலகை ஆட்டிப்படைத்த அரசர்களில் ஒருவர் 4. முரசு 5. இம்மையும் மறுமையும் 6. இலச்சினை 7. குற்றம் 9. இரத்தம் 10. உடலை வருத்திச் செய்யும் துறவு 11. பழங்களில் இருந்து தயாரிக்கப்படும் உணவு 12. விரோதம் 15. உரு அமையச் செய் 16. ஒரு மலையின் பெயர்.

**மேலிருந்து கீழ்:**

1. ஒரு முள் செடி 2. சிவனை இந்த உருவிலும் வழிபடலாம் 3. மாசு 4. சுழற்றி விளையாடும் சிறு கருவி 5. இரு இனங்களுக்கு இடையில் எழும் பகைமை 9. தேவர் 11. மிருகங்களில் பெரியது 14. சரி என்பதன் பொருள்.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினுல் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## கல்வியா? கடமையா?

### - கீதா தாமோதரம்பிள்ளை -

அந்தவீதியின் முனையில் தபாற்காரனின் மணியோசை கேட்கின்றது. அது மெல்ல மெல்ல நெருங்கி பொன்னம்மாவின் வீட்டு வாசலில் நிற்கின்றது.

பொன்னம்மா சமையற் கட்டிலிருந்தபடி 'பிள்ளை தபால் போல கிடக்கு ஒருக்காப் பாரன்' குரல் கொடுக்கின்ருள்.

அவளின் இளைய மகள் வசந்தி துள்ளிக் குதித்தபடி தபாலைப் பெற்றுக்கொண்டு வருகிருள். 'அம்மா, அண்ணுவிடம் இருந்து கடிதம் வந்திருக்குது'

'ஓ அப்படியே வாசி பிள்ளை வாசி' உற்சாகப்படுத்துகிருள் பொன்னம்மா.

'அம்மா அண்ணை இந்தக் கடிதம் எழுதின அன்று சிலோனுக்குப் புறப்படுகிருராம். மற்றவை எல்லாம் நேரில் என்று எழுதியிருக்கிருர். அப்படிப்பார்த்தால் அண்ணை இப்ப கொழும்புக்கு வந்திருப்பார்'.

'கடவுளே கொழும்பில் இருந்து இங்க வந்து சேருகிற வரைக்கும் எனக்கு நிம்மதி இல்லை.எதற்கும் ஒருக்கா இந்த மரதடிப்பிள்ளையாரிட்டப் போயிட்டு வாறன். நீ சமையலைப்பார்' கூறிவிட்டுத் தாய் புறப்படுகின்ருள்.

தாய் புறப்பட்டுப்போகவும் வாசலில் டாக்ஸி வந்து நிற்கவும் சரியாக இருந்தது. வசந்தி பரபரப்புடன் வெளியே வருகின்ருள். சந்திரன் பொருள்களை இறக்குகின்ருன்.

'ஓ அண்ணு' என்று கூவியபடி சந்திரனை நோக்கி ஓடுகின்ருள்.

'வசந்தி நீ எவ்வளவு பெரிய ஆளாய் வளந்திட்டாய். அம்மா எங்க' கேட்டபடி வீட்டினுள் பிரவேசிக்கின்ருன்.

'ஏன் உங்களிலையும் சரியான மாற்றம்தான். நல்ல வெள்ளையாயும் வந்திட்டீங்கள்' என்றபடி சந்திரனின் கடிதம் வந்த விபரத்தையும் தாய் கோயிலுக்குப் போனதையும் கூறிஞள்.

சந்திரன் குளித்துச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது தாய் வருகின்ருள். மகனைக் கண்டு தாயுள்ளம் மகிழ்ச்சியினுல் பொங்குகின்றது. கட்டியணைத்து முத்தமிடுகின்ருள். தங்கை கொண்டு வந்த பொருள்களை ஆராய்கின்ருள்.

உறவினர்கள், நண்பர்கள் எனப் பலபேர் வந்துபோகின்ருர்கள். சந்திரன் வந்தசேதி கேள்வியுற்று அவனுடைய அக்காவும் அத்தானும் மகளும் வருகின்றனர்.

அக்காவின் கணவரை அவன் இப்பொழுதுதான் நேரில் காண்கின்ருன். ஏனெனில் அவன் வெளிநாட்டில் இருந்தபோதுதான் அவர்களுக்குத் திருமணமாகியது.

'ஓ அத்தான் அக்காவிற்கு ஏற்றவர்தான். பாங் மனேச்சர் என்ற தொழிலுக்கும் தகுதிவாய்ந்தவர்தான்' என அவன் எண்ணுகின்ருன்.

அக்காவின் அழகான மகள் பாலில் விழுந்த திராட்சை என உருளும் கண்களுடன் அவனை மாமா என்று அழைக்கின்றபோது அக்காவின் திருமணத்திற்காக அவன் உழைத்த உழைப்பெல்லாம் ஒரு சிறு சுமையாகத்தான் தெரிந்தது.

வாரங்கள், மாதங்களாகிவிட்டது. சந்திரனின் வெளிநாட்டுக் களை நீங்கி உள்நாட்டுக் களை தொடங்கிவிட்டது. தந்தையில்லாக் குடும்பத்திற்குச் சுமைதாங்கி, வழிகாட்டி அவன்தான்.

தந்தை குடும்பத்திற்கென்று எதுவும் சேர்க்கவில்லை. மூத்த சகோதரியை ஒரு நல்ல இடத்தில் நல்ல சீதனத்தோடு சேர்த்தாயிற்று. இனி இளையவள்தான்.

அவளுக்கும் பல இடங்களில் இருந்து வந்த வண்ணம்தான் இருக்கின்றது. பொன்னம்மாவோ வெளிநாட்டு மாப்பிள்ளை வேண்டாம் என்று அடியோடு மறுத்துவிட்டாள்.

'ஏதோ சின்ன உத்தியோகம் என்ருலும் உள்நாடு பரவாயில்லை. வெளிநாட்டுக்காரர் பிறகு இங்க வரத்தான்வேணும், வந்து நிரந்தரமாக ஒரு தொழில் இல்லாமல் என்ன செய்வது' இதுதான் பொன்னம்மாவின் கருத்து.

சந்திரனுக்கும் தாயின் கருத்து ஒரு வகையில் சரி என்றே தோன்றியது. அதே நேரம் தன் நிலையையும் ஒருதரம் எண்ணிப்பார்த்துக் கொண்டான்.

'தம்பி இப்ப கடைசியாய் வந்தது நல்ல இடம் வீட்டோட காசு ஒன்றரை லட்சம் கேட்கினம் வீடு இருக்குத்தானே காசு தான் உன்னட்ட எவ்வளவு இருக்கு' என்ருர் தயார்.

'அம்மா இந்த ஐந்து வருஷத்தில அக்காவுக்கு வீடு கட்டி காசு கொடுத்து, அடுத்து இந்த வீடு கட்டி நான் இராப் பகலா சம்பாதிச்சும் இப்ப ஒரு லட்சம் தான் என்னட்ட இருக்கு. எதற்கும் ஒருக்கா யோசியுங்கோ' என்ருன் சந்திரன்.

நாட்கள் நகர்ந்தன ஒருவாறு வசந்திக்கும் சிறப்பாகத் திருமணமும் நடந்தாயிற்று.

தற்பொழுது சந்திரன்பாடு பெரிய திண்டாட்டம். வீட்டுச் செலவிற்கே பெரியபாடு இந்தக் காலத்தில் உடனே தொழில் கிடைப்பது என்ருலும் கஷ்டம்.

திரும்பவும் வெளிநாடு செல்வதா ? ! அம்மா தனிய, எனியும் இயந்திர வாழ்க்கையா? அடிமை உழைப்பு... ...ம் ஒரு கடையை இந்தச் சந்தியில் போட்டா... வியாபாரம் நடக்கும். காசுதான் தேவை அக்காவிடம் கேட்டுப் பார்த்தால் என்ன? அவள் இப்ப வசதியாகத் தானே இருக்கின்ருள். எதற்கும் ஒரு முறை போய்ப் பார்ப்போம்

என்று எண்ணியபடி சைக்கிளில் தமக்கை வீடு செல்கிருன். அங்கே அக்காவின் மகள் அவனை வரவேற்கின்ருள்.

'வா தம்பி என்ன இந்த நேரத்தில அம்மா தனியத் தானே' வினவியபடி அக்கா கதிரையில் அமர்கின்ருள்.

'ஒன்றுமில்லையக்கா ஒரு அலுவலா வந்தனுன்'

அத்தான் ராஜ்குமாரும் அவ்விடத்திற்கு வருகிருர். 'எப்படிச் சந்திரன் எல்லாப் பொறுப்பும் முடிஞ்சு இப்ப நீர் ஜென்டில்மான் தானே' என நகைச்சுவையாகக் கூறியபடி இருக்கையில் அமர்கிருர்.

'என்ன தம்பி விஷயம்' என்று அக்கா வினவ எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் பிறகு ஒருவாறு சமாளித்த ...று பெரிசா ஒண்டுமில்லை. எனக்கு ஒரு தொழில் கிடைக்கிற வரைக்கும் ஒரு கடையொன்று போடலாம் என்று நினைக்கிறன். அதுதான் கொஞ்சக் காசு தேவைப்படுகிறது. கேக்கலாம் என்று வந்தனுன்'

'நீ கேக்கேக்கை இல்லையென்று சொல்ல வருத்தமாகத்தான்இருக்குச் சந்திரன். சீதனக்காசை பாங்கில போட்டிருந்தனுங்கள் போனகிழமைதான் இவருடைய தம்பி நோர்வேக்குப் படிக்கப் போறதெண்டாப் போலை எடுத்துக் கொடுத்திட்டம்' இது அக்காவின் கூற்று.

சந்திரன் ஒரு தடவை எச்சிலை விழுங்கிக் கொண்டான். அக்கா மேலும் தொடர்ந்தார்.

'... ... தான் ... ... சொன்னனுன் படி... ...தனு... ...சிருந்தா இரண்டாம் முறை நிச்சயமாய் நீ கம்பஸுக்கு எடுபட்டிருப்பாய் இப்ப இந்தப் பிரச்சினை வராது. கம்பஸ் முடிஞ்சவைக்கே வேலை வாறதைக் காணேல்லை நீ எ. எல். நாலுபாடம் பாஸ் பண்ணினுப் போலை எங்க உடனே வேலை எடுக்கிறது.

அத்தானும் தொடர்ந்தார், ஓம் சந்திரன் இது தான் நான் என்ர தம்பியை வெளிநாட்டுக்கு அனுப்பினுலும் படிக்க அனுப்பினனுன் என்று தன் பங்கிற்கும் கூறி முடித்தார்.

ஓ இது தான் உலகம். சந்திரனின் மனம் வேதனையால் விம்மியது. ஆனுல் இது கசப்பான உண்மை தான் என்று அடி மனம் உறுத்தியது. இருப்பினும் ஏதாவது பதில் சொல்ல நா துடித்தது.

'அக்கா நீ சொன்னது உண்மையாக இருந்தாலும் நமது குடும்பநிலையை ஒருதரம் யோசித்துப்பார் .நான் என் சுயநலத்தைக் கருதிப் படிச்சிருந்தா நீயும், தங்கச்சியும் இந்த வயதில இந்த நிலைமையில சிறப்பாக வாழமுடியாது. அத்தான் நீங்க கூட உங்கட தம்பியைப் படிப்பிக்க முடிஞ்சது என்ருல் அது என்னுடைய வியர்வை, உழைப்புதான். என்னுலையும் படிக்க முடியும். ஏன் நான் படிக்காமல் பாஸ் பண்ணுமலா போனனுன்? இயன்ற வரை எ. எல்லில் நாலுபாடம் பாஸ் பண்ணினனுன்தானே. ஏதோ என்னுடைய கடமை உணர்வு, வறுமை எல்லாம் படிப்புக்குக் குறுக்காக நின்று விட்டது. கல்வியா, கடமையா என்ற போராட்டத்தில் எனது கல்வி சிதைந்தாலும் நீங்கள் சந்தோஷமாய் இருந்தால் சரி'

என்று படபடவென்று பேசித் தீர்த்து விட்டு உறுதி நிரம்பிய நெஞ்சத்துடன் சைக்கிளில் ஏறிய சந்திரனுக்குத் தூரத்தில் கேட்ட ஆலய மணியின் ஓசை புதிய தெம்பை அளித்தது.

(யாவும் கற்பனை)

**குடுக்கதை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சமாதானத்துக்கு உதவும் உபவாச ஜெபம்!

உபவாசம் ஜெபத்தோடு நெருங்கிய சம்பந்தமுள்ளது. அதிகமாய் ஜெபிக்கக்கூடிய தருணங்களில் உபவாசத்தை அமைப்பது நல்லது. ஜெபமும் உபவாசமும் மலரும் மணமும் போல் பிரிக்கமுடியாதவை. 'உபவாசத்துக்கும் ஜெபத்துக்கும் தடையிராதபடிக்கு' என்று எழுதப்பட்டிருக்கிறது. (1, கொரி 7 : 5)

இவ்வித உபவாச ஜெபத்தின் பலன் மகத்துவமானது. இஸ்ரவேல் அடிமைத்தனத்தில் அகப்பட்டு அவதிப்பட்டது. எருசலேமில் மீந்திருந்தவர்கள் மகா தீங்கும் நிந்தையும் அனுபவித்தார்கள். எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டும், வாசல்கள் எரிக்கப்பட்டும் கிடந்தன. நிவாரணமற்ற நிர்ப்பாக்கியமான நிலைமைதான் அங்கு தோன்றியிருந்தது. நெகேமியா என்ன செய்தான்?

'இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது சில நாளாய்த் துக்கித்து உபவாசித்து மன்றாடி பரலோகத்தின் தேவனை நோக்கி...... பிரார்த்தித்தேன்' (நெகே- 1 : 4 – 11)

இந்த உபவாச ஜெபத்தின் பலனாய் நெகேமியா எருசலேம் சென்று அதைக்கட்டி எழுப்ப அரச அனுமதி அளிக்கப்பட்டது. அவன் வந்ததன் பலனாய் பெரிய எழுப்புதல் ஏற்பட்டது.

இன்றைய உலகத்திலே கட்டுக்கடங்காமல் மலைபோல எழும்பி வரும் பிரச்சினைகளினால் தேசியத் தலைவர்கள் அதிகமாக நம்பிக்கையிழப்பவர்களாகி வருகிறார்கள்.

விஞ்ஞானிகள் பயப்படுகிறார்கள், வேளாண்மையினர் தத்தளிக்கின்றனர். பொருளாதார நிபுணரும் அறிஞர்களும் இருண்டதொரு வருங்காலத்தையே காண்கிறவர்களாயிருக்கிறார்கள். பணவீக்கப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, உணவுப்பிரச்சினை, நாட்டிலே குற்றமதிகரிக்கும் பிரச்சினை. போதைதரும் வஸ்துக்களிலிருந்து மனிதன் விடுதலைபெற இயலாமல் தத்தளிக்கும் நிலைமை,

யுத்தத் தளபாடங்கள் பெருக்கத்தின் பிரச்சினை, உலகின் பலபாகங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தங்களின் பிரச்சினை, இப்படியாகப் பிரச்சினைக்குமேல் பிரச்சினைகள் உலகத்தில் மலைபோல் எழும்பிக் கொண்டிருக்கின்றன.

இந்த இக்கட்டான காலகட்டத்திலே கிறிஸ்தவ சமுதாயத்தினரின் கடமை என்ன என்பதையும் வேதம் கூறுகின்றது.



### எவ்வளவு காலம் உபவாசிக்க வேண்டும்?

நியாயப்பிரமாண காலத்தில் மோசேயும், கிருபையின் காலத்தில் நமதாண்டவரும் கைக்கொண்ட நீண்ட உபவாசங்கள் விசுவாசிகளாகிய நாமனைவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டிய மாதிரிகளல்ல (20 ம் நூற்றாண்டிலும் 40 நாள் உபவாசத்தை வெற்றியாய் முடித்து மாபெரும் ஊழியராய் சிறிது காலம் விளங்கியவர்களுமுண்டு) மோசேயையும் கர்த்தரையும் தவிர வேறு எவரும் 40 நாள் உபவாசித்ததாக வேதம் கூறவில்லை.

சாதாரண சில உபவாசங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. 'நீர் போய் யூதரையெல்லாம் கூடிவரச்செய்து மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து உபவாசம் பண்ணுங்கள், நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்' (எஸ் 4: 16) பவுலும் மூன்று நாள் உபவாசித்ததாக எழுதப்பட்டிருக்கிறது. (அப் 9: 9)

உபவாசம், ஆகாரத்தை வெறுப்பதேயன்றித் தண்ணீரை வெறுப்பதல்ல. விஷேச நடத்துதல் இல்லாமல் தண்ணீர் குடியாமல் உபவாசிப்பது சரியல்ல. அப்படி இருந்தாலும் 3 நாட்களுக்கதிகம் இருப்பது தகாது.

மோசேயின் உபவாசம் அசாதாரணமானது. அவன் தேவனிடத்திலிருந்து நியாயப்பிரமாணத்தை எழுதி வாங்க அவரோடு அவ்வாறிருப்பது தேவையாயிருந்தது. அதற்கு விஷேச கிருபை தேவனால் அளிக்கப்பட்டும் இருந்தது.

### "பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள்" (யோவே 1 : 14)

'தேசத்தின் எல்லாக் குடிகளையும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச் செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்'

இன்றைய காலகட்டத்திலே உலகம் முழுவதுமே எதிர்பார்ப்பது நிரந்தர சமாதானம். இந்தப் பெறுமதிமிக்க சமாதானம் உலகில் தோன்றச் செய்வதற்கு அத்தியந்த தேவையாயிருப்பது, ஊக்கமான, தொடர்பான, விடாப்பிடியான உபவாச ஜெபமேயாகும்.

'ஆகையால் நீங்கள் இப்பொழுது உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும், உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள்... ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலி பீடத்துக்கும் நடுவே அழுவார்களாக. அப்பொழுது கர்த்தர் தமது தேசத்திற்காக (பிரச்சினைகள் நிறைந்த இந்த உலகத்திற்காக) வைராக்கியங்கொண்டு தமது ஜனத்தைக் கடாட்சிப்பார். (யோவே – 2 : 12 – 18) என்று கர்த்தர் சொல்கிறார்.) ★

- வண. சாம். செல்வநாயகம் -

# இன்னல்கள் நிவர்த்தியாக இறைவனை இறைஞ்சுங்கள்!

அமீர் முஆவியா (றலி) அவர்கள் இமாம் அவர்களுக்கு ஆண்டுதோறும் ஒரு லட்சம் தீனார் பொற்காசுகள் காணிக்கையாக செலுத்திவந்தார்.

ஒருவருடம் அந்தக் காணிக்கை வந்து சேரவில்லை. அதனால் இமாம் அவர்களுக்குப் பணமுடை ஏற்படவே அமீர் முஆவியா (றலி) அவர்களுக்குக் கடிதம் எழுத எண்ணி எழுது கோலைக்கையில் எடுத்தார்.

பின் எதனையோ நினைத்துக் கடிதம் எழுதாது எழுதுகோலைக் கீழே வைத்துவிட்டார்.

அன்றிரவு சொப்பனத்தில் நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் தரிசனம் அளித்துச் சேமம் விசாரித்தபோது, இமாம் அவர்கள்,

'சேமத்திற்குக் குறைவில்லை, பணமுடைதான் சகிக்கமுடியவில்லை. அது ஒரு குறையே என்னைச் சிரமத்திலாழ்த்திவிட்டது' என்று பதிலளித்தார்.



உடனே நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் அன்னாரை நோக்கி மகனே! 'உனக்கு நேரிட்ட சிரமத்தைப் போக்கிக்கொள்ள அல்லாஹ்விடம் முறையிடுவதை விட்டு விட்டு உன்போன்ற ஒரு மனிதருக்கு ஓலை எழுதத் துணிந்துவிட்டனையா? என வியப்போடு வினவினார்.

அதற்கு இமாம் அவர்கள் 'அவ்வாறு நினைத்துத்தான் கடிதம் எழுதுவதை நிறுத்திக்கொண்டேன்' —என்று பதிலளித்தார்.

உடனே நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் பிரார்த்தனை ஒன்றைக் கற்பித்து இதனை ஓதி இறைவனிடம் இறைஞ்சுக! உனது சங்கடம் நிவர்த்தியாகும். —எனக்கூறி மறைந்தார்.

இமாம் அவர்கள், அன்னாரின் உத்தரவுப்படி ஒரு வாரம் அந்தப் பிரார்த்தனையை ஓதி இறைவனிடம் தமது குறையைக்கூறி முறையிட்டு வந்தார்.

அமீர் முஆவியா (றலி) அவர்களிடமிருந்து ஐந்து லட்சம் பொற்காசுகள் அன்னாரைத் தேடி வந்துவிட்டன.

அல்லாஹுத்தஆலா, ஒருவனையே நம்பி அவனைத்தவிர வேறு எவரிடத்தும் எதனையும் வேண்டாதிருப்பவனை அவன் மறப்பதுமில்லை. கைவிடுவதுமில்லை.

தமது இல்லாமையையும் எளிமையையும் பிறரிடம் கூறிச் சஞ்சலப்படுவதை அவன் விரும்புவதுமில்லை. இதனை மனதிற்கொண்டு வாழ்க்கை நடத்துவதே உண்மைத் தவ்ஹீது நிலையாகும். ★

- எம். எம். அபூபக்கர் -

# அணிந்துரை அனுப்பிய பிரபுக்கு கவிஞர் ஜோன்ஸனின் பதிலுரை

இங்கிலாந்தில் 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த டாக்டர் ஜோன்சன் இலக்கியத்தில் சர்வ வல்லமை பெற்றிருந்தார்.

இலக்கிய விமர்சனம் எழுதுவதில் அவருக்கு நிகர் அவரே!

,ராம்லர் (Ramlar) ஸ்பெக்ரேட்டர்' (Spectator) போன்ற செய்தித் தாள்களில் இவரின் இலக்கிய விமர்சனங்கள் வெளிவந்தன.

எளிதான வார்த்தைக்குப் பதிலாக கடினமான சொற்களையே ஜோன்சன் பாவித்தார். ஸ்கொட்லாந்து (Scotland) தேசத்தவரை ஜோன்சன் வெறுத்தார்.

ஆனால் இவரின் வாழ்க்கை வரலாற்றினை அழகுற எழுதிப் புகழ்பெற்றவர் ஸ்கொட்லாந்து தேசத்தவரான பொஸ்வெல் (Boswell).

ஆங்கிலமொழியின் அகராதி ஒன்றைத் தயாரித்து வெளியிட வேண்டும் என்பது ஜோன்சனின் நீண்ட நாளைய அவா. அதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வந்தார். அம்முயற்சிக்கு பெருந்தொகையான பணம் தேவைப்பட்டது.

ஜோன்சனோ வறியவர். நாடுமுழுவதும் சென்று வழக்கிலிருக்கும் வார்த்தைகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்,

செஸ்ரர்பீல்ட் பிரபு (Lord Cherterfield) என்பவரை நாடி உதவி கோரினார். பிரபு உதவி செய்வதாக வாக்களித்திருந்தார். ஏழாண்டுகள் உருண்டோடின. ஆனால் பிரபுவின் உதவி கிடைக்கவில்லை.

இறுதியில் அகராதி வெளிவரும் சமயத்தில் பிரபு அவ்வகராதிக்கு ஒரு அணிந்துரை எழுதி அனுப்பினார். டாக்டர் ஜோன்சன் அதனை ஏற்கவில்லை. பதிலாகப் பிரபுவிற்கு காரசாரமான பதிலைச் சுடச்சுட எழுதினார்.

அக்கடிதம் ஆங்கிலத்தில் மிகப் பிரபல்யம் அடைந்தது. அதன் சாராம்சத்தைப் பார்ப்போம்:–

'பிரபு அவர்களே! தங்களின் அணிந்துரை கிடைக்கப் பெற்றேன். ஆனால் அதை பிரசுரிக்கவியலாமைக்கு வருந்துகிறேன். பல தடவைகள் உங்கள் மாளிகை வாசலில் உங்கள் பண உதவுக்குக் காத்திருந்தேன்.

ஏழாண்டுகள் கழிந்தன. ஒரு தடவையாவது உங்களின் பண உதவியோ அன்றி உற்சாகமூட்டும் (Encouagement) வார்த்தைகளோ எனக்குக் கிடைத்திலது. வேலை முடிந்த பின்னர் தங்கள் அணிந்துரை கிடைத்தது.

இது எதைப் போல் இருக்கிறது என்றால் — ஒருவன் கடலில் வீழ்ந்து உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறான் கரையில் நின்று கொண்டிருப்பவன் அவனைக் காப்பாற்றுவதற்காக ஒருவித முயற்சியும் செய்யவில்லை.

கஷ்டப்பட்டு உயிருக்காகப் போராடியபின் அதிஷ்டவசத்தால் அவன் கரையேறுகிறான். இதுவரையும் சும்மா கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தவன் ஓடிச் சென்று அவனைப் பாராட்டியும் கட்டியும் தழுவுகிறான். அவனுக்கு இவனின் பாராட்டும் தழுவலும் தேவையா? ★

- மானியூர் சி. குமாரசாமி -

# தூய்மையான அன்பினால் இறைவனை அடையலாம்!

மனிதன் மனிதத் தன்மையை இழந்து விட்டான். பாகப்பிரிவினைக்காக மகன் தன் தந்தையை நீதிமன்றத்திற்கு இழுக்கிறான்.

மனைவி தன் கணவனை விவாகரத்து செய்துகொண்டு அவனை விட இளமையிலும், அழகிலும், பணத்திலும் மேலானவனை மணம் செய்து கொள்கிறாள்.

தோட்டத்தைத் தன் வசமாக்கிக் கொள்ள இளையவன் மூத்தவனுக்கு விஷம் வைக்கிறான். எங்கும் கொடுமையை, வஞ்சகத்தை, அநீதியை அக்கிரமத்தைக் காண்கிறீர்கள்.

யாரும் தான் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவதில்லை.

தகப்பன் தன் மகனை நம்புவதில்லை. மனைவிக்குக் கணவன் மீது நம்பிக்கை இல்லை. அதுபோலவே கணவனுக்கும்.

உலக வாழ்க்கை வாழ்பனுடைய சபலத்திற்கு முடிவே இல்லை. அதனால்தான் செல்வமும், சௌகரியங்களும் இருந்தபோதிலும் அமைதியற்றிருக்கிறான்.

தன் நிலை பற்றி அவன் திருப்தி அடைவதில்லை. எப்போதும் அதிருப்தியுடன் இருக்கிறான்.

ஒரு ஆசை நிறைவேறுமுன் வேறொரு ஆசை அவன் மனதில் புகக் காத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆசை அவன் மனதைச் சஞ்சலப்படுத்தி, மேலும் மேலும் திருப்தி செய்விக்கும்படி கேட்கிறது. அவன் தெய்வீகத் தன்மையை மறந்து உலகமென்னும் சம்சாரத்தில் பாய்கிறான்.

### விழிப்பு

உலகத்தில் ஈடுபாடுடையவர்களே! அறியாமை இருளின் துக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளுங்கள். இப்போது கண்ணைத் திறவுங்கள். எழுந்து ஆன்மீக அறிவைப் பெறுங்கள். பிரம்மநிஷ்டை உடைய குருவிடம் சென்று, சேருங்கள். சர்வசுதந்திரத்தை, கைவல்யத்தை அடையுங்கள். சத்சித் ஆனந்த நிலையில் கலந்துவிடுங்கள்.

குல்மார்க், காஷ்மீர், பகல்காம், டார்ஜீலிங் அல்லது சிம்லா, வியன்னா அல்லது அல்ப்ஸ் என்று எங்குதான் போனாலும் பலன் ஒன்றும்ஏற்பட்டுவிடப் போவதில்லை. உண்மையான அமைதியைக் காணமாட்டீர்கள்.

அழகிய இயற்கைக் காட்சி கண்ணிற்குக் கொஞ்சம் இனிமை தரும். ஆசை, வெறுப்பு, பொறாமை, தீவிர உணர்ச்சி, பேராசை இவைகள் நீங்கள் எங்கு போனாலும் கூடவே வரும்.

இதே நிலத்தை, வானத்தை, காற்றை, நீரைத்தான் எங்கும் பார்ப்பீர்கள். போகின்ற இடத்திற்கெல்லாம் உங்களுடைய அதே மனதை கற்பனையைக் கொண்டு செல்கின்றீர்கள். இடமாற்றத்தால், எதிர்பார்த்து ஏமாந்தவர்கள் பலர்.

ஆகவே, நினைவில் கொள்ளுங்கள். கடவுள் உங்களுக்குள் இருக்கிறார். அவர் எல்லா உயிருடைப் பொருள்களின் இதயங்களிலும் வீற்றிருக்கின்றார். நீங்கள் பார்த்து கேட்டு, தொட்டு, உணர்ந்து அனுபவிப்பதெல்லாம் அவரே தான்.



ஆகவே யாரையும் வெறுக்காதீர்கள். ஏமாற்றாதீர்கள். இம்சிக்காதீர்கள். எல்லாவற்றையும் நேசியுங்கள். எல்லாவற்றோடும் ஒன்றாகி நில்லுங்கள்.

### தியானம்

மனிதனே! திருப்தியுடன் வாழ். அறிவுடன் வாழ். ஆத்மாவைத் தியானி. இதில்தான் நிரந்தர அமைதியையும், ஆனந்தத்தையும் பெறுவீர்கள்.

கீழ்த்தரமான வேலை, மதிப்பான வேலை என்று வேற்றுமை பாராட்டாதே. எவராயினும் தன் தேகத்தில் எங்காவது ஓரிடத்தில் வலியால் துடித்துக் கொண்டிருந்தால் மெதுவாக அந்த இடத்தைத் தடவிக் கொடு. அந் நோயாளியின் உள்ளத்தே குடிகொண்டுள்ள இறைவனுக்கே தொண்டு புரிவதாக எண்ணிக்கொள்.

உன் இஷ்ட மந்திரத்தை ஜெபி. பாதை ஓரத்தில் மனிதனோ, பிராணியோ இரத்தக் காயத்தால் துன்புறுவதைக் கண்டால் உன் வஸ்திரத்தைக் கிழித்துக் காயத்தைக் கட்டு. ரயில்வே நிலயத்தில் ஏழைச் சுமை தூக்கியுடன் சண்டையிடாதே. தாராளமாகவே இரு.

எப்பொழுதும் உன்கையில் சிறிது பணம் வைத்துக் கொண்டு அதை ஏழைகளுக்கும் அங்கவீனர்களுக்கும் கொடு.

உன்னுடைய சித்தம் சுத்தியடையும்போது மனம் தானாகவே இறைவன்பால் செல்லுகிறது. எனவே தூய்மையான அன்பு, தெய்வ சரணாகதி, தெய்வ வழிபாடு இவற்றினால் இறைவனிடம் ஐக்கியமாவாய்.

தான தருமங்கள் மூலம் பாபங்கள் நசித்துப் போகின்றன. 'தானம் எண்ணற்ற பாபங்களை நிவர்த்திக்கிறது' வேள்வி, தானம், நியம நிஷ்டைகள் முதலியன மனிதர்களைப் பரிசுத்தப்படுத்துவனவாகும்.

காலம் என்பது பறந்து செல்வது. இரவுகள் உறக்கத்திலும் இன்பங்களிலும் வீணாக்கப்படுகின்றன. பகலெல்லாம் வீண்பேச்சிலும், பணம் சம்பாதிப்பதிலும், குடும்பத்தை நடத்துவதிலும் வீணாக்கப்படுகின்றன. ★

- சுவாமி சிவானந்தா -

# காதல் நெஞ்சமும் காணும் உலகமும்

பழந்தமிழ் வாழ்வைக் காணும்
பலவகை இயற்கை யோடு
இயைந்துமே வாழ்வ தாகும்
இலங்கிடும் உணர்ச்சி கூடும்

பொருளது தேடச் சென்றான்
பூவையோ வாடி நின்றான்
நாளது ஆண்டு ஆகி
நாயகன் வரவை நோக்கும்

பகலெல்லாம் அரும்பி நின்று
பாவையின் துயரம் மாலை
வந்ததும் வளர்ந்து நின்று
வாட்டிடும் கொடிய நோயே

அருளில்லா நெஞ்சு கொண்ட
அறிவிலாத் தலைவன் போலே
இருண்டது உலகம் இந்த
இருளினின் கொடுமை யாலே

நெஞ்சினில் துன்பம் தன்னை
நீட்டியே காட்டு தற்கு
விண்ணுடன் மண்ணைக் காட்டி
விளக்கிடும் புலவன் இப்போ

இலையுடன் மரத்தைக் காட்டி
எழிலது மறையக் காட்டி
இருளுடன் மாலை காட்டி
இயம்பிடும் துன்பம் காட்டி

பகலினில் நிழலைத் தந்து
பாங்குடன் நிற்கும் அந்த
மரங்களே நெஞ்சம் சோர
வருமிந்த மாலை போலே!

—வ. யோகானந்தசிவம்

# பொது அறிவுப்போட்டி இல. 29

1. இது இல்லாத ஆடிப்பிறப்பா ... ... ... ... ... கூழ் / கொழுக்கட்டை
2. சிந்து வெளி நாகரிகத்திற்கு அடையாளம்? ... ... மொகஞ்சதரோ / அஜந்தா
3. ஹேலி வால் நட்சத்திரம் தோன்றுவது? ... ... ... ... ... ... 75 ஆண்டுக்கு ஒரு முறை / 50 ஆண்டுக்கு ஒரு முறை
4. இதற்கும் மருளும் தன்மையுண்டு? ... ... ... ... ... ... மான் / விழி
5. கையில் அணிந்து கொள்வது? ... ... ... ... ... ... காப்பு / மோதிரம்
6. திருமணத்திற்கு வேண்டியது? ... ... ... ... ... ... ... பணம் / பெண்
7. இதற்கும் மரம் ஏறத் தெரியும்? ... ... ... ... ... ... குரங்கு / மனம்
8. கண்ணீர் இதற்கும் வரும்? ... ... ... ... ... துன்பத்தில் / இன்பத்தில்
9. ஸ்ரீ இராமபிரானுக்கு எத்தனை பிள்ளைகள்? .. ... ... ஒன்று / இரண்டு
10. புரட்சிக்குயில் யாரைக் குறிக்கும்? ... ... ... ... பாரதியார் / பாரதிதாசன்
11. ஆற்றங்கரையில் அமைந்த தலைநகரம்? ... ... ... டோக்கியோ / பீக்கிங்
12. உலகில் அதிகம் பேசப்படும் மொழி? ... ... ... ஆங்கிலம் / சீனமொழி

பெயர்:- ........ ..............................
விலாசம்:- ....................................
....................................

பொது அறிவுப்போட்டி இல: 29
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

............ இங்கே வெட்டுக ............

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 19 - 07 – 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றும் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியாயம்தானா?

பெண்ணே!
எந்நிலை உன்
எழில் வதனம்
என்றும் பௌர்ணமிதான்
அதற்காக
நீ என் மனதை
அமாவாசை
ஆக்கலாமா?

— புலோலியூர் சந்திரசேகர்

## சீதனம்

கொடுப்பவர்கள்
இருப்பதால்......
இல்லாதவர்கள்
இருக்கிறார்கள்......
இல்லாதவர்கள்
இருப்பதால்......
கேட்பவர்கள்
இருக்கிறார்கள்!!

- நல்லூர் தாஸ்

## மனிதன் வழியில்

வானம் கூட
மனிதன்
வழியில்...?
அதனால் தான்
மேகத்தை
தூதனுப்பி
பூமிக்குத்
தெரியாமல்
சந்திரனிற்குத்
திரைபோடுகின்றதோ?

க. காந்தரூபன்

## என் இதயத்தை நம்பு

இளமையை நம்பாதே
அது முதுமையாகும்.
என்னிடம்
இருப்பதை நம்பாதே - அது
இழக்கப்படும்
என்
இதயத்தை நம்பு -
அது என்றும்
உனக்குத்தான்.

கா. யோ. கிரிதரன்

## வேலை

நாட்டில்
படித்த
பட்டதாரிகளுக்கு
வேலையில்லையா?
யார் சொன்னது?
வேலை தேடுவதும் - எம்
வேலையில்லாமல்
வேறென்ன?

- கலைப்பித்தன்

## ம(ா)து மலர்

மலரே
நீதானே
மதுவை
வைத்திருக்கிறாய்
ஆனால்
நீ
மயங்காமல்
உன்னில்
மதுவெடுத்த
வண்டுகள்
அல்லவா
மயங்குகின்றன!

-உடுத்துறை கிருபாகரன்

## நம்பிக்கை

சொந்தங்களை
நம்பினேன்
சொத்துக்கள் பல
இழந்தேன்,

★

நண்பர்களை
நம்பினேன்
நல்ல பண்பிழந்தேன்
நட்டாற்றில்
கைவிடப்பட்டேன்,

★

ஒரு
பெண்ணை
நம்பினேன்
என்
இதயத்தை
இழந்தேன்,

★

இன்று
எல்லோரையும்
நம்புகிறேன்
ஏனெனில்
என்னிடம்
இழப்பதற்கொன்றுமில்லை.

- சாவ. சண்முகதாசன்

## நீதிமன்றம்

திருமணம்
என்ற சிறைக்குள்
செல்லுமுன்
மாப்பிள்ளை வீட்டார்
என்ற நீதிமன்றம்
கூறுகின்ற தீர்ப்பு.

— சாந்தினி கந்தசாமி

# கொத்மலை தொடக்கம் மாதுறு ஓயா வரை

'அந்தநாள்' ஞாபகத்தினை நெஞ்சிலே வரவழைத்த மகாவலி அதிகார சபையினரால் ஒழுங்குசெய்யப்பட்ட மகாவலி செயத்திட்ட தலைப்புல வேலைத்திட்டங்களைப் பார்வையிடச்சென்ற அந்த மூன்றுநாட்களும் எம்மால் மறக்கமுடியாத முத்தான நாட்கள்.

இலங்கையின் சகலபகுதிகளிலும் உள்ள தெரிவுசெய்யப் சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கான கல்விச் சுற்றுலா ஒன்று மகாவலி அபிவிருத்தித்திட்ட தலைப்புல நிலையங்களுக்கும், மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் 'சி' வலயம் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.

இச்சுற்றுலாவை மகாவலி அதிகாரசபை தேசியக்கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் ஒழுங்குசெய்திருந்தது.

இச்சுற்றுலாவுக்கென முப்பது ஆசிரிய ஆலோசகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவராக நானும் அழைக்கப்பட்டேன் உண்மையில் இச்சுற்றுலா மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

அந்த முப்பது ஆசிரிய ஆலோசகர்களுடன் தேசிய கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த இருவரும் மகாவலி அதிகார சபையைச் சேர்ந்த ஐவரும் எம்முடன் இணைந்து சுற்றுலா 03-06-89 சனி, காலை ஆரம்பமாகுமெனத் தீர்மானிக்கப்படுகிறது.

சுற்றுலா சல்லும் பாதை, பார்வையிடும் வேலைத்திட்டங்கள், புறப்படும் நேரம் எல்லாம் விரிவாக (2-6-89 வெள்ளிக்கிழமை) ஆராயப்படுகின்றது. தேசிய கல்வி நிறுவக திட்ட அதிகாரியாகக் கடமை ஆற்றும் ஜனாப். எம். எம். ராசிக் நிதானமாக-அவர் என்றுமே நிதானமாகக் கடமையாற்றுவதில் வல்லவர். சிங்களம், தமிழ்மொழிகளை இனிமையாகப் பேசுவார். தமிழ்மொழிமூலம் சமூகக்கல்வி ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தில் பொறுப்பாக உள்ளவர். மிகவும் நல்லவர் அவர் நிதானமாகத் திட்டங்களை கூறிவருகின்றார்.

### பேராதனையை நோக்கி

நாம் பேராதெனியாவை அடைந்துவிட்டோம். எங்களில் பலர் மனதிலும் பலவிதமான உணர்வலைகள். அந்தநாள் ஞாபகத்தை மனதில் நிழலாய் வைத்துவிட்ட சில காட்சிகள்.

பேராதனைப் பல்கலைக்கழக வளவினூடாக வண்டி சென்றுகொண்டிருக்கின்றது. சிலர் அக்பர் விடுதியை ஆவலுடன் பார்க்கின்றனர். வேறுசிலர் இராமநாதன் மண்டபத்தினைப் பார்க்கின்றனர். ஒவ்வொருத்தர் பார்வையிலும் வெவ்வேறு அர்த்தங்கள் தொனிக்கின்றன. நானும் அவையெல்லாவற்றையும் பார்க்கின்றேன்.

மாணவப்பருவ சம்பவங்கள் மனதில் நிழலாடத் தொடங்கிவிட்டன. எனக்கு மட்டும் வயதைப் பின்னெடுத்துச் செல்கின்ற சக்திவந்துவிட்டால்... அந்த வாழ்க்கைக்கே திரும்பிச் சென்றுவிடுவேன்:

என்ன இனிமையான வாழ்க்கை. பசுமையான அந்த நினைவுகள் எமக்கு மீண்டும் இளமையைக் கொடுத்துவிடுகின்றன. பேராசிரியர் ச. முத்துலிங்கம் அவர்கள் கூறுவார்கள். 'தொழில்களில் சிறந்தது ஆசிரியத்தொழில். அங்கு நாம் இளம் உள்ளங்களோடு பழகி வருவதால் நாம் தொடர்ந்தும் இளமையாகவிருக்கலாம்'.

அந்த அறிஞரின் கருத்துப்படி நாம் ஆசிரியர்களாக,-தொடர்ந்து இளைஞர்களாக இருப்பதும் எமது பழைய கால பசுமை நினைவுகளை 100 குதிரை வேகத்தில் மீட்டெடுத்துத் தந்துவிட்டது. எனக்கு மட்டும் ஒரு சந்தர்ப்பம் தந்திருந்தால் அந்த இடத்திலே இறங்கிப் பேராதனைப் பல்கலைக்கழகம் முழுவதையும் ஒரு சுற்றும் சுற்றி ஓடி முடித்திருப்பேன்:

### முருகன் கோயில்

அதோ முருகன் கோவில் தெரிகிறது. எல்லாரும் அத்திசையில் பார்க்கின்றோம். மலை உச்சியிலே முருகன் ஆலயம் முகில் கூட்டத்துக்கு இடையே சிக்குண்டு காணப்படுகிறது. முகில் கூட்டம் எமது அவசரத்தை உணர்ந்தோ என்னவோ மிக விரைவாக விலகி ஆலயம் முழுவதும் எமக்குக் காட்சியளிக்கின்றது. 'முருகா எல்லாருக்கும் அமைதியைக் கொடு' என்று பொது எண்ணத்தோடு பிரார்த்திக்கிறோம்.

**பயணக் கட்டுரை - 1**

டஸ்வண்டி கம்பளை சென்று அங்கிருந்து கொத்மலை செய் திட்டப் பகுதியை நோக்கிப் புதிதாக அமைக்கப்பட்ட பாதையில் சென்று கொண்டிருக்கின்றது.

'வண்டியில் மாகவலி அதிகார சபையைச் சேர்ந்த பொது சனத்தொடர்பு அதிகாரியும் (P. R. O) வேறு உத்தியோகத்தர்களும் செல்கின்றனர்.

நாம் கொத்மலை நீர்த்தேக்கத்தை அண்மிக்கின்றோம் அதன் சுற்றயல் பாதுகாப்பு வலயமாகவுள்ளது. யாரும் அனுமதியின்றி உள்ளேசெல்ல முடியாதவாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வீதியை மறித்து தடை போடப்பட்டுள்ளது. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அங்கு காணப்படுகின்றனர்.

கொத்மலை நீர்த்தேக்கத்தைப் பார்வையிடுவதற்கு அனுமதி கிடைத்து விட்டது; நாம் செல்வோம் என்று திரு. ஜோதிசேன ஆங்கிலத்தில் கூறுகின்றார். அவருடன் ஒரு புதிய மனிதர் வந்து சேர்ந்து கொள்ளுகின்றார்; அவர் கொத்மலை நீர்த்தேக்கத்தைச் சேர்ந்த அதிகாரி. அவரே எங்களுக்கு விளக்கமளிக்கின்றார். எங்கள் சந்தேகங்களை உடனுக்குடன் நீக்குகின்றார். சிரித்த முகத்துடன் அவர் அளித்த விளக்கம் எமக்கு மிகவும் பயனுள்ளவையாக அமைந்தன.

### கொத்மலை நீர்த்தேக்கம்

மகாவலிகங்கையின் கிளை நதியான கொத்மலை ஓயாவின் குறுக்கே அணையொன்றைக் கட்டி அமைக்கப்பட்டதே இந்நீர்த்தேக்கம். மகாவலி நீர்த்தேக்கங்களில் கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரமான இடத்தில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது, இங்கு அமைக்கப்பட்டுள்ள அணை பாறை நிரப்பல் கொங்கிறீட் அணையாகும். அணை உச்சியின் உயரம் 87 மீற்றர்; நீளம் 600 மீற்றர்.

இந்நீர்த்தேக்கத்தில் 141,000 ஏக்கர் அடி நீரைத் தேக்கி வைக்கமுடியும். இத்திட்டத்தினை அமைப்பதற்கு சுவீடன் நாடு உதவி வழங்கியுள்ளது. திஸ்பனை-கடதொற என்ற மலைத்தொடர்களுக்கிடையே இதன் அணை அமைக்கப்பட்டுள்ளது. இந்நீர்த்தேக்கம் அமைந்துள்ளது ஈரவலயத்தில் ஆகும். இந்த நீர்த்தேக்கத்தின் மொத்தக் காட்சி ஒரு முக்கோணவடிவில் அமைந்துள்ளதை அவதானிக்கலாம். இத்தகைய அமைப்பினால் நீரின் தாக்கம் அணைக்குக் குறையும் என்றும் ஆனால், படிவுகள் கூடுதலாக [illegible]ற்படும் என்றும் கருதப்படுகின்றது.

கொத்மலை நீர்த்தேக்கம் குறிப்பிட்ட அவ்விடத்தில் அமைவதற்கு பின்வரும் காரணிகள் உதவியுள்ளன.

1. அணை அமைக்கப்பட்டுள்ள அடித்தளம் கருங்கற்பாறைகளால் அமைந்தமை.

2. அணைக்கட்டு வேலைகளுக்கு வேண்டிய கல் அருகாமையிலேயே கிடைத்தமை.

இவையிரண்டு காரணிகளின் உதவியுடன் கொத்மலை நீர்த்தேக்க வேலைகள் இலகுவாக முடிக்கப்பட்டன.

கொத்மலை நீர்த்தேக்கத்தின் முக்கிய பணி நீர் மின் உற்பத்தி செய்வதாகும். இங்கு மொத்தம் 201mw மின் உற்பத்தி செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ள போதும் தற்போது 134mw மின் உற்பத்திக்கு நீரைக் கொண்டு செல்வதற்காக கொத்மலையில் இருந்து 7 கி. மீ. தொலைவில் உள்ள அட்டபகே என்ற இடம் வரை 20 அடி விட்டம் கொண்ட குழாய்வழி அமைக்கப்பட்டுள்ளது.

அக்குழாய்மூலம் செல்லும் நீர் அட்டபகே என்ற இடத்தில் நிலத்தின்கீழ் நீர் மின்சார நிலையத்தினை அமைக்க உதவுகின்றது. இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள முதலாவது தரைகீழ் நீர் மின்நிலையம் இதுவாகும்.

நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்தபின் கொத்மலை ஆற்றின் நீர் மகாவலிகங்கையுடன் இணைகின்றது. அதன் மூலம் ராசட்டை பிரதேச விளைநிலங்களுக்கு பாசன நீரை வழங்குகின்றது. அதற்கான நீர் பொல்கொல்லை ஊடாக போவத்தன்னை நீர்த்தேக்கத்திற்கு அனுப்பப்படுகின்றது.

எனவே, இச்செயற்றிட்டத்தினால் மகாவலியின் 'ஏச்' பிரதேசம் நன்மையடைகிறது. மேலும் கொத்மலைத் திட்டம் சம்பளைப் பகுதிகளில் ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்கு அபாயத்தையும் தடுக்க உதவுகின்றது. அத்துடன் நன்நீர் மீன்பிடித் தொழில், உல்லாசப்பிரயாணக் கைத்தொழில் ஆகியனவும் இங்கு வளர்ச்சியடைந்துள்ளன.

கொத்மலை நீர்த்தேக்கத் திட்டம் 1979 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டது.

### விக்டோரியா நீர்த்தேக்கம்:

மகாவலி கங்கையும் அதன் கிளை நதிகளில் ஒன்றான ஹுலு கங்கையும் இணையும் இடத்துக்குஅண்மையில் இந்நீர்தேக்கத்துக்குரிய அணைகட்டப்பட்டுள்ளது.

மகாவலி கங்கை அபிவிருத்தித்திட்டத்தில் அமைக்கப்படும் ஐம்பெரும் நீர்த்தேக்கங்களில் அதி உயர்ந்த அணையைக்கொண்ட நீர்த்தேக்கம் விக்டோரியாவாகும் அணையின் உயரம் 122 மீற்றர் ஆகும். அணையின் நீளம் 520 மீற்றர். விக்டோரிய நீர்த்தேக்கத்திலிருந்து 7 கி. மீ. தூரத்தில் உள்ள 'உறங்குறுதலே' என்ற இடம்வரை குடைவழி அமைக்கப்பட்டு அதன்வழி செல்லும் நீர் உறங்குறுதலேயின் அமைக்கப்பட்டுள்ள [illegible]ர்மின் நிலையத்தில் 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய உதவுகின்றது.

விக்டோரியா அணையின் அமைப்பு சிறப்பு வாய்ந்தது. பிரித்தானிய உதவியுடன் அமைக்கப்பட்ட இந்நீர்த்தேக்கத் திட்டத்தில் இலங்கைப் பொறியியலாளர்களும் பெரும் சாதனைபுரிந்து சர்வதேசப் புகழ்பெற்றனர்.

இவ்வணை இரண்டின் இரட்டை வளைவு கொங்கிறீட் வில்லணையாகும் அதன் இரட்டைவளைவுத் தன்மையும் மேலதிக நீரை வெளியேற்றும் தன்னியக்கக் கதவுகளும் விக்டோரியாத் திட்டத்தின் தனித்துவமான சிறப்பியல்புகளாகும்.

விக்டோரியாத் தேக்கநீர், மின்சாரத்தை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட்ட பின்பு மீண்டும் மகாவலி கங்கை நதியுடன் இணைந்து கொள்ளுகின்றது.

பின்னர் இந்நீர் இரந்தெனிகலை, ரந்தம்பே நீர்த்தேக்கத்தின் ஊடாக மினிப்பே வலதுகரைக் கால்வாய்க்குச் செல்கிறது. அதைத் தொடர்ந்து உல்கிட்டிய ரத்சிந்த நீர்த்தேக்கத்திலிருந்து 4 மைல் நீளமான சுரங்கப்பாதை ஊடாக அந்நீர் மாதுறு ஓயாவுக்குப் பாய்ச்சிப்படுகிறது.

விக்டோரியாத் திட்டம் மகியங்கனை தொடக்கம் பொலநறுவை வரையுள்ள 'பி' 'சி' வலப்பக்கங்ளில் 1, 12,000 ஏக்கர் விளைநிலங்களுக்கு பாசன நீரை வழங்குகின்றது.

இங்கு நெல்லுடன் கரும்பு வெண்காயம், நிலக்கடலை, மிளகாய் ஆகியன உற்பத்தி செய்ய வாய்ப்புண்டு. உணவுப் பொருட்களை பதப்படுத்தல், சேவைகள் துறை வளர்ச்சி விவசாய உபகரணப் பொருட்களை வழங்கல் போன்ற விவசாயத்துக்கு புறம்பாகவும் தொழில்வாய்ப்பைப் பெறமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான தொழில் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி அண்ணளவாக ஒருலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இத்திட்டத்தில் 1500 தொன் மீனை உற்பத்தி செய்யக்கூடிய நன்னீர் மீன் வளர்ப்புத்திட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் வேலைகள் 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி பிரித்தானியா பிரதமமந்திரி திருமதி மார்கிரேட் தட்சர் அம்மையார் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது.

(மிகுதி அடுத்த வாரம்)

- திருநாவுக்கரசு கமலநாதன் எம். ஏ. -




### 'ஆணவம்'

17-06-89 சஞ்சீவியில் வெளியான 'ஆணவம்' உருவகக்கதை சிறப்பானதாக இருந்தது.

இக்கதையில் ஒரு குன்றிமணியை எதிர்த்தட்டில் வைத்த பவுணின் நிறை தராசில் தான் சமப்படுத்தப்பட்டது.

ஆனால் நிச்சயமாக பவுணின் தரத்தை குன்றிமணி சமப்படுத்தாது என்பதைக் கதையாசிரியர் உணர வேண்டும்.

எனவே குன்றிமணி ஓரக்கண்ணால் பார்த்தால் என்ன, நடுக்கண்ணால் பார்த்தால் என்ன!

பவுண், பவுண்தான். குன்றிமணி, குன்றிமணிதான். இங்கு பவுணின் ஆணவம் நியாயமானதே!

—வேலணையூர் கே. ஆனந்தன்

### ஆங்கில 'வெண்பா'

ஆங்கிலத்தில் வெண்பா பாடிய பாவலவர் துரையப்பா பிள்ளையின் கட்டுரை நன்றாக இருந்தது.

புகையிலை பாவிப்பதால் உண்டாகும் தீமைபற்றிய ஆங்கிலப்பாடல் மனதில் பதிந்தது.

— அ. அருள்நேசன், முள்ளியவளை.

### 'தர்மபுத்திரன்'

'தர்மபுத்திரன்' கூத்து பற்றிய விமர்சனம் நன்றாக இருந்தது.

கூத்துக்களைப் பார்க்கமுடியாத இக்காலத்தில் ஜெய்சங்கரின் விமரிசனம் கூத்தை நேரிற் பார்க்குமாற்போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

—ஏ. எஸ். பாஸ்கி

### விஞ்ஞானம்

வளி மாசடைவதால் உண்டாகும் தீமைகள், அவற்றைத் தடுக்கும் வழிகள் 24-6-89 சஞ்சீவியில் பிரசுரமாகின.

இதுபோன்ற பல விஞ்ஞான அறிவுறுத்தல்களை சஞ்சீவி தொடர்ந்து வழங்கவேண்டும்.

— பென்ஜமின் சோமநாதர்.

### அறிவுப் பசி தீர்க்கும் சஞ்சீவி

வாசகர்களின் அறிவுப் பசியைத் தீர்க்கும் சஞ்சீவியில் வெளியாகும் கட்டுரைகள் என்னைப்போன்ற மாணவருக்கு நன்கு உதவுகிறது என்பதில் ஐயமே இல்லை

—க. இராஜேஸ்வரன், வற்றுப்பளை.

### காரமான கடுகுக்கதை

'யாவும் கற்பனையே' என்ற கடுகுக் கதையை வாசித்து மனநிறைவு அடைந்தேன்.

சகலருக்கும் சாட்டை கொடுக்கிறது இக்கதை.

இதுபோன்ற நலன் பயக்கும் தரமான கதைகளை சஞ்சிகை தொடர்ந்துதரவேண்டும்.

— செ. கணேசராசா, சட்டத்தரணி.

கடுகு சிறிது, காரம் பெரிது என்பார்கள்.

இதை உண்மையாக்கிவிட்டது. 1-7-89 சஞ்சீவியில் வெளியான 'யாவும் கற்பனையே' —என்ற கடுகுக்கதை.

கதை வேறு, வாழ்வு வேறு என வாழும் கமலா போன்றவர்களால்தான் இன்று தமிழ்ச் சமூகம் தாழ்வுற்றுக் கிடக்கிறது.

கதாசிரியை ரதிக்கு எனது பாராட்டுக்கள்.

— எஸ். கேசவன், வட்டுக்கோட்டை.

### உலகை வலம்வர உதவும் சஞ்சீவி

அறிவுப்பசி தீர்ப்பது சஞ்சீவி சஞ்சிகை.

சஞ்சிகையைப் படிக்கும்போது உலகை ஒருதரம் வலம் வருவது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது.

பாடம் பயில்வோம் பகுதியில் பிரசுரமாகும் 'பல்லவப் பேரரசர் கால இந்து நாகரிக வளர்ச்சி' என்ற பகுதி இந்து நாகரிகம் கற்கும் மாணவருக்கு ஒரு வரப்பிரசாதம்.

சஞ்சீவியின் பணி தொடர்க.

— க. முரளி.

## கானல் கனையாய்த் தெரியுதுகாதல்!

உயிரும் உயிரும் சேர்வது வாழ்க்கை
உலகம் என்பது இருவரின் சேர்க்கை
கடலும் கரையும் காண்பதுமஃதே
கனவும் நனவும் கலப்பதுமஃதே
உடலை நினையா உணர்வின் பிடியில்
ஊன்றும் காதலில் உயர்வது வாழ்க்கை
படலை திறக்கும் கூற்றுவன் தும்பு
பற்றிப் போகும் நாளின்பின் னாலும்

வானப் பரப்பில் வளர்முகி லோடு
வந்திங் கிறங்கும் மழையே காதல்
ஊனப் பிறப்பின் இறுதியில் சாவா
உயர்வைத் தருவது உண்மைக் காதல்

ஒன்றையும் ஒன்றையும் கூட்டிட விடையாய்
ஒன்றே வந்திடு நிலையே காதல்
ஒன்றிய உணர்வின் உயிர்வழியாக
ஓசையில்லாமல் இழைவது காதல்
இன்றைய நேற்றைப் பொழுதினை யெல்லாம்
நாளைக்குப் பின்னே நடுவது காதல்
கன்றிய விடத்துக் களிப்பினைச் செய்யும்
காலக் கிழவனின் மருத்துவம் காதல்

ஒன்றைப் பார்வைக் குலகங்கள் யாவும்
விற்கத் தூண்டும் வியப்பே காதல்
பற்றும் மனதை பாகாய் இளக்கிப்
பசுமை விளைக்கும் பண்பே காதல்
முற்றும் துறந்திடு முனிவரர் முன்னும்
முடிவாய் முகிழ்க்கும் முனைப்பே காதல்
சுற்றிச் சுற்றித் தேடினேன் கானல்
சுனையாய் நீளத் தெரியுது காதல்!

—நிம்மதி

# மனிதனும் மடமும்

சத்தியசீலன் அருட்பிரகாசத்தாரைப் பார்த்து ஆவேசமாகப் பேசினான்.

'நீங்கள் உலகத்தைப் பேய்க்காட்டுகிறீர்கள். ஏக்கர்கணக்கில் நெல் வயல்களும் தென்னந்தோட்டங்களும் இந்த மடத்திற்குச் சொந்தமாக இருக்கின்றன. ஏதோ சாட்டுக்கு இரண்டு மூன்று வலது குறைந்தவர்களை வைத்துக்கொண்டு அனாதைகளைப் பராமரிக்கிறோம் என்று வெளி உலகத்திற்குக் கூறிக்கொண்டு இந்த மடத்தின் பேரால் சுக போகங்களை அனுபவித்துக் கொண்டு வாழ்கிறீர்கள். இவைகள் எத்தனை நாளைக்கு என்று பார்ப்போம்'—

என்று ஆவேசமாகக்கூறி முடித்தான்.

எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த மட நிர்வாகி அருட்பிரகாசத்தார் அமைதியாகச் சொன்னார்.

'தம்பி இப்படி எல்லாம் பேசக்கூடாது. இங்கு வாழ்க்கையில் நொந்து போனவர்கள் உறவினர்கள் சுற்றத்தாரால் கைவிடப்பட்டவர்களை பராமரிக்கிறோம். நாங்கள் அப்படி ஒன்றும் சுக போகத்தை அனுபவிக்கவில்லை' என்று கூறினார்.

அவரின் வார்த்தைகளைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் விறுக்கென்று அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்.

காலமாற்றம் அவன் கா[illegible]களை நறுக்கிவிட்டிருந்தது.

அவன் விபத்தொன்றில் கால்கள் இரண்டையும் இழந்தான். அவனுக்கிருந்த ஒரேயொரு உறவான அக்காவின் குடும்பத்திற்கு பாரமானான்.

அக்காவின் வீட்டில் தண்டச்சோறு அத்தானின் அர்ச்சனைகளுடன் சேர்ந்து அவனுக்குக் கிடைக்கும்.

ஒருநாள் அத்தானின் திட்டு உச்சக்கட்டத்தை அடைந்தது.

'நான் என் பிள்ளைகுட்டிகளையே பார்க்கமுடியாமல் திண்டாடிறன். இந்த இலட்சணத்தில் எனக்கு இது வேறு பாரம். ஏதாவது சத்திரம் [illegible] மயநதானே' என்று கத்தினார்.

அக்கா மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தாள். இயற்கையிலேயே தன்மான உணர்வுள்ள சத்தியசீலனால் பொறுக்கமுடியவில்லை. சமக்கட்டுக்குள் கட்டையைப் பொருத்தி விறுக்கென்று புறப்பட்டான்.

கால் போன போக்கில் போனவனுக்குத் திடீரென்று அருட்பிரகாசத்தாரின் நினைவு வந்தது. கூடவே அவரின் கனிவான பேச்சு பொறுமையான குணம் நினைவுக்கு வரவே மடத்தை நோக்கிப் புறப்பட்டான்.

அருட்பிரகாசத்தார் அவனை அமைதியாக வரவேற்றார்.

-செ. கதிர்காமநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதித்துறையில்
நாணயம்மிக்க நண்பன்
"ஷப்ரு"
207, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி சஞ்சிகை

Your Friend in Finance
SHABRA
61, New Bullers Road, Co-6.

15 - 07 - 1989 சனிக்கிழமை

# இந்திய-பாக். ஆயுதப் போட்டியால் உபகண்ட அமைதி சூழலையும் ஆபத்து

## இஸ்லாமபாத்தில் ராஜீவ்-பெனுஸிர் சந்திப்பு உருப்படியான பலனை அளிக்குமா?

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் பாகிஸ்தான் பிரதமர் பெனுஸிர் பூட்டோவும் எதிர்வரும் 16ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் சந்திக்கிறார்கள்.

இரு தலைவர்களுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்களில் இரு நாடுகளுக்'கும் இடையிலான பல்வேறு பிரச்சினைகள் விவாதிக்கப்படவுள்ளன.

உபகண்டத்தில் தற்போது உருவாகி வரும் ஆயுதப் போட்டியே இதில் முதன்மை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தான் பிரதமர் சமீபத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தபோது உபகண்டத்தில் ஆயுதப் போட்டி நிறுத்தப்படவேண்டும் என்று பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்திருந்தார்.

அமெரிக்காவினுலும் சோவியத் யூனியனுலும் இது முடியுமானுல் ஏன் இந்தியாவாலும் பாகிஸ்தானுலும் முடியாது? என்று அவர் கேள்வி எழுப்பி இருந்தார்.

### பிரெஞ்சுப் புரட்சி 200 ஆம் ஆண்டு நிறைவு

நேற்று 14 ஆம் திகதி பாரிஸில் நடைபெற ஏற்பாடாகி இருந்த பிரெஞ்சுப்புரட்சியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உலகத் தலைவர்களுடன் ராஜீவ் காந்தியும்- பெனுஸிர் பூட்டோவும் கலந்துகொள்ள இருந்தனர்.

உலக உலா
என்.பி.சிலன்

இதில் கலந்துகொண்டுவிட்டு பாரிஸில் இருந்து மாஸ்கோ மார்க்கமாக புதுடில்லி திரும்பும் வழியிலேயே ராஜீவ் காந்தி இஸ்லாமாபாத் சென்று பெனுஸிர் பூட்டோவைச் சந்திக்கிறார்.

1789 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி 14ஆம் லூயிமன்னனின் ஆட்சி பிரான்சில் கவிழ்க்கப்பட்டதே சரித்திரம் படைத்த பிரெஞ்சுப் புரட்சிஆகும்.

உலக நாடுகளில் முடியாட்சிக் கவிழ்ப்பின் ஆரம்பம் என்றும் இதனைச் சொல்லலாம்.

பிரான்ஸில் வரிக்கொடுமையைச் சகிக்கமுடியாத மக்கள் பிரபுக்களுக்கும், நிலச்சுவாந்தர்களுக்கும், மதப் புரோகிதர்களுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள். ஜூலை 14ஆம் திகதி பஸ்ரிலீ சிறை கைப்பற்றப்பட்டது. இச்சம்பவத்துடன் முடியாட்சி கவிழ்க்கப்பட்டது.

இத்தினத்தையே பிரெஞ்சு மக்கள் தமது தேசிய தினமாகத் தெரிவுசெய்து ஆண்டாண்டு கொண்டாடிவருகின்றனர்.

பிரெஞ்சுப் புரட்சி ஒரு சமூக விடுதலைப் புரட்சி என்பதால் அதன் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கிறது.

### "அக்கினி" ஏவுகணை

சமீபத்தில் இந்தியா தொடர்பாக பாகிஸ்தானுக்கு கலக்கத்தை ஏற்படுத்திய சம்பவங்கள் மூன்று.

★ ஒன்று ஸ்ரீலங்காவிலும் மாலைதீவிலும் உள்ள இந்தியப் படையினர்.

★ மற்றது நேபாளம் தொடர்பாக இந்தியா மேற்கொண்டுள்ள கடும் நடவடிக்கைகள்.

★ மூன்றுவது அக்னி ஏவுகணைப் பரீட்சை.



பெனுஸிர் பூட்டோ

ஸ்ரீலங்காவிலும் மாலைதீவிலும் உள்ள இந்தியப்படைகள் குறித்து பாகிஸ்தான் பெரிதாக விமர்சிக்காவிட்டாலும் பிராந்தியப் பொலீஸ் பாத்திரத்தை இந்தியா ஏற்றிருப்பதாக அது சந்தேகித்து வருகிறது.

இந்தியாவின் அடுத்த இலக்கு மொறிசியஸ், அல்லது சீஷெல்ஸ் என்று பாகிஸ்தான் சந்தேகிக்கிறது. மொறியஸும், சீஷெல்ஸும் உபகண்டத்தில் இருந்து சற்றுத் தூரத்தில் ஆபிரிக்கக் கண்டத்துக்கு சமீபமான நாடுகள் ஆகும். எனினும் இந்த நாடுகள் இரண்டும இந்தியச் செல்வாக்குககு உட்பட்டவை.

சுமார் 6 வாரங்களுக்கு முன்னர் இந்தியா தனது அக்னி (Agni) ஏவுகணையை வெற்றிகரமாகப் பரீட்சித்தது. அக்னி என்ற ஹிந்திச் சொல்லின் பொருள் 'நெருப்பு'

கல்கத்தாவுக்குத் தென்மேற்கு 125 மைல் தூரத்தில் உள்ள சண்டிப்பூர் ஏவுகணைத் தளத்தில் வைத்து அக்னி ஏவப்பட்டது. 620 மைல் தெற்கே திட்டமிட்டபடி இது கடலில் தரை இறங்கியது.

'அக்னி' ஆகக் கூடியது 1,500 மைல் தூரம் வரை செல்லக்கூடியது. தரையில் இருந்து தரைக்குப் பாயும் நடுத்தர ஏவுகணை வர்க்கத்தைச் சேர்ந்தது இது.

இந்தியாவில் இருந்து சீனு, பாகிஸ்தான் ஈரான் அல்லது சவூதி அரேபியாவை இதன் மூலம் தாக்கமுடியும். 2200 இருத்தல் பாரத்தை இது தூக்கிச் செல்லக் கூடியது. அணு ஆயுதம் ஒன்றை இதனுல் இலகுவில் தூக்கிச்செலல முடியும்.

### பாக். ஏவுகணைகள்

அக்னி ஏவுகணையை இந்தியா பரீட்சிப்பதற்கு முன்னர் கடந்த பெப்ரவரிமாதம் பாகிஸ்தான் இரு ஏவுகணைகளைப் பரீட்சித்திருந்தது. ஒன்றின் பெயர் HATF - 1 மற்றது HATF - 2.

இவை இரண்டும் முறையே 50 மைல் தூரமும் 186 மைல் தூரமும் செல்லக் கூடியவை.

இதற்கு முன் அதாவது கடந்த ஆண்டு பிரித்வி (Prithvi) என்ற ஏவுகணையை இந்தியா பரீட்சித்தது.

பிரித்வி என்ற ஹிந்திச் சொல்லின் பொருள் 'பூமி' பிரித்வி 150 தூரம் செல்லக் கூடியது.

அணுசக்தி விஞ்ஞானிகளால் கடந்த மாதம் வெளியிடப்பட்ட தகவல் அறிக்கையின்படி முன் எப்போதும் இல்லாதவாறு இந்தியாவும் பாகிஸ்தானும் அதி சக்தி சக்தி வாய்ந்த அணு ஆயுதத் திட்டங்களை வகுத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

### சீனு பயமுறுத்தல்

1962 ஆம் ஆண்டு குறுகிய கால யுத்தத்தில் சீனுவுடன் மோதிய இந்தியா சீனு தொடர்ந்து தனக்குப் பயமுறுத்தலாக இருந்து வருவதாகக் கருதுகிறது. அத்துடன் பாகிஸ்தானின் நட்பு நாடான சவூதி அரேபியாவுக்குச் சீனு 1988 ஆம் ஆண்டில் CSS - 2 ரக ஏவுகணைகளை விற்றதும் இந்தியாவைக் கவலை கொள்ளச் செய்துள்ளது.

CSS - 2 ரக ஏவுகணைகள் சவூதி அரேபியாவில் இருந்து இந்தியாவின் மேற்குக் கரையை சுலபமாக எட்டக் கூடியவை.



ராஜீவ் காந்தி

2000 ஆம் ஆண்டளவில் இப்படியான சிறிய நடுத்தர ஏவுகணைகளை உலகில், மேலும் 15 நாடுகள் புதிதாக வைத்திருக்கும் சாத்தியம் இருப்பதாக அ... ஆயுத நிபுணர்கள் கருதுகிறார்கள்.

### பிரச்சினையைத் தீர்க்க முயற்சி

சீன - இந்திய உறவுகளைச் சீரடையச் செய்யும் முயற்சிகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இந்திய வெளியுறவுச் செயலாளர் எஸ். கே. சிங் சமீபத்தில் சீனுவுக்கு விஜயம் செய்து சீனப் பிரதமர் லீ பெங் (Li Peng) வெளிவிவகார அமைச்சர் குயன் கிச்சென் (Qian Qichen) உட்பட முக்கிய தலைவர்களைச் சந்தித்திருந்தார்.

சர்வதேச அரங்கில் தற்போது உருவாகிவரும் சூழ்நிலையைப் பயன்படுத்தி சீன- இந்தியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது சாத்தியம் என்று நம்பப்படுகிறது.

### இந்தியா இராணுவப் பலம்

சோவியத் யூனியனுக்கும் சீனுவுக்கும் அமெரிக்காவுக்கும் அடுத்ததாகப் பெரிய இராணுவத்தை வைத்திருக்கும் நாடாக இந்தியா தற்போது கருதப்படுகிறது.

சோவியத் யூனியனின் ஆயுதப்படையில் 50 லட்சத்து 96 ஆயிரம் பேரும், சீன ஆயுதப்படையில் 32 லட்சம் பேரும், அமெரிக்க ஆயுதப் படையில் 21 லட்சத்து 63 ஆயிரத்து 200 பேரும், இந்திய ஆயுதப்படையில் 13 லட்சத்து 62 ஆயிரம் பேரும் உள்ளனர்.

### ஆயுதக் கொள்வனவு

அதே சமயம் இந்தியா வெளிநாடுகளில் இருந்து பெரும் அளவு ஆயுதங்களை வருடா வருடம் இறக்குமதி செய்து வருகிறது.

1987 ஆம் ஆண்டு மட்டும் இந்தியா 52 கோடி டாலர் பெறுமதியான ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தது.

யுத்தித்தில் ஈடுபட்டிருந்த சமயம் அதே ஆண்டு ஈரானும் - ஈராக்கும் கொள்வனவு செய்த ஆயுதங்களை விட இது அதிகம்.

அதே ஆண்டு பாகிஸ்தான் கொள்வனவு செய்த ஆயுதங்களைப் போல் இது 12 மடங்கு அதிகம்.

### கடற்படை

இந்தியா தனது கடற்படையின் பலத்தையும் முன் எப்போதும் இல்லாதவாறு அதிகரித்து வருகிறது.

1971 இல் இடம்பெற்ற பங்களாதேஷ் யுத்தமே இந்தியா தனது கடற்படைப் பலத்தை அதிகரிக்கக் காரணமாக அமைந்தது என்று கருதப்படுகிறது.

யுத்தம் ஆரம்பமாகி 14 தினங்களுள் கிழக்குப் பாகிஸ்தானை இந்தியா கைப்பற்றிய போது அப்போதைய அமெரிக்க ஜனுதிபதி ரிச்சர்ட் நிக்ஸன் அமெரிக்காவின் 'U. S. S. என்ரர்பிரைஸ்' விமானம் தாங்கிக் கப்பலை வங்களாவிரிகுடாப் பகுதிக்கு நகர்த்தி இருந்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான இந்திய இராணுவ நடவடிக்கை மேலும் தொடரக் கூடாது என அமெரிக்கா எச்சரிக்கும் விதத்தில் இது அமைந்திருந்தது.

பங்களாதேஷ் யுத்தம் நடந்து சுமார் 17 வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில் இந்தியா அணுஆயுத நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கும் அளவுக்கு கடற்படைப் பலத்தை அதிகரித்துள்ளது.

தற்போதைய நிலையில் இந்தியாவும் பாகிஸ்தானும் தொடர்ந்து ஆயுதப்போட்டியில் ஈடுபடுமானுல் உபகண்டத்தில் உள்ள சிறிய நாடுகளே அதனுல் அதிகம் பாதிக்கப்படும்ஆபத்து இருக்கிறது. ★

## சொற்சிலம்பம் இல:103

### சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சொக்கட்டான் 4. பூ 6. லட்சுமி 8. வடுகு 10. கடிதம் 12. காகம் 14. வசம்பு 15. ரதி 16. இனம் 17. அடம் 18. அணி 19. ஓவர் 20. தாய்

**மேலிருந்து கீழ்**

1. சொல்லதிகாரம் 2. கஞ்சுகம் 3. மடா 5. ஆடு 7. மிடி 8. வம்சம் 9. குருபூர்ணிமா 11. தவனம் 13. கதி 16. இடர் 17. அவள் 18. அம்

# இங்கிலாந்து நாட்டில் பிரபலமான டெஸ்ட் கிரிக்கெட் மைதானங்கள்

இங்கிலாந்திற்கு மூன்று மாத கால சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி ஆஷஸ் கிண்ணத்திற்காக ஆறு டெஸ்ட் போட்டிகளில் ஆடுவது தெரிந்ததே.

தற்பொழுது இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டிகள் நடைபெறும் இக்கோடை காலப் பகுதி ஏனைய கிரிக்கெட் விளையாடும் நாடுகளில் ஒய்வுகாலமாக விளங்குகின்றது.

ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்து அணியை எதிர்த்து ஆடும் முக்கியமான ஆறு மைதானங்கள் பற்றிய விவரம் வருமாறு;

### ஹெடிங்லி

இங்கிலாந்து நாட்டின் வடபாகத்தில் நடைபெறும் டெஸ்ட் போட்டிகள் இம் மைதானத்திலேயே அதிகமாக நடைபெறுவதுண்டு.

லீட்ஸ் என்னும் இடத்தில் அமைந்துள்ள இம் மைதானம் பல டெஸ்ட் வீரர்களை இங்கிலாந்து அணிக்கு அளித்துள்ள யோக்ஷியர் விளையாட்டுக்கழகத்திற்குச் சொந்தமானதாகும்.

அண்மைக் காலங்களில் இம்மைதானம் வேகப்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாகக் காணப்படுவதால் துடுப்பாட்ட வீரர்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இம் மைதானத்தில் இறுதியாக நடைபெற்ற 8 போட்டிகளிலும் ஓர் அணி வெற்றியீட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவற்றுள் 7 போட்டிகள் குறிப்பிட்ட தினத்துக்கு ஒன்று அல்லது இரண்டு தினங்கள் முன்னதாகவே முடிவடைந்துள்ளன.

தற்பொழுது பந்துவீச்சாளர்களுக்கு இம்மைதானம் சாதகமாக இருப்பினும் ஆஸ்திரேலிய வீரர் சேர். டொனுல்ட் பிறட்மன் இம் மைதானத்தில் ஆடிய நான்கு டெஸ்ட் போட்டிகளில் இரண்டு சதங்களையும், இரண்டு இரட்டைச் சதங்களையும் உள்ளடக்கிய 963 ஓட்டங்களைப் பெற்றுர் என்பது குறிப்பிடத்தக்கது.

### லோர்ட்ஸ்

லண்டன் நகரின் மையத்தில் அமைந்துள்ள இம் மைதானம் இங்கிலாந்திலுள்ள மைதானங்களுள் சிறந்ததாக விளங்குகின்றது.

மெரில்போன் கிரிக்கெட் கழகத்தின் பிறப்பிடமான இம் மைதானம் மிடில்செக்ஸ் விளையாட்டுக்கழகத்திற்குச் சொந்தமானது.

இங்கிலாந்து நாட்டு டெஸ்ட் கிரிக்கெட் சங்கக் காரியாலயம் இம்மைதானத்திலேயே அமைந்துள்ளது. வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அனுகூலமானது.

### எட்க்பாஸ்டன்

இங்கிலாந்தின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்கும் பேர்மிங்ஹாமில் அமைந்துள்ளது. வோவிக்ஷியர் விளையாட்டுக் கழகத்திற்குச் சொந்தமான இம் மைதானம் பல தொழிற்சாலைகளுக்கு அண்மையில் பச்சைப் பசேலென்ற சூழலில் அமைந்துள்ளது.

சுழல்பந்து வீச்சாளர்களுக்கும் துடுப்பாட்ட வீரர்களுக்கும் சாதகமாகக் காணப்படுகின்றது.

### ஓல்ட் டிரபோர்ட்

மன்செஸ்டர் என்னும் இடத்தில் அமைந்துள்ள இம் மைதானம் லங்கஷியர் விளையாட்டுக் கழகத்திற்குச் சொந்தமானது.

இங்கிலாந்தின் ஈரவலயத்தில் அமைந்துள்ள இம்மைதானத்தில் 1970 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற 12 போட்டிகளில் 2 போட்டிகள் மட்டுமே மழையினுல் பாதிக்கப்படாமல் நடைபெற்றது.

இம் மைதானத்திலேயே இங்கிலாந்து வீரர் ஜிம்லேகர் ஆஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் போட்டி ஒன்றில் 19 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி உலக சாதனையை நிலைநாட்டினுர். இச்சாதனை இதுவரை காலமும் முறியடிக்கப்படாது உள்ளது.

இம்மைதானம் சுழல்பந்து வீச்சாளர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

### ரெண்ட் பிறிட்ஜ

நொட்டிங்ஹாம் என்னும் இடத்தில் ட்ரெண்ட் நதிப் பக்கமாக அமைந்துள்ளது.

- மணிவண்ணன் -

நொட்டிங்ஹாம் ஷியர் விளையாட்டுக் கழகத்திற்குச் சொந்தமான இம் மைதானம் கடந்த ஆண்டு தனது 150 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது.

வேகப்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாகவுள்ள இம்மைதானத்தில் விறுவிறுப்பான போட்டிகள் மிக அரிதாகவே நடைபெறுவதுண்டு.

### ஒவல் மைதானம்

தேம்ஸ் நதிக்குத் தெற்குப் புறமாக அமைந்துள்ள இம் மைதானம் லண்டனில் அமைந்துள்ள இரண்டாவது மைதானமாகும். சறே விளையாட்டுக் கழகத்திற்குச் சொந்தமானது.

பொதுவாக ஒரு போட்டித் தொடரின் இறுதிப்போட்டி இம் மைதானத்திலேயே நடைபெறுவதுண்டு.

இங்கிலாந்தில் 1880 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி இம் மைதானத்திலேயே நடைபெற்றது. இங்கிலாந்தின் பழைமை வாய்ந்த மைதானம் இதுவாகும்.

இம் மைதானத்திலேயே இங்கிலாந்து வீரர் லென் ஹட்டன் 13 மணி 20 நிமிடங்கள் துடுப்பெடுத்து ஆடி உலக சாதனையான 364 ஓட்டங்களைப் பெற்றுர்.

ஆட்டமிழக்காமல் 365 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் இச்சாதனையை மேற்கிந்திய வீரர் சேர். காபீல்ட் சோபஸ் பின்னர் முறியடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹட்டன் பெற்ற 364 ஓட்டங்களுடன் அப்போட்டியில் ஏழு விக்கெட் இழப்பிறகு 903 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்து அணி ஆஸ்திரேலிய அணியை இன்னிங்சாலும் 579 ஓட்டங்களாலும் தோற்கடித்தது. (எ-6)

## டெஸ்ட் சரித்திரத்தில் இடம்பெற்ற வீரர்

★ லென் கட்டன் - இங்கிலாந்து வீரர். 1950 இல் ஓல்ட்ரபோட்டில் மேற்கிந்திய தீவு அணிக்கெதிரான போட்டியில் முதலாவது இனிங்சில் எச். எச். ஜோன்சன் வீசிய பந்திஞல் கையில் அடிபட்டு மைதானத்தில் இருந்து வெளியேறினுர். பின்னர் துடுப்பெடுத்தாடுவதற்காக மைதானத்தில் திரும்பவும் நுழைந்து ஒரு கையிஞலேயே தீரத்துடன் துடுப்பெடுத்தாடி முதலாவது இனிங்சில் 39 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் 46 ஓட்டங்களையும் பெற்றுர்.

★ பில் வுட்புல் - என்ற ஆஸ்திரேலிய வீரர் 1932 - 33 இல் அடிலயிட்டில் இங்கிலாந்துக்கெதிராக விளையாடும்போது இரண்டு முறை பந்திஞல் மோசமாகத் தாக்கப்பட்டார். ஆனுலும் இரண்டாவது இனிங்சில் தனது அணியின் ஆட்டத்தொடக்கத்திலிருந்து இறுதிவரை துடுப்பெடுத்தாடி 73 ஓட்டங்களைப் பெற்றுர். அணி பெற்ற ஓட்டங்கள் 193.

★ சுனில் கவாஸ்கர் - மேற்கிந்திய அணிக்கெதிராக போட் ஒவ் ஸ்பெயினில் 1970 - 71 இல் நடந்த போட்டியின்போது தாங்க முடியாத பல் வலியுடன் விளையாடினுர். தனக்கு சோம்பல்தனத்தை உருவாக்கிவிடும் என்பதற்காக வலி நிவாரணி மாத்திரைகளைக்கூட உள்ளெடுக்காமல் விளையாடிய இவர் முதலாவது இனிங்சில் 124 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் 220 ஓட்டங்களையும் பெற்றுர். இதுவே இவர் மேற்கிந்திய அணிக்கெதிராகப் பெற்ற அதிகூடிய ஓட்டங்களாகும்.

★ ஆஸ்திரேலிய வீரர் டெனிஸ் லில்லி-1972-73 இல் பாகிஸ்தான் அணிக்கெதிராக சிட்னியில் நடந்த போட்டியின்போது முள்ளந்தண்டு வலி காரணமாகப் பந்துவீசக் கூடாது என்று டாக்டர்களால் தடுக்கப்பட்டார். போட்டியின் கடைசிநாள் முழுதும் ஒரேயடியாகத் தொடர்ந்து பந்துவீசி அந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்கு வெற்றியை உறுதிப்படுத்தினுர்.

★ ரவர் பெயிலி - என்ற இங்கிலாந்து வீரர் 1956 - 57 இல் தென்னுபிரிக்க அணிக்கெதிராக டேபனில் நடந்த போட்டியில் தனது வலதுகை முறிந்த நிலையில் துடுப்பெடுத்தாடினுர். 57 நிமிடங்கள் ஆட்டமிழக்காமல் ஆடியதன் மூலம் அந்தப் போட்டியில் தனது அணியைத் தோல்வியிலிருந்து தடுத்தார்.

★ ராமகாந்தேசாய் என்ற இந்திய வீரர் 1967 - 68 இல் நியூசிலாந்துக்கெதிராக வெலிங்டனில் நடந்த போட்டியில் தாடையில் முறிவுற்றுர். தொடர்ந்து பேடி என்ற வீரருடன் சேர்ந்து 57 ஓட்டங்களைக் குவித்ததன் மூலம் இந்திய உபகண்டத்துக்கு வெளியே பெற்ற முதலாவது வெற்றிக்கு வித்திட்டார்.

★ நிக் மக்கூஸ்கர் என்ற ஆஸ்திரேலிய வீரர் 1977 இல் பொப் விலிஸ் வீசிய பந்திஞல் தாடை உடைந்தார். சளைக்காமல் றொட்னி மாசுடன் சேர்ந்து விளையாடிய இவர் ஆஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகட்கிடையில் நடந்த டெஸ்ட் போட்டிகளின் நூற்றுண்டு பூர்த்தியைக் குறிக்கும் போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு உதவினுர்.

★ எவேட்டன் வீக்ஸ் என்ற மேற்கிந்திய வீரர் 1951 இல் இங்கிலாந்துக்கு எதிராக லோட்ஸ்ஸில் நடந்த போட்டியில் முறிந்த விரலுடன் துடுப்பெடுத்தாடி 90 ஓட்டங்களைப் பெற்றுர்.

விளையாட்டுத் துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org